தமிழ்ச் சங்கம்

காரைக்குடி

தமிழ் மலர்

1974

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு — பாரதியார்.

தமிழ்ச் சங்கம்

காரைக்குடி

தமிழ் மலர்

1974

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு — பாரதியார்.

உள்ளுறை



நனிநன்றி

தமிழர்க்குத் தமிழ்த் தொண்டு என்பது பிறப்புத் தொண்டு. புகழ்த்தொண்டன்று; குடும்பம்போல் கடமைத் தொண்டு. இத் தொண்டு தமிழ்ப்பிறவி எடுத்த ஒவ்வொருவர்க்கும் உண்டு. நாட்டு வளத்தைக் கண்ணாடிபோல் மொழிவளம் காட்டும் என்ற உண்மையை நாம் உணர வேண்டும். மொழியைப் போற்றாது இகழ்வது உறுப்பினுள் சிறந்த விழியைப் போற்றாது குருடாவது போலும். ஆதலின் சமயப்பணி போல மொழிப்பணியையும் எண்ணித் தமிழ் மக்கள் மொழியறமும் மொழிக்குக் கொடையும் செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

மொழி என்பது ஒருவர்க்கொருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளும் சிறு கருவி என்ற கூற்று மிகப்பிழை. உலகில் எல்லாப் பொருளுமே கருவிகள்தாம். செல்வம் ஒரு கருவி, உடம்பும் ஒரு கருவி, கல்வியுங்கூட ஒரு கருவியே. உடம்பு என்ற கருவியை நோயுறாது எவ்வளவு செலவழித்துக் காக்கின்றோம், உடையாலும் பொன்னாலும் எவ்வளவு அழகுபடுத்துகின்றோம், உடல் என்ற கருவியை நலஞ்செய்ய எவ்வளவு மருத்துவமனைகள் உள, எவ்வளவு மருத்துவர்கள் உளர்? மானிட உடலுக்கு இவ்வளவு மதிப்பளிக்கும்போது, இந்த உடல் ஒன்றிலே மட்டும் பிறக்கக்கூடிய மொழிக்கு எவ்வளவு மதிப்பும் காப்பும் விழிப்பும் காட்டவேண்டும்?

மொழி வறுமை என்பது இன வறுமை, நாட்டு வறுமை, அறிவு வறுமை, முயற்சி வறுமை. மொழிவளம் என்பது இனவளம், நாட்டுவளம், முயற்சிவளம், அறிவுவளம். ஆதலின் தமிழ்ச் சங்கம் பல வறுமைக்கு அடிப்படையான மொழி வறுமையை அகற்றவும், பலவளத்துக்கு மூலப்பொருளான மொழி வளத்தைப் பெருக்கவும் குறிக்கோள் கொண்டுள்ளது.

எங்கள் சங்கக் குறிக்கோளில் ஒரு குறியாக இன்று முதலாவது தமிழ் மலரைத் தமிழன்னையின் திருவடியில் வைத்து வணங்குகின்றோம். தமிழன்பர்களின் கையிற் கொடுத்துக் கூப்புகின்றோம்.

இத் தமிழ் மலர் பலர்தம் கூட்டு முயற்சியின் வெளியீடு. மலருக்கு விளம்பரம் வழங்கிய நிறுவனங்கட்கும் நிறுவனர்கட்கும் தருநிதியுதவிய புரவலர்கட்கும் நல்லன்பர்கட்கும் தமிழ்த்தாயின் வாழ்த்தையும் எங்கள் நன்றியையும் ஒருங்கு புலப்படுத்திக் கொள்கின்றோம்.

சென்னை திரு. மு. சிவப்பிரகாசம் பி. ஏ. (ஆனர்சு); மகிபாலன்பட்டி இராம சேது, எம், ஏ., கரூர் தே. தேனப்பன், பி.ஏ. மதுரை, தணிக்கையாளர் திரு. பெரி. தியாகராசன், சி.ஏ; ஔவை டாக்டர் துரை. நடராசன் முதலான அன்பர்கள் விளம்பரம் பெற நற்றுணை புரிந்தவர்கள். இவர்கட்குச் சங்கம் என்றும் கடப்பாடுடையது.

மலேயாவில் தக்க நிதி பெறப் பல்லாற்றானும் துணைசெய்து வருபவரும் அருங்குணச் செல்வருமான தாப்பா நாக. ராம. இராமசாமி செட்டியார்க்கும், தமிழ்ப்பேரன்பர் ஈப்போ சி. சுப. சுப்பையா செட்டியார்க்கும் சங்கத்தின் உளமார்ந்த நன்றியுரித்து.

தமிழ் மலருக்கு இலக்கிய, சமயக் கட்டுரைகள் எழுதித் தந்த தமிழ்ப் பேராசிரியர்களின் துணை சங்க வளர்ச்சிக்கு என்றும் வேண்டும். எஞ்ஞான்றும் நல்லுதவி ஆற்றிவரும் இவ்வறிஞர்கட்குச் சங்கத்தின் பணிவார்ந்த நன்றி.

அண்ணாமலைநகர்ச் சிவகாமி அச்சகம் சிறந்து வளர்ந்து வரும் நல்லச்சகமாகும். சங்கத்தின் முதலாவது தமிழ் மலர் இவ்வச்சகத்தின்வழி வெளியிடப்படுவது ஒரு பெருமையாம். அச்சக நல்லுரிமையாளர்க்குச் சங்கம் நன்றி செலுத்துகின்றது.

சங்கத் தொண்டுக்கும் மலர் வெளியீட்டிற்கும் உதவிய எல்லார்க்கும் நன்றியோம்.

காரைக்குடி,
20—3—1974

வ. சுப. மாணிக்கம்
தலைவர், தமிழ்ச் சங்கம்

தமிழ்ச்சங்க வரலாறு

மா. அ. ஞானசேகரபாண்டியன்
சங்கச் செயலர்

தோற்றமும் நோக்கமும்

தமிழ்ச்சங்கம் காரைக்குடியில் 9—11—1969 தி. வ. ௨௲ ஐப்பசி ௨௪ ஆம் நாளில் தமிழன்பர்களால் தொடங்கப்பெற்றது. 1972இல் பதிவு செய்யப்பெற்றது. இச்சங்கம் காரைக்குடியில் நிறுவப்பெற்ற தாயினும் இஃது ஒரு பொதுச் சங்கமாகும். எங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவர்க்கும் தமிழ்ப்பணி செய்யும் விரிந்த குறிக்கோள் உடையது. தமிழ் அறிஞர்களோடு தொடர்பு கொள்வது மட்டும் அன்றித் தமிழ்ப் பொது மக்களோடும் தொடர்பு கொள்ளும் குடியரசுத் தன்மை கொண்டது. தமிழகத்து மக்களோடன்றி இந்தியப் பிற மாநிலங்களில் வாழும் தமிழ் மக்களோடும் அயல்நாடுகளில் வாழும் தமிழ் மக்களோடும் இயன்றளவு தமிழ் மொழி வழி உறவு கொள்ளும் விழைவு உடையது. பாரதியார் பாடிய வண்ணம் தமிழ் மொழியைக் காலத்திற்கேற்ற புத்துயிர் மொழியாக ஆக்கம் செய்யும் நோக்கமும் அதற்கேற்ப வேண்டிய புதுச்சொற்களைப் படைத்துப் பரப்பிப் பதியவைக்கும் நோக்கமும் தழுவியது.

பொழிவுகள்

இச்சங்கம் தொடக்கத்தில் திங்கள்தோறும் பெருப்புலவர்களை அழைத்துப் பலர்க்கும் விளங்கும் நிலையில் ஆராய்ச்சிச் சொற்பொழிவை நடத்தி வந்தது. 'சங்க இலக்கியம்' என்ற பொருள் பற்றிப் பன்னிரு பொழிவுகளும் 'சீவகசிந்தாமணி' என்னும் காப்பியம் குறித்துப் பன்னிரு பொழிவுகளும் நடந்தன.

முழு நூற்பரிசுகள்

பள்ளியிற் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இப்பொழுது நூல்களை முழுமையாகப் படிக்கும் வாய்ப்பு இல்லை. சிறு நூலாயினும் பெருநூலாயினும் முழுமையாகப் படித்தால்தான் நூல் வாங்கும் மனமும், அதனைப் போற்றும் விருப்பும், திரும்பத் திரும்பப் பார்க்கும் சொல்லழுத்தமும், பன்னூல் படிக்கும் அடிப்படையும் உண்டாகும். ஆதலின் தொடக்கப்பள்ளி மாணவர்கட்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, உலகநீதி முதலிய நூல்களையும், உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலான நூல்களையும் முழுமையாக வைத்து ஒப்பித்தல் போட்டிகள் நடத்திப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி வருகின்றது இச்சங்கம்.

அறிவியற் பரிசுகள்

வளர்ந்துவரும் இளைஞர்களிடைத் தமிழில் அறிவியலையும் அறிவியற்சொற்களையும் பரப்ப வேண்டும். அதுவே தமிழுக்கு எதிர்கால உரமாகும். வருங்காலத் தமிழகத்தில் அறிவியல் எழுத்தாளர்கள் தோன்றிப் பெருக வேண்டுமாயின், இளைஞர், இளைஞியர்கட்குத் தக்க மொழிப்பயிற்சி அளிக்க வேண்டும். இத்தகைய பயிற்சி கொடுப்பது இச்சங்கச் செயல்களுள் ஒன்று. ஆதலின் பயிரியல், விலங்கியல், நிலவியல், பூதவியல், வேதியல், கட்டடப் பொறியியல், மின் பொறியியல், இயந்திரப் பொறியியல், வேதிப்பொறியியல், வேளாண்மையியல் எனப் பத்துத் துறைகளிலும் அறிவியற் போட்டிகள் வைத்துத் தக்க பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி

வருகின்றோம். இப்போட்டிகளில் பி.சயி. மாணவர்களும் எம் சயி மாணவர்களும் ஆராய்ச்சி மாணவர்களும் பங்குகொள்ள முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது. மேலும் அவர்கட்கு ஊக்கந் தர வேண்டியும், நாடு அவர்களின் தமிழாற்றலை அறிய வேண்டியும் இக்கட்டுரைகளை ஒருங்கு தொகுத்து வெளியிடும் எண்ணமும் சங்கத்திற்கு உண்டு.

சொற்பொழிவு, முழுநூற் பயிற்சி அறிவியல் வளர்ச்சி என்ற இத்தொண்டு களோடு இன்னும் காலத்திற்குப் பொருந்திய தமிழ்த்தொண்டுகளை இச்சங்கம் மேற் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. மருத்துவம் முதலான பல்துறைகளில் இன்னும் போட்டிகள் பலவைத்து ஆக்கப் பரிசுகள் வழங்கவும் எண்ணி இருக்கிறது.

தமிழ்மலர்

மேற்குறித்த சங்கத்தின் தொண்டுகளும் திட்டங்களும் நிறைவேற நிதி வேண்டும் என்பது வெளிப்படை. பொதுத் தொண்டுக்குப் பொதுப் பொருள் வேண்டும். சங்க நிதிக்கு அன்பர் பலர் அவ்வப்போது உதவி வருப. உதவியின் அளவுக்குத் தகப் பணியளவு கூடும். பணி பெருக, நிதியும் பெருக வேண்டும் அல்லவா? பணி நோக்கமும் நிதி நோக்கமும் கொண்டு சங்கத்தின் சார்பாக முதலாவது தமிழ்மலர் ஒன்று வெளியிட எண்ணினோம். அவ்வெண்ணத்தின் நிறைவே இவ்வெளியீடு.

முதலாவது தமிழ்மலர் இன்று உங்கள் கைத்தாமரை மலராக விளங்குகின்றது. இம்மலர் தமிழ்ச்சங்கக் குளத்தில் பூத்த முதல் அறிவு மலராகும். இன்னும் நறுமலர் பூப்பத் தமிழ்த்தாய் திருவருள் செய்வாள்.

நாமகள் வாழ்த்து

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே.

— கவிமணி தேசிகவிநாயகம்.

தமிழ்ச்சங்கம் - செயற்குழு

பெரும்புரவலர் :

உயர்திரு. தி. மு. நாராயணசாமி பிள்ளை,

எம். ஏ., பி. எல்.

தலைவர் :

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

எம். ஏ. எம். ஓ.எல். பி. எச். டி.

துணைத்தலைவர் :

டாக்டர் இரா. சாரங்கபாணி

எம். ஏ. எம். லிட். பி. எச். டி.

செயலர் :

திரு. மா. அ. ஞானசேகரபாண்டியன்

செயற்குழு உறுப்பினர்கள் :

திரு. சி. செல்வத்தாண்டவன், எம். ஓ. எல்

திரு. லெ. அருணாசலம் செட்டியார்

திரு. சு. பழநியப்பன், பி. இ. எம். எசு.

திருமதி. ம. நீலாயதாட்சி

சங்கப் புரவலர்கள்

1. திரு. நா. ஆ. மாரிமுத்து, காரைக்குடி
2. திரு. ரெ. முத்துக்கணேசன், காரைக்குடி
3. திரு. பெரி. பஞ்சநதம் செட்டியார், காரைக்குடி
4. திரு. லெ. நாராயணன் செட்டியார், மதுரை
5. திரு. சா. லெ. நா. சாத்தப்ப செட்டியார், காரைக்குடி
6. திரு. செ. செல்லப்பன், மதுரை
7. திரு. தி. சுந்தரம் செட்டியார், மதுரை
8. திரு. அ. சொ. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி
9. சௌத் இந்தியா பிரசு, காரைக்குடி
10. திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியார், சென்னை
11. திரு. மு. ப. நா. முத்துக்கருப்பன் செட்டியார், கொப்பனாபட்டி
12. திரு. அண. அருணாசலம், சென்னை
13. திரு. நா. மகாலிங்கம், பொள்ளாச்சி
14. புலவர் வெ. சு. அழகப்பன், காரைக்குடி
15. திரு. வீர. சிவராமன், காரைக்குடி
16. டாக்டர் திருமதி. சுகுமாரன், காரைக்குடி
17. திரு. கரு. சி. அ. கருப்பன் செட்டியார், பூலாங்குறிச்சி
18. திரு. சி. இராம. நாகப்பன், மகிபாலன்பட்டி
19. திரு. சா. மு. ராம. அ. லெ. அருணாசலம் செட்டியார், கொத்தமங்கலம்
20. திரு. மு. திருப்பதி, புதுக்கோட்டை
21. திரு. அரு. நாராயணன் செட்டியார், காரைக்குடி
22. திரு. இராம. பெரியகருப்பன் செட்டியார், காரைக்குடி
23. திரு. வ. செ. சிவலிங்கம் செட்டியார், பூலாங்குறிச்சி
24. திரு. க. வெ. சித. வெ. சிதம்பரம், சென்னை
25. திரு. சேவு. அ. அண்ணாமலைச் செட்டியார், சென்னை
26. டாக்டர் வெ. தெ. மாணிக்கம், காரைக்குடி
27. திரு. ந. மு. நல்லப்பன், சேலம்
28. டாக்டர் கு. தாமோதரன், திருப்பதி
29. திரு. ராம. வீர. இராமசாமி செட்டியார், காரைக்குடி
30. புலவர் பெரி. ஆ. ஆண்டியப்பன், வேந்தன்பட்டி
31. திரு. அழ. அரு. சோமநாதன் செட்டியார், தேவகோட்டை
32. திரு ரெ. பாலசுப்பிரமணியம், சிதம்பரம்
33. டாக்டர் பெ. கோவிந்தன், அண்ணாமலைநகர்
34. நகரத்தார் இளைஞர் சங்கம், ஆத்தங்குடி, முத்துப்பட்டணம்
35. சிரம்பான் நகரத்தார்கள், மலேயா
36. திரு. மு. சொக்கலிங்கம், ஆனந்த கிரி, சென்னை

சங்க அன்பர்கள்

திரு. நா. பதுமநாபன் எம். ஏ.
திரு. நா. இராசகோபாலன், எம். ஏ., எம் ஈடி.
திரு. கி. நாராயணன் எம். ஏ.
திரு. சி. வேலு எம். ஏ.
திரு. ப. அரங்கநாதன் எம். ஏ
திருமதி. எம் ஏ. சுசிலா எம். ஏ.
திரு. மா. நன்னன் எம். ஏ.
திரு மெ. மெய்யப்பன் எம். ஏ.
திரு. கி. செம்பியன் எம். ஏ.
திரு. அருணகிரி எம். ஏ.
திருமதி. நா. மகரிபா எம். ஏ.
திரு பொ. அண்ணாமலை எம். ஏ.
திரு. சாசகான் எம். ஏ.
திரு. கே. மதிவாணன் எம். ஏ.
திரு. பீ. மு. மன்சூர் எம். ஏ.
திரு. இராமராசா எம். ஏ.
திருமதி. கலாதக்கர் எம். ஏ., பி. ஈடி
திரு. த. கனகராசன் எம். ஏ.
திரு. பெ. இராமசாமி பி. ஏ., பி. டி.
திரு. மா. கணேசன் எம். ஏ., பி. டி.
திரு. சே. கனகசபை பி. ஏ.
திரு. இராச. குழந்தைவேலன் எம். ஏ.
புலவர் அ. நா. மலையாண்டி
திரு. மு. இராமசாமி எம். ஏ.
திருமதி. இராணி எம். ஏ.
திரு. ச. சந்திரசேகரன் எம். ஏ.
திரு. வீ. சோணை எம். ஏ
திரு. மு. மாரியப்பன் எம். ஏ.
திரு. வை. சாத்தையா எம். ஏ.
செல்வி நாகரத்தினம் எம். ஏ.
செல்வி மு. இராசேசுவரி எம். ஏ.
டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியன்
திரு சீனிச்சாமி எம். ஏ.
டாக்டர் இரா. சாரங்கபாணி
செல்வி சாரதா எம், ஏ.
திரு. ந. சொக்கலிங்கம் எம். ஏ.
செல்வி. ஆறு. தயாபரசுந்தரி எம். ஏ.
திரு. இரா. அழகர்சாமி எம். ஏ.
திரு. மு. நிலாமணி எம். ஏ.
திரு. இரா. இளவரசு எம். ஏ.
திரு. கு. செ. இராமசாமி எம். ஏ.
திரு. மு. அப்துல் கரீம் எம். ஏ.
திரு. து. சண்முகம் எம். ஏ.
செல்வி ச. விமலா எம். ஏ.
திரு, பொ. சுந்தரமகாலிங்கம். எம். ஏ.
திரு. உ. பாலசுப்பிரமணியம் எம். ஏ.
செல்வி தி. கி. நாகாம்பாள் எம். ஏ.
திரு. செள. மதார் முகைதீன் எம், ஏ.
செல்வி இராதா எம். ஏ.
திரு. தே. லூர்து எம். ஏ.
திரு. முகமது அப்துல்காதர் எம். ஏ.
திரு. ஏ. சண்முகம் எம். ஏ.
திரு. ந. கோபாலன் எம். ஏ.
திரு. இரா. செயபாலன் எம். ஏ.
திரு. சபார் எம். ஏ.
திரு. விசு. பழனியப்பன் எம். ஏ.
புலவர் எழிலன்
டாக்டர் ப. செளந்தரம்
புலவர் கு. சங்கரன்
திரு. சி. வேங்கடபதி எம். ஏ.
டாக்டர் சோ. ந. கந்தசாமி

சங்கச் சொற்பொழிவாளர்கள்

1. சங்க இலக்கியம் – சொற்பொழிவுகள் 12
2. சீவகசிந்தாமணி – சொற்பொழிவுகள் 12

1. டாக்டர் க. ஆறுமுகம் - சங்க இலக்கியம்
2. டாக்டர் வ. சுப. மாணிக்கம் – 1) தொல்காப்பிய நாகரிகம்
   2) சங்க இலக்கிய உரையாடல்
   3) தொல்காப்பியமும் புறவாழ்க்கையும்
   4) சிந்தாமணியின் அமைப்பு
3. டாக்டர் சுப. அண்ணாமலை – சங்ககாலமக்களின் இறையுணர்வு
4. டாக்டர் இரா. சாரங்கபாணி – 1) சங்க இலக்கிய அறங்கள்
   2) சங்க இலக்கியத்தில் இயற்கை
   3) சீவகன்
   4) சிந்தாமணிக் கற்பனை
5. டாக்டர் மு. கோவிந்தசாமி – சங்க கால மகளிர்
6. டாக்டர் வெ. தெ. மாணிக்கம் – சங்க இலக்கியத்தில் மருதத்தின் மாண்பு
7. டாக்டர் தமிழண்ணல் – சங்க இலக்கிய உவமைகள்
8. டாக்டர் செ. வை. சண்முகம் – சங்க இலக்கிய மொழியமைப்பு
9. டாக்டர் மொ. அ. துரையரங்கன் - சங்ககாலச் சான்றோர்
10. பேராசிரியர் அ. மா. பரிமணம் – சிந்தாமணியும் உவமையும்
11. பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி - சிந்தாமணியும் இன்பச்சுவையும்
12. பேராசிரியர் ஔ. வெள்ளைவாரணம் – சிந்தாமணியும் சங்க இலக்கியமும்
13. பேராசிரியர் தி. வெ. கோபாலையர் – சிந்தாமணியும் இராமாயணமும்
14. பேராசிரியர் தி. இராமாநுசன் – சிந்தாமணி காப்பிய வழிகாட்டி
15. பேராசிரியர் ச. தண்டபாணிதேசிகர்– சிந்தாமணியும் நீதிகளும்
16. பேராசிரியர் மு. அபுதுல்கரீம் – கட்டியங்காரன்
17. பேராசிரியர் பா நமசிவாயம் – விசையை
18. பண்ணாராய்ச்சி வித்தகர்
   ப. சுந்தரேசன் – 1) சிந்தாமணியில் இசைப்பகுதி
   2) இயலும் இசையும்

பள்ளிப் போட்டிகள்

1972-ஆம் ஆண்டு பங்குபெற்ற மாணவ மாணவியர் தொகை 36.

பரிசு பெற்றவர் தொகை 16.

மூன்றும் நிலை

1. அ. பிரபா முதற்பரிசு
2. ச. செயகோமதி ,,
3. ச. புனிதா ,,
4. அ. சுப்பிரமணியம் ,,
5. கோ. அரிநாராயணன் ,,

} அழகப்பர் தொடக்கப்பள்ளி, காரைக்குடி

நான்காம் நிலை

1. ச. இராமதிலகம் முதற்பரிசு
2. பை. லதா ,,
3. ஆ. ஆரோக்கியசெல்வி ,,

} சாத்தப்பர் தொடக்கப்பள்ளி, சண்முகநாதபுரம்

4. என். சாந்தி முதற்பரிசு
5. ஆர். சுசீலா ,,

} அழகப்பர் தொடக்கப்பள்ளி, காரைக்குடி

ஐந்தாம் நிலை

1. செ. சேவுகன் முதற்பரிசு
2. பா. சித்திராலிங்கம் ,,
3. பா. இராசரத்தினம் ,,

} சாத்தப்பர் தொடக்கப்பள்ளி, சண்முகநாதபுரம்

4. ப. ரவி ,,
5. சிதம்பரவடிவு ,,

} அழகப்பர் தொடக்கப்பள்ளி, காரைக்குடி

1973-ஆம் ஆண்டு பங்குபெற்ற மாணவ மாணவியர் தொகை 119.

சான்றிதழ் பெற்றவர் தொகை 84

பரிசு பெற்றவர் தொகை 21

மூன்றும் நிலை

1. கோ. லதா முதற்பரிசு சௌமியா தொடக்கப்பள்ளி, காரைக்குடி
2. இல. செயலட்சுமி ,, சாத்தப்பர் தொடக்கப்பள்ளி, சண்முகநாதபுரம்
3. பா. பிரபாகரன் ,,
4. ச. பத்மா ,,
5. சீ. பத்மாவதி ,,

} அழகப்பர் தொடக்கப்பள்ளி, காரைக்குடி

6. சீ. அகிலா, ஆறுதல் பரிசு சிவன்கோவில் நகர் மன்றப்பள்ளி, காரைக்குடி
7. கு. பாலாசி ,, ,, ,,

நான்காம் நிலை

1. ரெ. திருமலை ,, சரசுவதி தொடக்கப்பள்ளி, காரைக்குடி
2. மு. சு. சிராசுமுகமது ,,
3. ச. செயகோமதி ,,
4. செ. புனிதா ,,

} அழகப்பர் தொடக்கப்பள்ளி, காரைக்குடி

5. ந கல்யாணி ,, சௌமியா தொடக்கப்பள்ளி, காரைக்குடி
6. ம. காந்திமதி, ஆறுதல் பரிசு சிவன்கோவில் நகர்மன்றத் தொடக்கப்பள்ளி, காரைக்குடி
7. தோ திரு. இராமன் ,, சாத்தப்பர் தொடக்கப்பள்ளி, சண்முகநாதபுரம்

ஐந்தாம் நிலை

1. மு. சு. நூர்முகமது முதற்பரிசு அழகப்பர் தொடக்கப்பள்ளி, காரைக்குடி
2. இல. கேசவன் ,, சாத்தப்பர் தொடக்கப்பள்ளி, சண்முகநாதபுரம்
3. மு. சோமசுந்தரம் ,, ,, ,,
4. சே. செயந்தி ,, சரசுவதி தொடக்கப்பள்ளி, காரைக்குடி
5. கா. இராசேசுவரி ,, சௌமியா தொடக்கப்பள்ளி, காரைக்குடி
6. சுந்தரம், ஆறுதல் பரிசு, முத்துப்பட்டினம் நகர்மன்றத் தொடக்கப்பள்ளி. காரைக்குடி
7. வெ. செல்வமீனாள், ஆறுதல் பரிசு, சிவன்கோவில் நகர்மன்றத் தொடக்கப்பள்ளி, காரைக்குடி

தமிழ்ப் பெயர்கள்

ஆண்பாற் பெயர்கள்	பெண்பாற் பெயர்கள்
அறவாழி	பசுங்கிளி
வளமலை	மின்னொளி
செம்மலை	காந்தள்
எழினி	வெண்ணிலா
பெருவிறல்	மாங்குயில்
வரிவில்	கருங்கூந்தல்
நாஞ்சில்	இளநாகு
நெஞ்சுரம்	பூஞ்சாரல்
சொல்முரசு	ஐம்பால்
கடும்பகடு	இளவேனில்
பெருவரை	முகிழ்நிலா
கழற்கால்	தீங்குழல்
அரிமா	நறுமடல்
தடக்கை	திருவில்
கலிமா	நாண்மலர்
கடுமான்	கலைக்கொடி
உறுபுலி	மடப்பிடி
பெருந்தோள்	மலைமயில்
அருந்திறல்	நறுமேனி
நெடுவரை	வளைக்கை

கல்லூரி பல்கலைக்கழக

அறிவியற் போட்டிப் பரிசுகள் 1972—73

பரிசினர்

1. பயிரியல் : முதற்பரிசு மா. பிரேமா,
எத்திராசு மகளிர் கல்லூரி, சென்னை

,, இரண்டாம் பரிசு, மு. இராமமூர்த்தி,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

2 விலங்கியல் : முதற்பரிசு சீனி. கிருட்டிணன்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்

,, இரண்டாம் பரிசு அ. முருகன்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்

3. நிலவியல் : முதற்பரிசு இல. வாசு.
மாநிலக் கல்லூரி, சென்னை

,, இரண்டாம் பரிசு வ. நாராயணசாமி,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்

4. பூதவியல் : முதற்பரிசு, தி. சசிகலா,
எத்திராசு மகளிர் கல்லூரி, சென்னை

,, இரண்டாம் பரிசு, பத்மினி வேதாசலம்,
எத்திராசு மகளிர் கல்லூரி, சென்னை

,, இரண்டாம் பரிசு, இரா. சானகி,
அவிநாசிலிங்கம் மனையியற் கல்லூரி, கோவை

5. வேதியல் : முதற்பரிசு மா. குறள்நாதன்,
வேளாண்மைக் கல்லூரி, கோவை

,, இரண்டாம் பரிசு, அரிபாபு,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

சான்றிதழினர்

1. பயிரியல் : கு. கலாவதி, எத்திராசு, மகளிர் கல்லூரி, சென்னை

2. நிலவியல் : க. பிரசாது,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்
ப. குமாரகுரு, மாநிலக் கல்லூரி, சென்னை

3. பூதவியல் : சிவ பக்தவத்சலம், தாகூர் கலைக் கல்லூர், புதுவை
இல. இராமதாசு, பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்

4. வேதியல் : சி. நாச்சியப்பன், அழகப்பா கல்லூரி, காரைக்குடி

தொல்காப்பியம்

வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப

அறிவியற் போட்டியின்
பல்துறை அறிவியல் தலைப்புக்கள்
1972 — 74

1. பயிரியல் (Botany)

1. பசுமைப் புரட்சி (Green revolution)
2. பாலைவன மரங்கள் (Xerophytes)
3. மனிதவுயிரும் மருந்துச் செடிகளும் (Human life and medical plants)
4. ஒளிச் சேர்க்கை பற்றிய இக்காலக் கருத்துக்கள் (Modern views on Photosynthesis)
5. குரோமோசோம் மரபுரிமைக் கொள்கை (Chromosome Theory of Heredity)
6. இக்காலச் செடிவளர்ப்பு முறைகள் (Modern methods of Plant Breeding)

2. விலங்கியல் (Zoology)

1. வனவிலங்குக் காப்பு (Wild Life conservation)
2. இந்தியவழியில் விலங்கினத்தின் பங்கு (Role of animals in Indian Heritage)
3. பூச்சியினத்தின் பொருளாதார முதன்மை (Economic importance of Insects)
4. வீட்டு விலங்குகளின் பிறப்புரிமையியல் (Genetics of Domestic Animals)
5. மீன் வளர்ப்பும் அதன் சிறப்பும் (Fish culture and its importance)
6. விலங்குகளின் சமூக வாழ்க்கை (Social behaviour in animals)

3. நிலவியல் (Geology)

1. தமிழகத்துக் கனிவளம் (Mineral wealth of Tamil Nadu)
2. புதை படிவங்களின் காப்பு முறையும் பயனும் (Fossils-their modes of preservation and the use)
3. நிலநடுக்கம்-அதன் காரணங்களும் விளைவுகளும் (Earthquakes-its causes and effects)
4. ஊற்றுக்கள் (Springs)
5. நிலக்கரி (Coal)
6. பழங்கால அரக்க விலங்குகள் (Giant reptiles of the past)

4. பூதவியல் (Physics)

1. அணுவின் காலம் (Atomic age)
2. விண்வெளி ஆய்வு (Space travel)
3. நோபல் பரிசுபெற்ற ஓர் அறிவியலறிஞரின் ஆராய்ச்சி
4. நொதுமம் (Neutron)
5. கீழ்ச் சிவப்பும் அதன் பயன்களும் (Infra red and its applications)
6. பாபாவும் பாரத நாட்டுக்கு அவர் செய்த பணியும் (Homi Bhaba and his contribution to India)

5. வேதியல் (Chemistry)

1. வேதியலும் வேளாண்மையும் (The role of Chemistry in agriculture)
2. செயற்கை நார்கள் (Synthetic fibres)
3. புறவேற்றுமை உருவங்கள் (Allotropic modifications)

4. வேகமாற்றிகளும் அவற்றின் பயன்களும் (Catalysts and their applications)
5. மருத்துவத்தில் வேதியல் (Chemistry in medicine)
6. நாள்வாழ்க்கையில் வேதியல் (Chemistry in every day life)

6. கட்டடப் பொறியியல் (*Civil Engineering*)

1. கங்கை காவிரி இணைப்புத்திட்டம் (Ganges and Cauvery Project)
2. நில அதிர்ச்சியும் அதனைத் தடுக்கும் முறைகளும் (Earthquake and its prevention)
3. சேரியொழிப்பும் மலிவு வீட்டுக் கட்டுமானப் புதுமுறைகளும் (Slum clearance and modern methods in the construction of cheap houses)

7 இயந்திரப் பொறியியல் (*Mechanical Engineering*)

1. எரிபொருள் தட்டுப்பாடும் அதனைப் போக்குதற்குரிய வழி முறைகளும் (Fuel crisis and ways and means of getting it over)
2. காற்றுத்தடுப்பும் அதனைத் தடுக்கும் முறைகளும் (Air pollution and its prevention)
3. அணுக்காலமும் அணுவாற்றற் பயன்பாட்டில் நம் நாட்டின் நிலையும் (Nuclear age and the position of our country in nuclear energy utilization)

8. மின் பொறியியல் (*Electrical Engineering*)

1. இக்காலத் தொழில் நுட்பத்துறையிலும் சமுதாயத்திலும் விரைவுகணித இயந்திரத்தின் விளைவுகள் (The impact of computer on modern technology and society)
2. இக்கால நாகரிகத்தில் மின்னாற்றலின் விளைவு (The role of electrical power in modern civilisation)
3. தொழில் இயலிலும் அதன் வேலைவாய்ப்பிலும் தானியங்கி முறைகளின் விளைவுகள் The effect of automation on industry and employment)

9. வேதிப் பொறியியல்

1. கச்சா எண்ணெய்க் கண்டு பிடிப்பும் அதன் தூய்மைப்பாடும் (Crude oil exploration and its refiner)
2. புதிய உரங்களும் அதனால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளும் Modern fertilizers and their impact on society)
3. பிளாசுடிக்குத் தொழில்கள் (Plastics industries)

10. வேளாண்மையியல் (*Agriculture*)

1. மிகு விளைச்சல்தரும் பயிர்வகைகளும், அவை வேளாண்மையில் விளைவித்த புதுமைகளும் (High yielding varieties and the new trends in the wake in agriculture)
2. தமிழ் நாட்டின் இயந்திர சாகுபடியின் எதிர்காலம் (The future of mechanized agriculture in Tamil Nadu)
3. தமிழ் நாட்டில் காய்கறி விளைச்சலைப் பெருக்குதற்கு வழியும் வகையும் (Ways and means of increasing vegetable production in Tamil Nadu)

தமிழ் இலக்கிய வரலாறு

டாக்டர் இரா. சாரங்கபாணி
தமிழ்ப்பேராசிரியர் அழகப்பா கல்லூரி

தொல்காப்பியம்

தொல்காப்பியமே இன்று கிடைக்கும் தொன்மையான நூலாகும். இதன்காலம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு என்பர். இதற்கு முன் பல இலக்கிய இலக்கண நூல்கள் இருந்தன என்பதற்குத் தொல்காப்பியத்தில் அகச் சான்றுகள் இருப்பினும் அவை கிடைத்தில. ஆகவே 2500 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த தமிழர் தம் பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் முறை முதலியவற்றை உணர்த்தும் ஒப்பற்ற கருவூலமாகத் திகழ்வது தொல்காப்பியமே. அஃது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களை உடையது. முதலதிகாரம் எழுத்தின் இலக்கணம், எழுத்தின் இயல்பு, எழுத்தின் பிறப்பு, சொற்புணர்ச்சி முதலியவற்றைக் கூறும். இரண்டாம் அதிகாரம் சொற்றொடர் அமைப்பு, பெயர், வினை, இடை, உரி என்னும் சொற்களின் இயல்பு, வேற்றுமை உருபுகள் முதலியவற்றை உணர்த்தும். மூன்றாம் அதிகாரம் தமிழர்தம் வாழ்க்கை முறையை விரித்துக்கூறும். காதல், கற்பு வாழ்க்கை முறைகள், வீர வாழ்க்கை, யாப்பு வகை, உவமையணி, மெய்ப்பாட்டு வகை, வழக்கின் மரபு ஆகியவை பொருளதிகாரத்தில் இடம் பெறுகின்றன. பின்னால் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகை இலக்கணம் தோன்றியதற்குத் தொல்காப்பியமே அடிப்படையாகத் திகழ்வது.

சங்க இலக்கியம்

சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் தொல்காப்பிய அடிப்படையில் அகம் புறம் எனப் பாகுபாடு செய்யப்பட்டன. சங்க காலம் என்பது கி. மு. முதல் நூற்றாண்டாகும் என்பர். அகம் புறம் தழுவிய பல அடிகள் கொண்ட பத்து நெடும் பாடல்கள் பத்துப் பாட்டு எனப் பெயர் பெற்றன. கலிப்பாவால் இயன்ற அகப்பாக்களின் தொகுதி கலித்தொகை யாயிற்று. பரிபாடல் என்னும் இசைப் பாடல்களின் தொகுப்பு பரிபாடல் என்று பெயர் பெற்றது. ஐந்து திணை பற்றி நூறு நூறு பாடல்களால் அமைந்த நூல் ஐங்குறு நூறு ஆகும். ஆசிரியப் பாக்களால் அமைந்த புறப் பாடல்கள் புறநானூறு என்றும் சேர மன்னர் குறித்துப் பத்துப் பத்தாகப் பாடிய நூல் பதிற்றுப்பத்து என்றும் பெயர் பெற்றன ஏனை அகத்திணை தழுவிய அகப் பாடல்களை அடியளவைக் கொண்டு குறுந்தொகை, நற்றிணை, நெடுந்தொகை (அக நானூறு) என்று தொகுத்தனர். இவ்வக இலக்கியங்கள் தமிழர் தம் வாழ்வைப் புலனெறி வழக்கில் சுவைபடச் சித்திரிக்கின்றன. சங்கப் புலவர்களெல்லாம் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை நடத்தியவர்களாதலின் காடு, மலை, வயல், கடல் முதலிய இயற்கைப் புனைவுகளைத் துணையாகக் கொண்டு பல வாழ்க்கை உணர்வுகளைப் புலப்படுத்தியுள்ளனர். அகப் பாடல்கள் எல்லாம் வெறும் உறுப்புப் புனைவையும் காம உணர்ச்சியையும் மிகுத்துக் கூறும் பாடல்கள் அல்ல. மக்களின் வாழ்க்கைக் கூறுகளை நுனித்தாய்ந்து பல்வேறு மனநிலைகளை எடுத்துக் காட்டி வாழ்வைத் தூய்மைப்படுத்தும் செந்நெறிப்பாக்கள் ஆகும். கருப்பொருள்களின் துணைக்கொண்டே உள்

ளுறை அமைத்து அறமுணர்த்தும் நுட்பத்தினையும் சங்க அகப் பாடல்களிற் காணலாம்.

வேந்தர்கள், குறுநில மன்னர்கள், புலவர்கள், பாணர்கள் முதலியோரின் வாழ்க்கை நிலையைச் சங்கப் பாடல்கள் உணர்த்துகின்றன. வறியவர் ஒருவரைச் செல்வரிடம் ஆற்றுப்படுத்தும் வகையில் எழுந்த ஆற்றுப்படை நூல்கள் தமிழக வளத்தினையும், விருந்தோம்பும் பண்பினையும், புலவர், பாணர் கூத்தர்பால் புரவலர்கள் கொண்டிருந்த அன்பினையும் அறிவிக்கும். புறப்பாடல்களால் சங்க கால மக்களின் மறவுணர்வையும் மறத்திலும் அறத்தைப் பின்பற்றியதையும் புலவர்களின் ஈர நெஞ்சத்தையும் கைவண்மையையும் தெளிவாக அறியலாம். யாதும் ஊரே யாவரும் கேளிர் போன்ற உயரிய அறக்கோட்பாடுகளை உணர்த்தும் பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. பரிபாடல் தமிழர் தம் சமயப்பொறையினையும் சமயக் கோட்பாடுகளையும் தெள்ளிதின் காட்டுகின்றது. சங்க இலக்கியம் இவ்வாறு தமிழர் தம் பல்வகைப் பண்பு நலங்களையும் காட்டும் கருவூலமாகத் திகழ்கின்றது.

காப்பிய இலக்கியம்

சங்க இலக்கிய காலத்தை அடுத்துப் பலகாப்பியங்கள் எழுந்தன. தனிப் பாடல்கள் பாடும் போக்கை மாற்றிக் கதை தழுவிக் காப்பியம் புனைய பட்டது. இளங்கோவடிகள் புனைந்த சிலப்பதிகாரம் தமிழின் முதற்காப்பியம் ஆகும். தம் காப்பியத்தில் பலவகை நாட்டுப் பாடல்களைக் கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை முதலிய இசைப்பாடல்களைத் தழுவி நாடகப்போக்கில் தம் காப்பியத்தை அமைத்தமையால் முத்தமிழ்க் காப்பியம் என இளங்கோவடிகளின் காப்பியம் பெயர் பெற்றது. ஒருமைப் பாடு கருதி மூவேந்தர்களையும் ஒருசேரப் புகழ்ந்துள்ளார். கற்புநெறியைத் தெய்வ நெறியாக உயர்த்திப் பல அறக்கருத்துக்களைச் சமயப் பொறையோடு இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார்.

மணிமேகலையைச் சீத்தலைச்சாத்தனார் பௌத்தத்தைப் பரப்பும் நோக்கோடு பாடியிருந்தாலும், பசியொழிப்பு, பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு,சாதியொழிப்பு என்ற அறங்களே இக்காப்பியத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

நீதியிலக்கியம்

கி. பி. மூன்றும் நாலாம் நூற்றூண்டுகள் தமிழகம் அரசு சிதைந்த காலம் ஆகும். களப்பிரர் எனப்பட்ட குறுநில மன்னர்கள் ஆண்டனர். இக்காலத்தில் சிறந்த இலக்கியங்கள் தோன்றவில்லை எனக் கருதுகின்றனர் பின்பு பல அற நூல்கள் தோன்றலாயின. இவை பதினெண் கீழ்க் கணக்கு என வழங்கப் பெற்றன. நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய நூல்கள் சமணரால் இயற்றப் பெற்றவை இவை பொதுவான அறங்களைக் கூறினாலும் சமணர் கருத்துக்களை வலியுறுத்தவே எழுந்தவை. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தலைமணியாகத் திகழ்வது திருக்குறள். எல்லா நாட்டார்க்கும் எல்லாக் காலத்துக்கும் எல்லா நிலையினர்க்கும் பொருந்தும் வகையில் எளிய நடையில் அரியகருத்துக்களைத் திருவள்ளுவர் தம் குறளில் கூறியிருத்தலின் அது உலகத்தமிழ் நூலாக இலங்குகின்றது.

பாசுர இலக்கியம்

களப்பிரர் காலத்திற்குப் பின் சமண சமயச் செல்வாக்கு ஏற்பட்டு அச்சமயம் செழித்து வளரத் தொடங்கியது. திருத்தக்க தேவர் சிந்தாமணி என்னும் காப்பியத்தை இன்பச்சுவை மிளிரப் புதுப் போக்கிலே விருத்தப்பாவினல் இயற்றினார். அதனை யொட்டியே பிற்காலத்தில் பெரியபுராணம் கம்பராமாயணம் முதலிய சிறந்த காப்பியங்கள் எழலாயின. சமண் சமயச் சார்பினல் மக்கள் மத மாற்றம் அடைவது கண்டு பக்தி இயக்கம் தோன்றிற்று. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பிரபந்தங்களாலும் தேவாரங்களாலும் மக்களை ஈர்த்துப் பத்திப் பெருக்

கில் மூழ்கச் செய்தனர். காதலன் காதலி யாகப் பாடும் அகப்பாடல் நெறி கடவுட் பாடலிலும் தொடர்ந்தது. தலைவனாக இறைவனை வைத்துத் தம்மைத் தலைவி யாராகக் கருதி அடியார்கள் பல பாக்கள் பாடினர். பண்டு அரசனுக்கிருந்த செல் வாக்கெல்லாம் கடவுளுக்குரியவாயின. மன்னனுக்குத் துயிலெடைநிலை பாடியது போய், கடவுளுக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடும் நிலை வந்தது. அரசன் பிறந்தநாள் விழாவைப் போலக் கடவு ளுக்குப் பல திருவிழாக்கள் நடத்தினர். இங்ஙனம் இடைக் காலம் சமயம் செழிக் கக் காரணமாயிருந்தமையின் பலதோத் திரப் பாடல்கள் உருக்கொள்ள வாய்ப்பு இருந்தது.

பிரபந்த இலக்கியம்

கோவை பரணி கலம்பகம் உலா பிள்ளைத்தமிழ் முதலிய 96வகை பிரபந்த நூல்கள் இடைக்காலத்துத் தோன்றின. இவை தலைமக்களின் அல்லது கடவுளின் அரும் பெருஞ் செயல்களை விரித்துக் கூறுவன. இப்பிரபந்த காலத்தில் பெரு நூல்கள் எழவில்லை பின் அச்சுப்பொறி வந்ததும் பலவகை உரைநடை நூல்கள் எழலாயின. அக்காலத்தே மகா வித்து வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பலதல புராணங்கள் பாடினார். இராமலிங்க அடிகளாரின் அருட்பா, வேதநாயகம் பிள்ளையின் நீதி நூல், கிருட்டினப்பிள்ளை யின் இரட்சண்ய யாத்திரிகம், வீரமா முனிவரின் தேம்பாவணி, உமறுப் புலவரின் சீறாப்புராணம் ஆகிய இலக்கிய நூல்கள் பிற்காலத்தில் தோன்றித் தமிழன்னையை அணி செய்தன.

பல்துறை இலக்கியம்

இருபதாம் நூற்றாண்டில் திறனாய்வு நூல்கள், நாடக நூல்கள், புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள் முதலிய பல துறை நூல்கள் தோன்றித் தமிழை வளப் படுத்தியுள்ளன. ஆறுமுகநாவலர் விபுலா நந்தர் போன்ற யாழ்ப்பாணப் பெருமக் கள் நல்ல உரைநடை நூல்கள் எழுதித் தமிழுக்கு ஆக்கந் தந்தனர் திறனாய்வு முறையில் பல இலக்கிய விளக்கங்கள் செய்து நூல்கள் வெளியிடப்பட்டுள. மறைமலையடிகளின் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, மு. வ. வின் ஓவச்செய்தி, வ. சுப. மா. வின் வள்ளுவம் முதலிய நூல்கள் நல்ல இலக்கிய விளக்க நூல் களாகும். அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியம், சம்பந்த முதலியாரின் சபாபதி நாடகம், பண்டித மணியின் மண்ணியல் சிறுதேர், பரிதிமாற்கலைஞரின் நாடகங்கள் எல்லாம் நாடகத்தமிழ் வளர்ச்சியைக் காட்டுவன.

கல்கி சாண்டில்யன் அகிலன் முத லியோர் வரலாற்றுப் புதினங்கள் படைத் துள்ளனர். நாட்டின் நடப்பையும் சமூக மக்களின் பல்வகை வாழ்க்கை நிலையை யும் சித்திரித்து அகிலன், கோ. வி மணிசேகரன், வ. ரா, செகசிற்பியன், மு.வ, செயகாந்தன், கல்கி, சானகிராமன், அண்ணா ஆகியோர் புதினங்கள் எழுதி யுள்ளனர் சிறு கதைகளில் வாழ்க்கைக் கூறுகளை வெளிப்படுத்திய சிறந்த எழுத் தாளர்கள் புதுமைப்பித்தன், விந்தன், கு ப ரா, கல்கி, கி. வா. ச, செயகாந்தன் முதலியோராவர். பாரதி, பாரதிதாசன் ஆகியோர் பரம்பரையில் கவிஞர் பலர் தோன்றி எழுச்சிதரும் கவிதைகளைப் புனைந்து வருகின்றனர். வாணி தாசன், முடியரசன், கண்ணதாசன் முதலியோர் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவராவர்.

எத்துறையில் தமிழ் உயர்ந்து வளர்ந் தாலும் மக்களைத் தம் நிலையில் உயர்த்தும் வகையில் அஃது உதவுதல் வேண்டும். ஆனால் இக்கால எழுத்தாளர் சிலர் சமுதாயம் எதனை எனக்குக்காட்டுறதோ அதனை விரித்தெழுதி மக்களுக்குக் காட்டுவேன் என்று கூறிக்கொண்டு சமு தாய இழிநிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர். தீமையை விலக்கி நல்லதை விரித்து மக்களுக்குக் கவிதை வழியிலோ சிறுகதை, புதினம், நாட கங்கள் வழியிலோ காட்டினால்தான் மக்கள் உயர்வெய்துதல் கூடும். பண்பினை உயர்த்தும் வகையில் எழுத்துப் பணி மக்களுக்கு வழிகாட்டினால் அதுவே நாடு சிறக்கவும் நம் வழியினர் சிறக்கம் உதவும்.

சைவ நெறி

திரு. ச. வெள்ளைவாரணனர்
துணைத்தமிழ்ப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

எல்லா வுலகிற்கும் எவ்வுயிர்க்கும் இறைவனாகிய கடவுளைச் சிவன் என்னும் திருப்பெயராற் போற்றிவழிபடும் சமய நெறி சைவம் என்பதாகும். "சைவம்சிவனுடன் சம்பந்தமாவது" (திருமந்திரம் 1512) என்றார் திருமூலர். உயிர்களைச் சிவனாகிய இறைவனுடன் தொடர்பு படுத்தி இசைவிக்கும் ஒழுக்கநெறி சைவம் என்பது இத்திரு மந்திரத்தாற் புலனாகும்.

சிவனை வழிபடும் சிவநெறி இந்நாட்டிற் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தோன்றி வழங்கும் தொன்மை வாய்ந்ததாயினும், இந்நெறியைக் குறித்து வழங்கப் பெறும் சைவம் என்ற பெயர் சங்கத் தொகை நூல்களிற் காணப்பெற்றிலது. இறைவனைக் குறித்த சிவம் என்ற பெயரும் அதனடியாகப் பிறந்த சைவம் என்ற பெயரும் வேத உபநிடதங்களிற் காணப்பெறுகின்றன. வீடு பேற்றுநிலையைக் குறிக்கும் 'சிவகதி' என்பதும், சிவ' என்பதனை முதலாகக் கொண்டு அருமறைகளிற் போற்றப் பெறும் திருவைந்தெழுத்தாகிய பஞ்சாக்கர மந்திரமும், சிவனுக்குரிய சங்கரன் ஈசன் முதலிய திருப்பெயர் களும் இளங்கோவடிகளாற் சிலப்பதிகாரத்திற் குறிக்கப் பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்தையடுத்துத் தோன்றிய செந்தமிழ்க் காப்பிய மாகிய மணிமேகலையில் சிவநெறி சைவம் என்ற பெயராலேயே சிறப்பாகக் குறிக்கப்பெற்றுளது.

பண்டைத் தமிழர் உயிர்க்குயிராய்ச் சிறந்த முழுமுதற் பொருளைச் சிறந்தது, செம்பொருள் எனச் சிறப்பித்துப் போற்றியுள்ளார்கள். சிவம்என்ற சொல் செம்பொருள் என்ற பொருளிலேயே இறைவனைக் குறித்து வழங்குகின்றது. "செம்பொருள் காண்பதறிவு" எனத் திருவள்ளுவர் கூறியதனை அடியொற்றிச் "செம்பொருளான் சிவமெனலாமே" (திருமந்-2573) எனத் திருமூல தேவரும், 'செம்மையே யாய சிவபதம்' எனத் திருவாதவூரடிகளும் அருளிய பொருளுரைகள் சிவம் என்ற சொல் செம்பொருள் என்ற பொருளில் முழுமுதற் கடவுளுக்கு வழங்கும் திருப்பெயராதலை நன்கு புலப்படுத்துவன.

சிவன்

பண்டைத் தமிழர்கள் இறைவனை ஒளியுருவினனாகப் போற்றினர். விடியற் காலையிற் பொன்னை உருக்கி வார்த்தாற் போன்று நீலக்கடல்மீது தோன்றும் செஞ்ஞாயிற்றைச் சேயோனாகிய முருகனது திருமேனி யொளிக்கு ஒப்பாகத் திருமுருகாற்றுப்படை கூறுவதும், கதிரவன் கடலில் மறையும் மாலைக் காலத்து வான் முழுதும் பரவி மீதெழுந்த செக்கர் ஒளியினைச் சிவபெருமான் திருமேனிக்குப் பெருந் தேவனார் உவமை கூறுவதும் இறைவனைச் செந்நிறம் வாய்ந்த திருமேனியை யுடையவனாகப் பண்டையோர் கருதிப் போற்றிய திறத்தினைக் குறிப்பனவாம் நம்முன்னோர் செம்மேனியான் என்ற கருத்தில் இறைவனைச் சிவன் எனப் போற்றினர் என்பது,

"சிவனெனு நாமந் தனக்கேயுடைய
செம்மேனி எம்மான்"

எனத் திருநாவுக்கரசரும்.

"செம்மேனிப் பேராளன் வானோர் பிரான்"

எனக் காரைக்காலம்மையாரும் பரவிப் போற்றுதலால் இனிது விளங்கும்.

செம்பொருளாகிய சிவபரம் பொருளுக்குச் சங்க காலத்திலும் அதற்கு முன்னரும் இறைவன் கடவுள் பெரியோன் என்னுந் திருப்பெயர்களே பெருக வழங்கின எனத் தெரிகிறது. 'காரியுண்டிக் கடவுள்' என மலைபடு கடாத்திலும் 'இறையோன்' பிறவா யாக்கைப் பெரியோன்' எனச் சிலப்பதிகாரத்திலும், 'நுதல்விழி நாட்டத் திறையோன்' என மணிமேகலையிலும் சிவபெருமான் போற்றப்பெற்றுள்ளமை காணலாம்.

முப்பொருள்

கடவுள், உயிர், உலகம் என்னும் இம் மூன்றும் உள்பொருள்கள். இவற்றுள் கடவுள் என்பது உயிர்களோடும் உலகத்தோடும் நீக்கமறக்கலந்து அவற்றை இயக்கிநிற்கும் பேரறிவுப்பொருள். இது பற்றி இயவுள் எனவும் வழங்கப்பெறும். உயிர் உணருந்தன்மையுடைய அறிவுடைப்பொருள். ஆயினும் ஆணவம் கன்மம் மாயை என்னும் மூவகைக் கட்டுக்களாற் பிணிக்கப்பட்டுத் தானேயுணருந் தன்மையின்றிப் பிறர் உணர்த்த உணருந் தன்மை யினதாகும். உலகம் என்பது, உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத வேண்டப் பெறும் உடல் பொறி நிலம் நுகர்பொருள்களாய் மாயை என்னும் சடப்பொருளிலிருந்து இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளாகும். இறைவன் ஒருவன், உயிர்கள் பல என்பது சைவசமயத்தின் தத்துவக் கொள்கையாகும்.

உலகின் புறத்தே பொருள்களை மறைத்துள்ள இருளைப் போன்று உயிர்களின் அறிவை அநாதியே மறைத்து நிற்கும் அகவிருளை ஆணவம் என்பர். அறியுந் தன்மையுடைய உயிர்களின் அறிவினை மறைத்து அணுத்தன்மைப் படுத்து நிற்றல்பற்றி ஆணவம் எனப்பட்டது. இதனை இருள் என்பது தமிழ் வழக்கு.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

எனத் திருவள்ளுவரும், "ஊனத்திருள் நீங்கிட வேண்டின் ஞானப் பொருள் கொண்டடி பேணும்" எனத் திருஞான சம்பந்தரும் இருள் எனசுட்டியது உயிர்களை அநாதியே பற்றியுள்ள ஆணவ மலமாகிய இவ்விருளினையேயாம். கன்மம் என்பது உயிர்களின் வினைத் தொடர் பாகிய பாசம். மாயை என்பது உலகம் ஒடுங்குதற்கும் (மாய்தற்கும்) மீளத் தோற்றுதற்கும் (ஆதற்கும்) மூலமாகிய அறிவில் பொருள். மாயா என்னும் வட சொல் மாயை எனத்திரிந்த தென்பர். மா — ஒடுங்குதல். யா — வருதல். மாய் + ஆ = மாயா ஆயிற்று எனத் தமிழ்ச் சொல்லாகக் கொள்வாரும் உளர். கன்மமும் மாயையும் உயிர்களை அநாதியே பிணித்துள்ள மூலமாகிய ஆணவமலம் கழலுதற்கும் உயிர்கள் அறிவு விளக்கம் பெறுதற்கும் துணை செய்வனவாய் ஒரு காலத்தில் இடையே வந்து சேர்ந்தன வாதலின் இவ்விரண்டினையும் ஆகந்துக மலம் (இடையே வந்தவை) என்பர்.

மாயையின் உதவி

உயிர்களின் அறிவை விளங்கவொட்டாது மறைத்தல் ஆணவ மலத்தின் செயல். எல்லா வுயிர்களும் மாயையின் காரியமாகிய உடல் கருவி உலகு நுகர் பொருள்களைப்பெற்று அவற்றின் தொடர்பினால் அறியாமை சிறிது சிறிதாக நீங்க அறிவு விளங்கப் பெறுவன. இவ்வாறு உயிர்களின் அறிவு விளங்குதற்குக் கருவியா யுதவுதல் மாயையின் செயல். உயிர்கள் மலமாயை என்னும் இரண்டின் அகமாய் நின்று வினைசெய்யுங்கால் நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளும் நிகழ்வன. இவ் வினைகளால் உண்டாகும் பழக்கத்தை உயிரறிவிற் பதியச்செய்தல் கன்மமலத்தின் செயலாகும். அறியாமையைச் செய்யும்

2363

ஆணவமலத்தின் வன்மையை ஒடுக்கி உயிர்கட்கு அறிவினை விளங்கச் செய்தற் பொருட்டே எல்லாம் வல்ல இறைவன் மாயையின் காரியமாகிய பல்வேறு உடம்புகளையும் அவை தங்குதற்குரிய பல்வேறு உலகங்களையும் உயிர்கள் நுகர் தற்கேற்ற பல்வேறு நுகர் பொருள்களை யும் மாயையென்னும் முதற் பொருளி னின்றும் படைத்து வழங்குகின்றான். இவ்வாறு வழங்குவதன் நோக்கம், உயிர்கள் உலக நுகர்ச்சிகளால் நன்றுந் தீதுங்கண்டு அறிவு விளங்கப்பெற்றுத் தம்மையும் தம் உயிர்க்குயிராகிய தலை வனையும் உணர்ந்து தம்மைப் பிணித் துள்ள மும்மலப் பிணிப்பினின்றும் விடுபட்டுப் பேரின்பப் பொருளாகிய சிவத்துடன் இரண்டறக் கலந்து தாமும் சிவமுமாய்ப் பிரிவிலாப் பேரின்ப நிலையில் இருத்தல் வேண்டும் என்பதே. உயிர்கள் மும்மலப் பிணிப்பினின்றும் விடுபட்டுச் செம்பொருளாகிய சிவ பரம்பொருளை யடைந்து சிவமெனத் தாமென வேறு பிரித்துணரவொண்ணாத வாறு இரண்டறக் கலத்தலைச் சிவமாதல் என்பர்.

மூந்நிலைகள்

உயிர், தன் விழைவு அறிவு செயல் என்பவற்றின் நிகழ்ச்சி சிறிதும் இன்றி, ஆணவ (இருள்) மலத்தோடு மட்டும் தான் தனித்துளதாம் தனிநிலையும், பின்பு இறைவனருளாற் கிடைத்த கருவி கரணங்களோடு கூடி விழைவு அறிவு செயல்கள் சிறிது விளங்கும் கலப்பு நிலையும், பின்பு சிவஞானத்தால் மும்மலப் பிணிப்பினின்றும் நீங்கி ஞானமே யுரு வாகிய இறைவனை யடைந்து விழைவு அறிவு செயல்கள் யாண்டும் பரவி விளங்கும் தூயநிலையும் ஆகிய மூன்று நிலைகளை (அவத்தைகளை) உடையதாகும். இவற்றுள் முதல்நிலை ஆணவ மலத்தோடு மட்டும் கூடிய நிலை. இது கேவலம் எனப்படும். இரண்டாவதுநிலை உயிர்கள் இறைவனால் அளிக்கப்பட்ட உடல் கருவிகளோடு கூடி வாழும் உலகியல் நிலை. இது சகலம் எனப்படும். இந் நிலையில் ஒன்றினுந் தோய்வின்றி எல்லா வற்றுக்கும் மேலாக விளங்கும் இறைவன் உயிரிற்கலந்து நின்று அதன் விழைவு செயல்களை விளக்கி நன்றுதீது என்பன வற்றைக்காட்டும் உதவியையும் உயிரைச் செலுத்திக் கொண்டு பொருளிற் கலந்து உடன்நின்று காணும் உதவியையும் செய் தருள்கின்றான் என்பது இறைவனருளில் திளைத்த அருளாசிரியர்கள் கண்டுணர்த் திய அநுபவவுண்மையாகும். இந்நுட்பம்,

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாயறிகின்றான் தானே"

எனவரும் காரைக்காலம்மையார் வாய் மொழியால் இனிது புலனாதல் காண லாம். 'உள்குவாருள்கிற்றெல்லாம் உடனிருந் தறிதி' எனத் திருநாவுக்கரசர் இறைவன் உயிர்களுடன் உடனாய் நின்று செய்யும் காணும் உபகாரத்தைத் தம் அநுபவ வாயிலாகக் கண்டுரைத்தமை நினைவிற் பதிக்கற் பாலதாகும். மும்மலங்களும நீங்கிய நிலையில் விரிந்திடும் அறிவு விளக் கத்தால் இறைவனோடு இரண்டறக் கலந்து இன்புறுதல் உயிரின் தூயநிலை யாகும். இதனைச் சுத்தம் என வழங்குவர். இந்நிலையை அடைதற்கே சமயங்களெல் லாம் இறைவனால் ஏணிப்படி நெறிகளாக அமைக்கப்பட்டன என்பர் பெரியோர்.

வினையும் ஆணையும்

மறுபிறப்பும் இருவினைப்பயனும் உண் டென்பது தமிழினத்தாரிடையே பல்லா யிரம் ஆண்டுகளாக நிலைபெற்று வரும் கொள்கையாகும். இக்கொள்கை தெய் வக் கொள்கையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. விருப்பம், அறிவு, செயல் என்னும் மூவகையாற்றலும் விளங்கப்பெறும் நிலையில் உலகநுகர்ச்சி யில் ஈடுபட்ட உயிர்கள் இன்ப நுகர்ச்சி யில் விருப்பும் துன்பநுகர்ச்சியில் வெறுப் பும் உடைமையால், பிறிதொருயிரால் ஈட்டப்படும் நல்வினைப் பயன்களைத்தாம் கவர்ந்து கொள்ளவும், தாம்செய்த தீவினைப்பயன்கள் தம்மைத் தொடர்ந்து வருத்தாதபடி விலகியொழுகவும் முயலு தலை இவ்வுலகவாழ்க்கையிற் காண்கின் றோம். இவ்வாறு ஒருவர்செய்த நல் வினைக்குரிய பயனாகிய இன்பத்தை மற் றொருவர் வலிதிற்கவராதவாறும், தாம் செய்த தீவினைக்குரிய பயனாகிய துன்

பத்தை நெகிழவிட்டுத் தப்பி ஓடாதவாறும் அவரால் ஈட்டப்பட்ட வினைப் பயன்களை அவரவரே நுகரும்படி அரசன் ஆணைபோல வரையறுத்துச் செலுத்துவோன் இறைவனாதலின் அம் முதல்வனைப் "பால்வரை தெய்வம்" எனவும் அவனது அருளாற்றலாகிய ஆணை அவ்வவ்வுயிர்களின் இருவினைப் பயன்களை முன்னிட்டு அவ்வச் செயல்களை நிகழ்த்துவதாகலின், ஊழினைக்கருவியாகக் கொண்டு செயல்புரியும் இறைவனது ஆணையினைப் 'பாலது ஆணை' எனவும் கூறுவர் தொல்காப்பியர் பால், ஊழ், நியதி, விதி என்பன ஒரு பொருட் சொற்கள்.

ஒருபாற் கோடாது நடுநிலையில் நின்று செங்கோல் செலுத்தும் அரசனது ஆணை நிகழாக்கால் எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்வர். அது போன்றே இறைவனது ஆணையாகிய ஊழின் முறை நிகழாக்கால் ஒருவர் செய்த நல் வினைப்பயனை மற்றவர் கவர்தலும் தாம்செய்த தீவினைப் பயனைப் பிறர் மேற் சுமத்தலும் ஆகிய குழப்பநிலை யேற்படும். ஆகவே உயிர்கள் தாம் செய்த வினைக்குரிய பயன்களைத் தாமே அறிந்து நுகரும் அறிவும் அமைதியும் உடையன அல்ல. இனி வினை தானே சென்று தன் பயனை நுகர்விக்கும் எனக் கொள்வோமென்றால் இருவினையும் உணர்வற்றன வாதலின் அவை நுகர்ச்சிப்பயனைத் தருமளவிலன்றி அப்பயன் வினை செய்தானையே சென்றடையுமாறு செய்விக்கும் ஆற்றலுடையன அல்ல. எனவே உயிர்களுக்கு இருவினைப் பயன் இறைவனது ஆணையினால் வரும் என்பதே ஏற்புடையதாகும். வேந்தன் தனது ஆணையைத் தண்டத்தலைவர் முதலிய அதிகாரிகளைக் கொண்டு நடத்துமாறு போல உலக முதல்வனாகிய இறைவனும் தனது ஆணையை உயிர்களின் இருவினையின் மேல் வைத்து அவற்றைக் கொண்டு வினைப் பயன்களை நுகர்விப்பன். உழவர் செய்யுந் தொழிலுக்குத் தக்க பயனை விளைநிலம் விளைவிப்பதன்றி அவ்வுழவுத் தொழில் தானே விளைவிப்பதில்லை அது போலவே உணவும் வித்துமாகத் தொன்று தொட்டுவரும் வினைப்பயன்களை உயிர்களுக்குக் கூட்டுவிப்பவன் இறைவனேயன்றி வினை தானே கூட்டுவிக்கும் ஆற்றலுடையதன்று என்பது தொல்காப்பியனார் திருவள்ளுவர் முதலிய பண்டைத் தமிழ்ச் சான்றோர் துணிபாகும்.

செய்யப்படும் வினையும், அவ்வினையைச் செய்யும வினை முதலாகிய உயிரும், அவ்வினை முதல் தொழிலாலாய பயனும், அப்பயனை வினை செய்த உயிருடன் கூட்டும் தலைவனாகிய இறைவனும் எனச் சைவ சமயத்துள் விதிக்கப்பட்ட பொருட் பகுதிகள் நான்காகும்... இவ்வுண்மையினை,

"செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே உணர்ந்தெழுந்தார்"
(பெரிய-சாக்கியர்)

எனவரும் சாக்கியநாயனார் புராணச் செய்யுளில் சேக்கிழாரடிகள் தெளிவாகக் குறித்துள்ளமை காணலாம்.

இறைவன் அருள்

வினைப்பயனை உயிர்களுக்கு ஊட்டும் இறைவன் தீவினைப்பயனை அருத்தும் போது, நோயாளர்களின் பிணி தீர்க்கக் கருதிய மருத்துவன் கைக்கும் மருந்தினை இனிய சுவைசேர்த்து அருத்துதல் போல, தீவினைப் பயனாகிய துன்பத்தை இனிமையைத் தரும் இன்பத்துடன் கூட்டி நுகர்விப்பன் என்பர் பெரியோர். 'வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத்தீற்றி' என நம்பியாரூரரும் "இனியன அல்லவற்றை இனிதாக நல்கும் இறைவன்" என ஆளுடைய பிள்ளையாரும் அருளிய பொருளுரைகள் இக் கருத்தினை விளக்குதல் அறியத்தகுவதாகும். தம் அறியாமையாற் பெரும் பிழையைச் செய்து அல்லலுழப்போர் தாம் செய்த பிழையினை நினைந்து இரங்கி

இறைவனை நினைந்து முறையிடுவாராயின் பேரருளாளனாகிய இறைவன் அவரது முறையீட்டுக்கு உளமிரங்கி அவர்தம் வஞ்சனை முதலிய குற்றங்களைக் களைந்து அருள்புரிவான் என்பதும் இறைவனுக்குத் தொண்டுபட்ட அடியார்களை ஊழ்வினை வருத்தாதென்பதும் சைவ சமயச் சான்றோர் துணிபாகும்.

"நெஞ்சமஞ்சு கண்டு கொளுனக்கென
நினைந்தார்
வஞ்சமதறத் தருளும் மைந்தன்"
(2-33-5)

எனவும்

"வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வருமேல்
வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமர்"

எனவும்

"ஒருவனாரடியாரை ஊழ்வினை நலிய
வொட்டாரே"

எனவும் வரும் திருமுறைத் தொடர்கள், இறைவனை நெஞ்சங் கசிந்து வழிபடுதலால் வினைத் தொடர்பு நீங்கும் என்பதனை வற்புறுத்தல் காணலாம்.

பலவகைச் சமயங்களிலிருந்தும் இறைவனை உளங்கசிந்து வழிபடும் மெய்யடியார்கள் எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் அவரவர் நினைந்த திருமேனி கொண்டு அங்கங்கேதோன்றி அவர்கட்கு அருள்புரிதல் சிவபெருமானது பெருங் கருணைத்திறம் எனபதனை,

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந்
தன்னடியார்க்கு
இங்கேயென்றருள் புரியும்
எம்பெருமான்"

எனத் திருஞானசம்பந்தரும்,

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும்
தோன்றும்"

எனத் திருநாவுக்கரசரும்,

"அறிவினன்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க்கங்கே ஆரருள் புரிந்து"

என நம்பியாரூராரும் கூறுமாற்றால் தெளிய அறியலாம்.

"யாதொர்தேவர் எனப்படுவார்க் கெல்லாம்
மாதேவன்னலாற் றேவர்மற்றில்லையே"

எனவும்,

"விரிவிலா அறிவினர்கள் வேறொரு
சமயம் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்
கேற்றதாகும்"

எனவும் வரும் அப்பரடிகள் அருளுரைகளைக் கூர்ந்து நோக்குங்கால், பல சமயத்தாராலும் போற்றி வழிபடப் பெறும் எல்லாத் தெய்வங்களாகவும் நின்று உயிர்களுக்கு அருள் வழங்கவல்ல தனிமுதல்வன் சிவபெருமானாகிய ஒருவனே என்பது சிவநெறிச் செல்வர்களின் துணிபு என்பது இனிது புலனாகுதல் காணலாம்.

நோய் மனிதன் நாணத்தக்க ஒன்றாகும்; மனிதன்பால்
ஏற்படும் தவறுகளின் அறிகுறியே நோயாகும். எவனுடைய
உள்ளமும் உடலும் நன்றாக உள்ளனவோ அவன்
ஒருபொழுதும் நோயால் வருந்துவதில்லை

— காந்தியடிகள்

வைணவ நெறி

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்
தமிழ்ப்பேராசிரியர்
திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி

இந்நிலவுலகம் தோன்றிய நாள் தொட்டு மக்களிடையே ஏதோ ஒரு முறையில் சமய வளர்ச்சி நிலவி வருகின்றது. காலப் போக்கில் மக்களின் அறிவு முதிர்ச்சிக் கேற்ப இச்சமய உணர்ச்சியும் வளர்ந்து பல்வேறு கொள்கைகளுடன் கூடிய பல் வேறு பிரிவுகளாக விரிந்தது. இங்ஙனம் பல்வேறு பிரிவுகளாக வளர்ந்த சமயம் ஏதோ ஒரு முறையில் மக்களின் உயிரோடும், உடலோடும் ஒன்றி நிற்கின்றது. பல பிரிவாகப் பிரிந்த சமயங்களுள் வைணவ சமயமும் ஒன்று. இது திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்ட பல உயரிய கொள்கைகள் அடங்கிய ஒரு பரந்த சமயமாகும்.

வைணவத்தின் கொள்கைகளை (1) தத்துவம் (2) இதம் (3) புருஷார்த்தம் என்று சுருக்கமாகக் கூறலாம். இக் கொள்கைகளை ஈண்டுச் சற்று விளக்குவோம்.

1. தத்துவம்

தத்துவங்கள் மூன்று. அவை சித்து, அசித்து, ஈசுவரன் என்று வழங்கப் பெறுவன. **சித்து** என்பது உயிர்களின் தொகுதி. **அசித்து** என்பது மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதி என்பது; இதை 'மூலப் பிரகிருதி' என்றும் வழங்குவர். **ஈசுவரன்** என்பவன் இறைவன். இவை மூன்றும் ''தத்வ-த்ரயம்'' (திரயம்-மூன்று) என்ற பெயரால் வழங்கி வருகின்றன.

சித்து: ஞானத்திற்கு இடமான ஆன்மா அல்லது உயிர் சித்து என வழங்கப்பெறுகின்றது. இஃது அன்னமயம், பிராண மயம், மனோமயங்கட்கு அப்பாலாயிருப்பது. தேகம், இந்திரியங்கள், மனம், பிராணன், ஞானம் இவற்றிற்கு வேறுபட்டது. அறிகின்ற தலைவனும், அறிவும், அறியப்பெறும் பொருளும் தானாகவே இருப்பது. அணுவின் அளவினை உடைய இந்த ஆன்மா ஆனந்த வடிவத்தைக் கொண்டது; என்றும் நிலைபெற்றிருப்பது. இது கண் முதலிய இந்திரியங்கட்குத் தோற்றாது; மனத்தாலும் இதனை நினைக்கமுடியாது; இதனைப் பகுதிகளாகவும் பிரிக்கமுடியாது; அவயவமும் அற்றது. வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய வேறுபாடுகள் இதற்கு இல்லை. அறிவு மயமாக இருக்கும் இந்த ஆன்மா அறிவுக்கும் இருப்பிடமானது. இந்த அறிவு 'தர்ம பூத ஞானம்' என வழங்கப்பெறும். இதனால் ஆன்மா 'தர்மி பூத ஞானம்' என வேறொரு பெயராலும் வழங்கப் பெறும். இந்தச் சீவான்மா தனக்கு எப்பொழுதும் தோன்றிக்கொண்டே இருக்கும் தன்னை 'நான்' என்று அறியும் பொழுது தர்ம பூத ஞானம் உதவ வேண்டும் என்பதில்லை. ஆனால், சீவான்மா தன்னைத்தவிர வேறு எந்தப் பொருளையும் தன் தர்ம பூத ஞானத்தால் மட்டிலுமே அறிய முடியும். தன் சொரூபத்தைத் தர்ம பூத ஞானத்தைக் கொண்டும் அறியலாம். ஆன்மா இறைவன் ஏவிய படி நடப்பது; அவனால் தரிக்கப்பெற்று அவனுக்கு அடிமையாகவே இருப்பது.

சித்தின் வகை: சீவான்மாக்கள் என்னுற்றவர். இவர்கள் தொகுதி பத்தர் (தளைப்பட்டிருப்பவர்) முக்தர், நித்தியர் என்னும் வேற்றுமையால் மூவகைப் பட்டிருக்கும். இவர்களுள் பத்தர் என்பவர் 'மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத்தாய காலமும், கணக்கும் நீந்த காரணனின். மாயையால் மறைக்கப்பெற்ற சொரூபத்தை உடையவர்கள்; அனாதி அஞ்ஞானத்தால் தேடிய புண்ணிய பாவங்களால் சூழப் பெற்றவர்கள்; இவர்கள் அவரவர்களுடைய வினைக்குத் தக்கவாறு மாறிமாறித் தேவ, மனித, விலங்கு, தாவர வடிவங்களைப் பெற்று துக்க பரம்பரைகளை அநுபவிக்கும் சம்சாரிகளாவர். முத்தர் என்பவர், இவ்வுலகத்தளைகள் கழிந்து பரமபதத்தில் பகவனநுபவ கைங்கரிய போகரானவர்கள் ஆவர். நித்தியர் என்பவர் ஒரு நாளும் சம்சார சம்பந்த உணர்வு இல்லாத அனந்தன், சேனை முதலியார் (விஷ்வக் சேனர்), பெரிய திருவடி தொடக்கமானவர்களாவர்.

அசித்து: அசித்து என்பது, அறிவில்லாத பொருள். இது விகாரத்திற்கு இடமானது. அஃதாவது முன்னைய நிலையை விட்டு வேறு நிலைகளை அடைவதாகின்ற வேறுபாட்டிற்கு இடமாய் இருக்கும். இந்த அசித்து இராஜஸ தாமஸங்கள் கலவாத சுத்த சத்துவம் என்றும், இராஜஸ தாமஸங்கள் கலந்த மிச்ர தத்துவம் என்றும், சத்துவம் முதலிய குணங்களற்ற சத்துவ சூனியம் என்றும் மூன்று வகைப்படும்.

சுத்த தத்துவம்: இது ஆதல், அழிதல் இல்லாதது; ஞானத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கக்கடவது இறைவன் அநுபவத்தின் பொருட்டே உண்டான இச்சையாலே நித்திய விபூதியில் (பரமபதத்தில்) விமானம், கோபுரம், மண்டபம், உப்பரிகை முதலிய வடிவுடன் தோற்றக்கடவது. இது வைகுந்தத்திலிருந்து மேலே எல்லையின்றி எங்கும் பரவி நிற்கும். நெருப்பு, கதிரவன் முதலிய ஒளியுள்ள பொருள்களும் மின்மினிக்கு ஒப்பாம்படி அளவிறந்த ஒளி வடிவினது. இது நித்தியர், முக்தர், ஈசுவரன் இவர்களாலும் அளவிடுதற்கு அரியது; கணநேரத்திற்குக் கணநேரம் முன்பில்லாத வியப்பினை உண்டாக்க வல்லதாக இருக்கும். நித்தியர், முக்தர், ஈசுவரன் இவர்கள் ஞானத்தால் தன்னை அறிய வொண்ணுதபடி ஒளிவிட்டுத் திகழும். ஆனால் சம்சாரிகட்கு அங்ஙனம் தோற்றாது.

மிச்ர தத்துவம்: இதில் சாத்துவிகம், இராஜஸம், தாமஸம் ஆகிய மூன்றும் கூடி கர்மவான்களாகிய சம்ஸாரி சேதனருடைய ஞான ஆநந்தங்கட்கு மறைவை உண்டாக்கும்; அதுவல்லாததனை அதுவாக நினைக்கும் விபரீத அறிவினையும் விளைவிக்கும். இஃது உற்பத்தி விநாசம் இல்லாதது. இஃது ஈசுவரனுடைய உலகப்படைப்பு முதலியவற்றிற்கு விளையாட்டுக் கருவியாக இருந்து ஏற்றத்தாழ்வு உள்ள இடம், அவை இல்லாத இடம் என்ற இட வேறுபாட்டாலும், அழிக்கும் காலம் படைப்புக் காலம் ஆகிய இரண்டு வகையான கால வேறு பாட்டாலும், சூக்கும விகாரங்களையும், தூலமான விகாரங்களையும் உண்டாக்கக்கடவது. இந்த மிச்ரதத்துவம் பிரகிருதி அவித்யை மாயை என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்.

இந்த மிச்ர தத்துவம் இருபத்து நான்கு வடிவங்களாக இருக்கும். அஃதாவது, சேதனரைப் பூரிக்கும்படி செய்யும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன்களைந்தும்; மெய், வாய், கண், செவி, மூக்கு ஆகிய பொறி ஐந்தும்; வாக்கு, கால், கை, வாயுரு, உபத்தம் ஆகிய கன்மேந்திரியங்களைந்தும்; மண், நீர், எரி, கால், ஆகாயம் என்னும் பூதங்களைந்தும்; இவ்குள்ள இந்த ஆன்மாக்கள் பொருந்தியுள்ள மூலப்பிரகிருதி ஒன்றும்; மகத் (மான்) தத்துவம் ஒன்றும்; அகங்கார தத்துவம் ஒன்றும்; மனம் ஒன்றும் என இருபத்து நான்காம். அசித்தின் இந்த இருபத்து நான்கு தத்துவங்களையும் கலந்துதான் ஈசுவரன் காணுகவும் நான்முகன் மூலமாகவும் இந்த அகிலத்தைப் படைக்கின்றான்.

சத்துவ சூனியம் : காலதத்துவம் எனவும் இது வழங்கப்பெறும். இஃது எங்கும் பரந்து நிற்கும் ஒரே திரவியம். இதில் சத்துவம் முதலிய பிரகிருதியின் மூன்று குணங்களும் இல்லை. எதிர், நிகழ், நிமிடம், விநாடி, நாழிகைமுதல் பரார்த்தம் வரையிலுள்ள பகுதிகளெல்லாம் இதனுடையனவே. இது ஈசுவரப் படைப்பின் பரிணாமங்களுக்குக் காரணமாய், தோற்றம் ஈறு அற்றதாய், அவனுடைய படைப்பு, அளிப்பு, அழிப்பு ஆகிய விளையாட்டிற்குக் கருவியாய் அவனுக்கு உடலாகத் திகழும். வைகுந்தத்தில் முன்பின் என்ற அளவிற்குக் காலம் உளதேயாயினும் அதன் சம்பந்தமின்றி அனைத்தும் எம்பெருமானது சங்கல்பத்தால் மட்டிலும் நடப்பனவாகும்.

மேற்கூறிய சுத்த தத்துவம், மிச்ர தத்துவம் ஆகிய அசித்தின் இரண்டு பகுதிகளும் ஈசுவரனுக்கும், நித்தியர், முக்தர், பத்தர் என்ற மூன்றுவித ஆன்மாக்களுக்கும் போக்கியமாயும் போகத்திற்கு உபகரணமாயும், போகத்தை அநுபவிக்கத்தக்க இடங்களாயும் இருக்கும்.

ஈசுவரன் : ஸ்ரீமந் நாராயணனே சர்வேசுவரன். இவன் எப்பொழுதும் மாறுபடாத்தன்மையுடையவன்; சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப்பெறாதவன். மூன்றுவிதசேதன அசேதன பரிணாம ரூபமான வேறுபாட்டின் குறைகள் தட்டாதவன். அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்குவித பலன்களையும் உயிர்கட்குத் தந்து அவற்றின் புகலிடமாக இருப்பவன். தன் சொரூபத்தாலும் திருமேனியாலும் குணத்தாலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். ஞானம் சக்தி பலம் ஐசுவரியம் வீரியம் தேஜஸ் முதலிய மங்கள குணக்கூட்டங்களால் அலங்கரிக்கப்பெற்றவன் அவனிடம் இக்குணங்கள் ஆதல் அழிதல் இன்றி எப்பொழுதும் நிறைந்திருக்கும். இவற்றைத் தவிர, வாத்சல்யம் சௌசீல்யம் சௌலப்பியம் முதலிய எண்ணற்ற குணங்களையும் கொண்டவன்.

இந்த உலகினைப் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய வற்றின் காரணபூதன். அனைத்திற்கும் ஆதாரமானவன்; அனைத்தையும் அடக்கி ஆள்பவன்; அனைத்தினுடைய பலனையும் அநுபவிப்பவன். தன்னை அடைந்தவருடைய எல்லாவினைகளையும் போக்குபவன். சகல வேதங்களாலும் போற்றப்பெறுபவன். சகல கர்மங்களாலும் தானே ஆராதிக்கப் பெற்றுப் பலன்களைத் தருபவன். நான்முகன் முதலிய சகல தேவர்களையும் படைப்பவன். அவர்கள் அனைவரும் இவன் கட்டளைக்கு அஞ்சி நடப்பவர்களே. இந்த லீலா விபூதியில் உயிர்கள் தத்தம் வினைகட்கேற்ப உடல்களை அடைவதற்கும், பிறகு அவை வீடுபேறு பெறுவதற்கும் இவனே காரணன். இவன் விரும்பிப்பெற முடியாதது ஒன்றும் இல்லை.

நித்திய விபூதியாகிய பரமபதத்தில் இவனுக்கெனத் தனியான திருமேனி உண்டு அஃது ஈடும் எடுப்பும் அற்ற பேரொளியினை உடையது; பேரழகு வாய்ந்து கண்டாரை ஈர்ப்பது; யோகியரின் தியானத்திற்கு ஏற்றது. அந்த உருவத்துடன் பெரிய பிராட்டியார், பூமிப்பிராட்டியார், நீளாதேவி ஆகியோருக்கு நாயகனாக இருப்பவன்.

எம்பெருமானின் திருமேனி பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து வகைப்படும். பரம் என்பது வைகுந்தத்தில் எழுந்தருளியிருக்கும் பரவாசுதேவனுடைய உருவம். வியூகம் என்பது வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்தியும்னன், அநிருத்தன் என்ற உருவங்கள். விபவம் என்பது எண்ணற்ற அவதாரமூர்த்திகள். அந்தர்யாமி என்பது எல்லோருடைய இதயகமலத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை. அர்ச்சை என்பது திவ்விய தேசங்களில் திருமேனி கொண்டு எழுந்தருளியுள்ள நிலையும் மற்றும் பக்தர்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு திருமேனி கொண்டு நிற்கும் நிலையும்.

பெரிய பிராட்டியாகிய இலக்குமியும் ஈசுவரதத்துவத்தில் சேர்ந்தவள். பிராட்டியும் எம்பெருமானைப் போல் எங்கும் நிறைந்து நிற்பவள்; எம்பெருமானைப் போல் நமக்கு உபாயமாகவும் பலனாகவும் இருப்பவள். உலகில் புத்திரனுக்கு நன்மையைச் செய்யும் பெற்றோரைப்போல் எம்பெருமானும் எம்பெருமாட்டியும் நமது நன்மையை நாடித் தங்களுக்குள் சில கடமைகளைத் தமது சங்கல்பத்தால் வகுத்துக் கொண்டுள்ளனர். பிரபத்தியைப் பின்பற்றுவோர் முதலில் பிராட்டியைப் புருஷகாரமாகக் (தகவுரை கூறுபவளாகக்) கொண்டு எம்பெருமானைச் சரணமடைய வேண்டும் என்பது நடைமுறை.

2. இதம்

மோட்சத்திற்குச் சாதனமாக அநுட்டிக்கப்பெறும் வழியே 'இதம்' என்பது. வைணவர்கள் கடைப்பிடிக்கும் இரண்டு வழிகள் பக்தி நெறியும் பிரபத்தி நெறியுமாகும்.

பக்தி நெறி:- இது பலவகைப்படும். இதனை மோட்சம் பெறும் வரையில் அநுட்டித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். பலன்பெற நெடுங்காலம் கழியவேண்டும். அங்கங்களுடன் அநுட்டிக்கும் முறை மிகக் கடினமானது. இக்காலத்தில் பக்தி நெறியை அநுட்டிப்பதற்கு அதிகாரிகளே இலர் என்று கூறலாம். நாதமுனிகள் போன்ற யோகியரே இதற்கு அதிகாரிகளாவர்.

பிரபத்தி நெறி:- எல்லோரும் எளிதாக அநுட்டிக்கக் கூடியது. சுக்கிரீவன் விடணன் காகம் போன்றோர் இந் நெறியைக் கடைப்பிடித்தே உய்ந்தவர்கள். இதனைச் சரணாகதி தத்துவம் என்றும் வழங்குவர்.

3. புருஷார்த்தம்.

வீடு பேறு அடைவதே 'புருஷார்த்தம்' என்று வழங்கப்பெறுவது. புருஷன் - ஆன்மா; அர்த்தம்-பொருள்; அஃதாவது, ஆன்மா அடைய வேண்டிய பொருள். உடலினின்று தனி நாடிவழியே வெளியேறி வரும் ஆன்மாவை அக்கி தேவதை, பகலின் தேவதை, சுக்லபட்ச தேவதை, உத்தராயண தேவதை, மழை தேவதை, சூரியன், சந்திரன், மின்னல் தேவதை, வருணன், இந்திரன், நான்முகன் ஆகிய இவர்கள் வரவேற்றுத் தக்க உபசாரங்கள் செய்து தத்தம் எல்லைகளைக் கடத்தி வழிநடத்திவிடுவர். இதுவே 'அர்ச்சிராதிகதி' என்பது. அர்ச்சிராதிகதி முடிந்த பிறகு ஆன்மா வைகுண்டத்தை நெருங்கும். அங்குச் செல்வதற்காக அது காறும் நிறுத்திவைக்கப்பெற்ற சூக்கும உடல் கழற்றி விடப்பெறும். பிறகு அங்குள்ள விரஜை நதியைத் தன் சங்கல்பத்தால் தாண்டும். உடனே எம்பெருமான் கருணையால் ஆன்மாவுக்குச் சுத்த சத்துவமான உடல் கிடைக்கும். அந்த உடலுடன் 'ஐரம்மதீயம்' என்னும் திவ்விய தடாகத்தைக் கடந்து 'சோமசவனம்' என்னும் அரசமரத்தை அடையும். அங்கு 500 அம்சரப் பெண்கள் பல்வேறு உபசாரப் பொருள்களைக் கொண்டு வரவேற்புச செய்வர். பிறகு ஆன்மாவுக்குப் பிரம்மாலங்காரம் செய்வித்து சுத்த சத்துவமான மணம், சுவை, தேஜஸ் ஊட்டபெறும். அதன் பிறகு அங்குள்ள பல நித்திய சூரிகள் எதிர் கொண்டழைப்பர். அங்கிருந்து திவ்விய கோபுரத்திற்குச் செல்ல, அங்குக் காவல் புரிந்து நிற்கும் இந்திரன் பிரஜாபதி என்னும் துவார பாலகர்கள் நெருங்குவர். அங்குள்ள நித்திய சூரிகளும் மாமுனிவர்களும் தம்முடைய இடத்திற்கு எழுந்தருள வேண்டும் என்று வேண்டி ஆன்மாவின் திருவடிகளைத் திவ்விய தீர்த்தத்தால் கழுவுவர். இங்கும் பல மகளிர் உபசரிப்பர். பின் ஆன்மா சுத்த சத்துவமான உடலுடன் ஆனந்தமயமான திவ்விய மண்டபத்தில் புகுந்து பகவத் குணங்களைப் பேசியனுபவிக்கும். நித்திய சூரிகளும் முக்தர்களும் அடங்கிய குழுவைக் கண்டு களிக்கும். அந்தக்குழுவில் ஆசாரியர்கள் இவ்வான்மாவைக் கண்டு தம்முடைய முயற்சி பலித்ததெனப் பெருமிதம் கொண்டு நிற்பர். ஆன்மாவும் தன் நன்றியைக் காட்டி வணங்கி நிற்கும்.

அந்தத் திவ்விய மண்டபத்தில்தான் ஸ்ரீமந் நாராயணன் அனந்தன்மீது தன் தேவிமார் மூவருடன் எழுந்தருளியிருப்பான். அந்த எம்பெருமானைக் கண்ணாரக் கண்டு அவனது இரத்தினப்படிகளில் ஏறித் திவ்விய தம்பதிகளுடன் கலந்து பேசி மகிழும். அதன் பின்னர் அவன் திருவடிகளின் கீழ் அனந்தன், கருடன்; சேனைமுதலியார் முதலிய நித்திய சூரிகளின் குழுவில் புகுந்து கலந்து எல்லாவிடத்திலும் எல்லாக் காலங்களிலும் எல்லா நிலைமைகளிலும் எல்லாவித கைங்கரிய சித்தியும் பெற்றுப் பேரின்பக் கடலுள் மூழ்கி நிற்கும். அங்கிருந்து ஒருபோதும் திரும்புதல் இல்லை. ஆன்மா தன் விருப்பப்படி நடப்பதும், பகவத் கைங்கரியத்தில் அடங்கியதே. தன் இச்சையுடன் பிரகிருதி மண்டலத்திற்கு வந்து சென்றாலும் ஆன்மாவுக்குப் பகவதநுபவ ரசத்திற்கு இடையூறு என்றும் இல்லை. இத்தகைய பகவதநுபவமே 'பரிபூர்ண பிரம்மாநுபவம்' எனப்படும். இதுவே 'பரமபுருஷார்த்தம்' என்பது.

பொய்கையாழ்வார்

ஏற்றான்புள் ஊர்ந்தான் எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் — கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு.

பூதத்தாழ்வார்

யானே தவஞ்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் — யானே
இருந்தமிழ் நன்மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது.

பேயாழ்வார்

ஆரே துயருழந்தார்? துன்புற்றார் ஆண்டையார்?
காரே மலிந்த கருங்கடலை — நேரே
கடைந்தானைக் காரணனை நீரணைமேற் பள்ளி
அடைந்தானை நாளும் அடைந்து.

சமண நெறி

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்
ஆராய்ச்சி விரியுரையாளர் அண்ணாமலைநகர்

சமயம் :

மக்களை உலகில் ஒழுங்காக வாழ வைத்து, மறுமையில் உயர்ந்த நிலையை எய்த உதவும் கட்டுப்பாடான கருத்து வளர்ச்சியே சமயம்.

சமயம், கொள்கை, மதம் என்பன ஒரு பொருட்கிளவிகள். ஆனாலும் ஒவ்வொன்றுக்கும் அடிநிலையில் பொருள் வேறுபாடுண்டு. சமையம் சமைக்கப் பெற்றது. அதாவது சமுதாயம் வளரவும் வாழவும் இவை இவை இன்றியமையாதன என்று பட்டறிவாற்கண்டு சமைக்கப்பெற்றவை என்பதாம்.

அங்ஙனம் சமைக்கப்பெற்ற கருத்துக்களைப் பின்வருவோர் உறுதியாகக்கடைபிடித்துக் கொள்ள இருக்கும் நிலையில் அதுவே கொள்கையாகிறது. அது பலராலும் ஒத்துக்கொள்ளக் கூடியதாகவும் ஒழுகவேண்டிய கடமையாகவும் ஆகிற போது மதம் என்ற பெயரையடைகிறது. மதம்-ஒப்புக்கொள்ளப்பெற்றது. அபிமதம் அநுமதம் போன்ற இதன் வழிவந்த ஆரியமொழிகளையும் எண்ணின் இப்பொருளின் அமைவு புலனாகும்.

இங்ஙனம் மக்களை யுய்விக்க வந்த கருத்துக்கோட்பாடாகிய சமயம் இடம், காலம், தட்பவெப்ப நிலை, காட்டுவாராகிய ஆசிரியர்களின் பயில்பு, காண்பாராகிய மக்களின் தகுதி இவற்றால் பலதிற வகைப்படும். அவற்றுள் சமணமும் ஒன்று.

சமணத்தின் மறுபெயர்கள் :

சைனம், ஆருகதம், நிகண்டம், அநேகாந்தவாதம், சியாத்வாதம் என்ற பெயர்களாலும் சமணம் அழைக்கப் பெறும். ஜினன்-பொறிகளை வென்றவன், பொறிவாயில் ஐந்தவித்தான். அங்ஙனம் தீர்த்தங்கரர்கள் ஜினர் என வழங்கப் பெற்றனர். அவர்களைக் கடவுளாகப் கொண்ட சமயம், அவர்கள்கூறிய அநுபவ உரைகளைத் தமக்கு உபதேசங்களாகக் கொண்டசமயம் சைனம்.

அருகன் — பூசிக்கத்தக்கவன், வணங்கத்தக்கவன். இது வணங்கத்தக்ககடவுளை உணர்த்திற்று. ஆகவே அருகனை முதற் கடவுளாகக் கொண்ட சமயம் ஆருகதம். அருகன் என்றதிலிருந்து, அவனைத் தெய்வமாகக் கொண்ட சமயம் ஆருகதம் என வந்தமைக்கு நேமிநாதத்துப் பத்தாவது வெண்பாவில் விதியே கூறப்பெற்றுள்ளது.

சமணக் கடவுளர் இயல்பாகவே பற்றற்றவர். கந்தம் - பற்று. நிர்க்கந்தம் - பற்றற்ற தன்மை அதனையுடையவர் நிர்க்கந்தர். அது நிகண்டம் எனப் பாகத மொழியிற் சிதைந்து வழங்கும். ஆகவே நிகண்டரை வழிபடும் சமயம் நிகண்டமாயிற்று.

ஒன்பது பொருள்களிடத்திலும் அழியாமையும் அதாவது நித்தியத் தன்மையும் பரிணாமமும் ஒருசேர விளங்குவதால் அநேக அந்தவாதம் எனப்பெற்றது. ஸ்யாத் வாதம் என்பதும் இப் பொருளதே.

"பகடு புறந்தருநர் பாரம் ஓம்பு" — வெள்ளைக்குடி நாகனார்

சமணத் தொன்மை:

சமயங்கள் கடவுளால் உண்டாக்கப் பெற்றன, பன்னெடுங்காலமாகப் பயின்று வருவன என்பதால் தனித்த பெருமையுடையன என்று மதிக்கப் படுகின்றன. அத்தகுதி இச்சமண சமயத்திற்கும் உண்டு.

இதன் கொள்கைகளை மக்கள் மனப் புலத்திலே பரப்ப இது வரை இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றினார்கள் என்று சமணசமய வரலாற்று நூல்களாகிய ஸ்ரீ புராணமும், மேருமந்திர புராணமும் கூறுகின்றன. தீர்த்தம் + கரர் எனின், நீரும் நெருப்பும் தாம் இயல்பாகவே தூய்மையாக இருந்து தம்மைச் சார்ந்தவற்றையும் தூய்மையுறுத்துவது போல இவர்களும் மனத்தூய்மையை வளரச்செய்பவர்கள் என்பது பொருளாம் தீர்த்தங்கரரில் விருஷபதேவர் என்பவரே முதல்வர். இவர் ஆதிநாதர் எனவும் அழைக்கப்பெறுவர். இவர் ஆயுள் 84 லட்சம் பழைய ஆண்டு வாழ்ந்தனர் என்று சொல்லப்பெறுகிறது. இங்ஙனம் 24 பேர்களையும் கணக்கிடும்போது பலகோடி யாண்டுகளுக்கு முன்னே தோன்றிய சமயம் சைனம் என்று கருதவேண்டியுள்ளது. ஆனால், இந்திய வரலாற்றில் இடம் பெற்ற வர்த்தமான மகாவீரர் இருபத்து நான்காவது தீர்த்தங்கரர். இவர் கி. மு. 599 முதல் கி. மு 527 வரை இருந்தவர் என்பதை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் ஒப்புகின்றனர். ஆகவே இச்சமயம் கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கு முந்தியது என்பதில் ஐயமில்லை.

வர்த்தமானர் காலத்திலேயே இந்தியத் துணைக்கண்டத்தில் வடபகுதி முழுவதும் இச்சமயம் பரவி இருந்தது. வடநாடு பஞ்சத்தால் வாட சந்திரகுப்தர் காலத்தில் தென்னாட்டிலும் பரவியது. சந்திரகுப்தருடைய குருவாகிய பத்ரகுப்தர் என்பவர் ஆயிரக் கணக்கான சமணர்களோடு தென்திசைபோந்து மைசூரில் சிரவணபெல் குளம் என்னும் ஊரில் தங்கினர் அங்கிருந்து கோவை, சேலம், ஆர்க்காடு வழியாகத் தமிழகம் முழுவதும் சமணத்தைப் பரப்பினர். சமணத்தின் தலையாய உயர்ந்த கொள்கை இன்னா செய்யாமை என்பதே. அதனை அஹிம்சை என்று அழைப்பார்கள்.

சமண தத்துவங்கள்

சமயம் அல்லது மதக் கொள்கை தத்துவம், சடங்கு, வரலாறு என்ற மூன்றுகால்களாகப் பிரிந்து மக்கள் மனப்புலத்தில் பாய்ந்து அநுபவப் பயிரை வளர்த்துப் பேரின்பப் பயனை அளிக்கும் பேரியாறு. அதுபோல சமண சமயத்துக்கும் இம்மூன்றுகால்களும் உள. தத்துவத்தை விளக்கி அநுபவத்தை அளிப்பதற்காகவே சடங்குகளும் வரலாறுகளும், அமைத்திருத்தலின் நாம் சைன தததுவம் ஒன்றை மட்டும் எண்ணிஞல் அனைத்தையும் எண்ணினவர்கள் ஆவோம்.

உலகம் உயிர்ப்பொருளும், உயிரில் பொருளுமாகிய இருவகைப் பகுப்பினை உடையது. உலகம் துன்பம் நிறைந்தது. துன்பத்திற்கு அடிப்படை தீவினை. அதன்அடி அவா. அவாவிருந்து அருகன் தாளகளைப் பற்ற வேண்டும். பணிய வேண்டும். அதற்குரிய உபாயம் சினனால் வகுக்கப்பட்ட அறநெறிகளே.

உயிர்கள் வினையின் நீங்கி வீடுபெற நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்ற மூன்றையும் ஒருசேர அடைதல் வேண்டும். இந்த மூன்றையும் அடைய எல்லாஉயிர்களிடத்திலும் கனிவும், கருணையும் செலுத்தவேண்டும். தத்துவம் என்பது உண்மை கண்டு மக்கள் உய்வதற்கு உபாயமான ஆராய்ச்சி அறிவியல் கூறுகள். அவை அவரவர் அனுபவ வழியிலே தெளிவும் நிறைவும் பெற்று விளங்குவதாகும். நாம் தெளிவதற்குப் பெரியோர்கள் தெளிந்து காட்டிய வழியில் நிற்றலே அறிவுடைமை.

அங்ஙனம் தீர்த்தங்கரர் தெளிந்து காட்டிய சமண தத்துவங்கள் இல்லறம், துறவறம், ஆண் பெண், இவற்றால் வேறுபட்ட எப்பகுதியினருக்கும் பொதுவானவையாம். ஆனாலும் தெளிந்து,

நிர்வாணம் அல்லது சிவகதி என்றழைக்கப்படும் மோட்சத்தை அடையும் தகுதி சிராவகர்களாகிய இல்லறத்தார்க்கும் பெண்களுக்கும் இல்லை என்பதே இவர்களது துணிவு.

தத்துவப் பிரிவுகள்:-

உலகமும் அதன்கண் விளங்கும் பொருள்களும் உயிர் உடையன, உயிர் இல்லாதன என இருவகைப்படும். இதனைச் சமணநூல் சீவன், அசீவன் என்றழைக்கும். புல், பூண்டுமுதல் தேவர் ஈறான அனைத்துயிர்களும் சீவன்கள். சீவன்கள் அனைத்தும் அறிவுடைய பொருள்கள். இதனைச் சித்துப் பொருள் என்றழைப்பர். சித்துப்பொருளில் தேவர்களும் நரகர்களும் பிறப்பு இறப்பு வளர்ப்பு உண்மையால் மக்கள் இனத்தைச் சேர்ந்தே மதிப்பிடப் படுவார்கள். இவர்களைச் சம்சாரிகள் என்றழைப்பது மரபு. மோட்சத்தை அடைய விரும்புகிறவர்கள் மோட்சசீவர்கள். அவர்கள் துறவிகளே சம்சாரிகள் அல்லர் என்பது இச்சமயத் துணிபு.

உயிர் இலக்கணம்:-

உயிர்கள் பல. என்றும் உள்ளன. இறைவனால் படைக்கப்படாதன. நல்வினைகள் தீவினைகள் செய்வன. செய்த வினைகளின் பயனாகிய இன்ப துன்பங்களை எய்துவன. அங்ஙனம் எய்தும்போதே வரும் பிறவிக்குக் காரணமான வினைகளை ஈட்டுவன.

வினைகளை நுகர்வதற்காகத் தேவர் கதி, மக்கள் கதி, நரகர் கதி, விலங்கு கதி ஆகிய நால்வகைக் கதிகளிலும், மாறி மாறிப் பிறந்து இறந்து கொள்ளி வட்டமும் காற்றாடியும் போல் சுழல்வன. நற்ஞானம் முதலாக மும்மணிகளின் உதவியால் வினைகளின் நீங்கி விளங்கிய அறிவினைப் பெற்றுப் பேரின்பம் எய்துவன. குடத்துள் ஏற்றிவைத்தவிளக்கொளி குடத்தளவாகவும், அறையில் வைத்தது அறையளவாகவும் அமைந்ததுபோல உயிர்களும் எடுத்த உடம்பின் அளவாகப்பெரிய உயிர் சிறிய உயிர்களாக ஆகின்றன. அதனாலேயே தொழுந் தகுதிபெற்ற தீர்த்தங்கரர்களும் ஐநூறுவில் முதல் ஏழுமுழம் வரை உயரமும் அதற்குஏற்ற பருமனும் உடையவர்களாக இருந்தார்கள் என்று இச்சமய வரலாறு தெரிவிக்கின்றது. இதனை ஒட்டி எழுந்த பழமொழி

"பெரியதன் ஆவி பெரிது"

என்பது.

உயிரில் பொருள்கள் (அசீவன்கள்):

இவைகளும் உயிர்ப்பொருளைப் போலவே என்றும் இருப்பவை. தோற்றக் கேடுகள் இல்லாதவை. இவற்றிற்கு உணர்வு இல்லாமையால் மும்மணிகளைப் பெற்று வினை நீங்கி வீடுபேறு அடையும் உரிமை மட்டும் இல்லை. உயிர்களைக்கட்டப் பயன்படும் கட்டாகிய இவற்றிற்கு வீடு ஏது? இல்லையல்லவா!

வகைகள் :

இவை புத்கலம், தர்மம், அதர்மம், காலம், ஆகாயம் என ஐவகைப்படும். அவைகளை முறையே எண்ணுவோம்.

1 புத்கலம் :

இது உயிர்களை அநாதியே ஒட்டிநின்று உயிர்களுக்கு உடலை உதவுவது. உடலில் உள்ள பொறிகளும், புலன்களும், ஆகாயம் ஒழிந்த நான்கு பூதங்களும், வெயில் நிழல் ஒளி இவைகளும் இதன் வடிவங்களே. இது நுண்பொருளாகவும் பருப்பொருளாகவும் மாறும் இயல்பினது. சுவை, நிறம், உருவம், ஊறு, நாற்றம் என்ற குணங்களை உடையது.

2 தர்மம் :

நுண்ணியஅணுவாக உயிரைச்சார்ந்து அதனை இயங்கவும் இருக்கவும் செய்வது. இதன் உதவியாலேயே உயிர்கள் நடத்தல், ஓடுதல் செய்கின்றன.

3 அதர்மம் :

இதுவும் அணுவாய் நின்று நிற்றல் இருத்தல் கிடத்தல் செய்கின்றன. சுருங்கச்சொன்னால் உயிர்களின் இயக்கம் தர்

மத்தின் காரியம்; இயங்காமை அதர்மத்தின் காரியம் எனலாம். இங்கு தருமம் அதர்மம் என்பன அறம் மறங்களேயோ, புண்ணிய பாவங்களேயோ உணர்த்துவது அன்று. இயல்பு அதற்கு மாறுனது என்னும் பொருளது. இதனைத் தன்மாத்திகாயம் அதன்மாத்திகாயம் என்பர். இவ்விலக்கணத்தைத் தொகுத்து எண்ணிஞல் புத்கலம் உயிர்களுக்கு உடலை நல்கி இயங்கவும் தங்கவும் செய்து அவைகள் வினைகளைச் செய்தற்குத் துணை யாவது என்பது பெறப்படும். இதன் பரப்பும் விரிவும் ஆகாயம் உள்ளனவாம்.

4 காலம் :

இமை நொடி முதல் ஊழி பேரூழி வரை கணிக்கப்படுகின்றதுவாம். இது வினை நிகழும்போது துணை நிற்பது.

5 ஆகாயம் :

இது ஐவகைப் பூதங்களுள் ஒன்று அன்று. உயிர்ப் பொருள்களும் உயிரில் பொருள்களும் தங்க இடமளிப்பது. உலோகம் அலோகம் என இருவகைப் படுவது. அலோகத்தை அனந்தாகாசம் என்றும் அழைப்பர். லோகத்திற்கு அலோகமாகிய அனந்தாகாசம் இடம் கொடுக்கும். இவை யைந்தும் அசீவனின் பாகுபாடுகளாம். இனி சமண தத்துவப் பொருள்களில் ஒன்றுகிய புண்ணியம் முதலியவற்றை ஆராய்வோம்.

புண்ணியம் :

புண்ணியமாவது உயிர்களின் மனம் மொழி மெய்களால் விளைந்து உயிர்களையே ஒட்டி நிற்பது. தேவராகவும் மனிதராகவும் பிறக்கச் செய்வது. எல்லா நன்மைகளையும் தருவது.

பாவம் :

புண்ணியத்தைப் போலவே உயிர்களை யொட்டி நின்று உயிர்களை நரகர்களாகவும், விலங்குகளாகவும் பிறக்கச் செய்து அறிவின்மை முதலான துன்பங்களை ஊட்டுவது.

ஊற்று :

பற்றி நிற்கும் நல்வினை தீவினைகளால் உயிரில் உண்டாகும் இன்பதுன்ப வடிவான சிறப்பு. இதனை ஆஸ்ரவம் என்பர். இந்த ஊற்றுக்கண்ணை அடைப்பதே சிறப்பு. அதாவது வினையிருந்து உயிர்களைச் சாராமல் தடுப்பது. அங்ஙனம் தடுத்த பின் எஞ்சிநிற்கும் வினைகளை உதறித்தள்ளுவது உதிர்ப்பாம். உதிர்க்க தவம், தியானம், சமாதி, சுக்கிலத் தியானம் இவற்றைக் கைக்கொள்வது இன்றியமையாதது.

உயிர்கள் வினைகளில் சிக்கிப் பொறி புலன்களுக்கும், கரணங்களுக்கும் கட்டுப்பட்டு இருக்கும் நிலை கட்டு. அதில் நீங்கிக் கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பங்களைப் பெற்று நிர்வாணம் பெறுதல் முக்தி.

மும்மணிகள் :

இங்ஙனம் உயிர்கள் கட்டின் நீங்கி வீடுபேறு அடையத் தத்துவப் பொருள்களின் பொதுவும் சிறப்புமான உண்மைகளே நன்ஞானமாம். அதன் இலக்கணங்களை அடைதல் நற்காட்சியாம். அவற்றில் தெளிந்து இருநிலையிலும் சிறிதும் வழுவாது ஒழுகுதல் நல்லொழுக்கமாம். இம் மூன்றுமே மும்மணிகள் எனப்படுவன. இவைகளின் உதவியால் உயிர்கள் பிறவிச்சூழலில் தப்பிப் பேரின்பம் அடைவதே வீடு என்பது சமண தத்துவக் கொள்கை. இங்ஙனம் அடைந்தவர்களே தீர்த்தங்கரர்கள். இவர் காட்டிய நெறியே சின ஆகமம்.

பௌத்த நெறி

டாக்டர் சோ. ந. கந்தசாமி
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இந்தியச் சிந்தனையாளரின் நிரலில் புத்தர்பிரான் நிலையான இடத்தை எய்தியவர். இந்துவாகப் பிறந்த அன்னார், இந்து மதத்தில் காணப்படும் குறைகளையும் கொடுமைகளையும் களைந்து புதியதோர் வாழ்க்கைமுறையினை மக்களுக்கு வழங்கினார். புத்தரின் சிந்தனைச் சாரத்தினைத்தான் "பௌத்தம்" எனத் தொகையாகச் சொல்லுகிறோம்.

புத்தரின் தனித்தன்மை

புத்தரின் பொருள்பொதிந்த கொள்கையினைப் "போதம்" என்றே புகன்றனர். போதம் என்ற சொல் உணர்ந்து கொள்ளற்குரியது எனப் பொருள்படும். வேதம் என்பதோ எனின், அறிந்து கொள்ளற்குரியது எனப்பொருள் பயக்கும். தெளிந்த உள்ளத்தில் சுடர்விட்டுத் தோன்றிய புத்தரின் பொன்மொழிகளை வேதவிப்பிரர்கள் கூட விழைந்தேற்றுக் கொண்டனர். வேதங்கள் கற்பித்த வேள்விகளையும் உயிர்க்கொலையினையும் வன்மையாகக்கண்டித்த முதல் இந்தியர் புத்தரே. சாதிபேதத்தினைச் சாடிப் பிறப்பொக்கும் எனச் சமத்துவம் பேசிய முதல்வரும் அவரே. மனிதனின் உயர்வு தாழ்விற்கு அவன் ஆற்றும் வினைகளே காரணமென விளம்பிய பிறகு, பிறப்பினால் ஏற்றம் இறக்கம் கற்பித்தலின் பிழையினைத் தெளிவுறுத்தினார். சடங்குகளையும் சம்பிரதாயங்களையும், மூடநம்பிக்கைகளையும் முற்றிலும் புறக்கணித்த இந்திய நாட்டுச் சாக்ரட்டீசு புத்தரே யாவர். இறைவன் உண்டு, இல்லை என்ற இரு மாறுபட்ட கோட்பாட்டிலும் ஈடுபட்டு இடர்ப்படாமல், அன்றாட வாழ்க்கையில் தனி மனிதன் பின்பற்றற் குரிய ஒழுக்குகளை வரையறுத்தார். அப்பாலைத்தத்துவத்திலும், தருக்க முடிச்சுக்களிலும், அண்ட அமைப்பியல் ஆய்விலும் காலத்தைக் கழிக்காமல் சீலத்தையே போதித்தார். உலக வரலாற்றிலேயே, முதன்முதல் கொள்கையைப் பரப்புதற்குச் சங்கம் என்ற இயக்கத்தைத் தோற்றுவித்த சிறப்பும் புத்தர்க்கு உண்டு.

பிடகம் - தொகைநூல்

புத்தரின் போதனைகள் அவர் மறைவிற்குப்பின் சீடர்களால் பிடகங்களாகத் தொகை செய்யப்பெற்றன. ஆண்டில் முதிர்ந்த உபாலி விநய பிடகத்தையும், புத்தரிடம் அன்பில் முதிர்ந்த சீடர் ஆனந்தர் சுத்த பிடகத்தையும் அறிவில் முதிர்ந்த மகாகாசிபர் அபிதம்ம பிடகத்தையும் உருவாக்கினர். இம் மூன்றினையும் திரிபிடகம் என்பர். அசோகர் காலத்தும், அவர்க்கு இருநூறு ஆண்டுகள் தாண்டி இலங்கை மன்னன் வட்டகாமணியின் காலத்தும் செப்பம் பெற்றுப் பிடகங்கள் எழுத்துரு எய்தின. பிடகம் என்ற சொல்லிற்கு (ஏடுகளடங்கிய) கூடை என்பது பொருள். மணிமேகலை என்னும் பௌத்தக் காப்பியத்தில் 'பிடகநெறி' என்ற தொடரும் சம்பந்தர் தேவாரத்தில் 'பிடக்கு' என்ற சொல்லும் வருதல் காணலாம். மகாயான பௌத்தத்தைச் சார்ந்த யோகாசாரர்கள் புதுப் பிடகங்களை அமைத்துக் கொண்டவர்கள். தமிழ் நூல்கள் சுட்டும் பிடகம் இருசார் பௌத்தத்திற்கும் உரியனவாதல் வேண்டும்.

இருபெரும் பிரிவு

பௌத்தப் பேரறிஞர்களாகிய தேரர்களின் கருத்துமுரண்பாடுகள் காரண

மாகப் புத்தரின் மறைவிற்குப் பின் பல கிளைநெறிகள் தோன்றின. இவற்றைத் தேரவாதம் அல்லது ஈனயானம் என்றும் மகாயானம் என்றும் இருபெரும் பிரிவிற்குள் இணைத்துக் கூறலாம். மாற்றம் மிகாத பிடக பௌத்தத்தைப் பின் பற்றுவோர் ஈனயானர் என்றும், ஏனையோர் மகாயானர் என்றும் அறிதல் வேண்டும். முன்னவர்க்குப் பாலிமொழியும் பின்னவர்க்கு வடமொழியும் கருத்து விளக்கக் கருவியாயமைந்தன. முன்னவர் தம வினையும் பின்னவர் தொண்டினையும் உய்யும் நெறியாக உணர்த்தினர். இந்து மதத்தினை எதிர்த்துப் புதுநெறி வகுத்த புத்தரின் மதத்தில், பிற்காலப் பிட்சுக்கள் பல இந்துமதக் கொள்கைகளைப் புகுத்தி விட்டனர். மகாயானத்தில் தத்துவம், தருக்கம், தியானம், பக்தி, தந்திரம் முதலிய துறைகள் வளர்ந்தன. பாமர மனிதனுக்குத் தன்குறைகளை முறையிட இறைவன் தேவைப்பட்டான். ஆதலின், இந்து சமயத்தின் உந்துதலால், புத்தரே முதற்கடவுள் என்றும், அவர் ஒரேகாலத்தில் தருமகாயம், சம்போககாயம், நிர்மாணகாயம் என்ற மூன்று வடிவுகளுடன் விளங்குகிறார் என்றும், எல்லாத் தெய்வங்களும் புத்தரின் ஆணையின்கீழ் ஏவல் புரிகின்றன என்றும் மகாயானம் முழங்கிற்று. அரிய சீலங்காக்கும் அருகர்கள் சிலர்க்கே நிர்வாணப்பேறு கிடைக்கும் எனக்கூறிய ஈனயானம் போலாது புத்தரைப் போற்றும் அனைவர்க்கும் உய்தி உண்டு என்னும் பேரருட் கொள்கையும், மறங்கடிந்து அறம் நிலை நிறுத்த அவ்வப்பொழுது புத்தர் தோன்றுவார் என்னும் அவதார நம்பிக்கையும் மக்கள் தொண்டே உய்யவழி எனக் கொண்ட போதி சத்துவக் கொள்கையும் மகாயானத்தில் சிறப்பிடம் பெற்றன. புதிய இலக்கியங்கள், காவியங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலியன தோன்றவும் மகாயானம் காரணமாய் அமைந்தது.

இந்தியாவில் தோன்றி அயல் நாடுகளில் மிகுதியாகப் பரவிய ஒரே சமயம் பௌத்தமே என்பது எண்ணத்தக்கது.

கொள்கைகள்

புத்தர் புகட்டிய இன்றியமையாக் கொள்கைகளாக நான்கு வாய்மை, பன்னிரு சார்புகளின் தோற்ற நீக்கம், சீலங்கள் என்பனவற்றைக் கூறலாம்.

நான்குவாய்மை

மனிதப் பிறவியின் அன்றாட வாழ்வில் துன்பமே விஞ்சி நிற்கக் கண்ட புத்தர், துக்கத்தை முதல் வாய்மையாக எண்ணினர். பசி, பிணி, பகை, கொலை, களவு, காமம், வெகுளி, மயக்கம் என்ற கொடுமைகளால் முற்றுகையிடப் பெற்ற மக்களின் நிலையினை உன்னிப்பாக உற்று நோக்கிய புத்தர் 'துக்கத்தோற்றம்' என்ற உண்மையினை உணர்ந்தார். பற்றுதான் இதற்குக் காரணம் எனக்கண்டார். பிறப்பினால் துக்கம் தோன்றுமெனின் பிறவாமையினால் துக்க நிவாரணம் கூடும் என எண்ணினர். துக்கம் போக்கும் வழியையும் வகுத்துரைத்தார். மக்களின் துயரைத் துடைக்க மாயமந்திரங்களையோ, செபதபங்களையோ, கோயில் வழிபாடுகளையோ புத்தர் கூறவில்லை. நற்காட்சி, நல்லெண்ணம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லாரிணக்கம் என்ற எட்டு நெறிகளையுமே ஏற்ற வழியாக எடுத்தியம்பினர். எண்ணம், சொல், செயல்களைத் தூய்மைப்படுத்தும் இந்நெறிகள்தாம், பௌத்தத்தை ஒரு செயல்முறைச் சமயமாக (Practical religion) விளங்கச் செய்கிறது. புலனின்பத்தில் தொடக்குற்று அழுந்திக்கிடக்கும் உலோகாயதக் கொள்கையும், புலனின்பங்களை முற்றிலும் முனிந்து, நோன்பு, தவங்களால் வறுத்தும் வதைத்தும் புலனொடுக்கம் செய்யும் வைதிகக் கொள்கையும் அறவே கடிந்து, இரண்டிற்கும் இடைப்பட்ட வகையில் புத்தர் அமைத்துக் கொடுத்த எண்ணெறிக் கொள்கையினை நடுப்பாதை (Middle-path) என்றும் நவிறல் உண்டு.

நான்கு வாய்மைகளையும் துக்கம், நிரோதம், சமுதாயம், மார்க்கம் என்று

பாலி, வடமொழி நூல்கள் பகர்கின்றன. இவற்றைத் துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் எனவும் இயம்புவர். இந்நான்கினையும் நோய், நோய்த்தோற்றம், நோய் நீக்கம், நோய்நீக்கவழி எனத் தமிழ்ப் பௌத்தர்கள் சாற்றினர். பிறர்படும் நோய் கண்டு தான் நோயுறும் புத்தர் பிரானைப் 'பரதுக்க துக்கி' எனப்பகர்வர். பௌத்த நூல்கள் பலவும் 'மருத்துவன்' என்றே புத்தரைப் போற்றுதல் காண்க. மக்களின் நோய்நாடி, முதல்நாடி, அது தணிக்கும் வாய்நாடி வழிகாட்டிய மருத்துவன் புத்தரே. பௌத்தம் சுட்டும் நால்வகை வாய்மைகளும் சாங்கியம், யோகம், நியாயம் முதலிய தத்துவங்கள் சாற்றும் உரோகம், உரோக ஏது, ஆரோக்கியம், பைசஜ்ஜியம், சம்சாரம், சம்சார ஏது, மோக்கம், மோக்கஉபாயம் என்ற நால்வகை நெறிகளுடன் ஒத்துப் போதல் உணரலாம். இங்ஙனம் காணப் படும் பொதுக்கூறுகள் எல்லாம் தேசியத்தத்துவக் கிடங்கின் உடைமை என்று உணர்தல்வேண்டும்.

பௌத்தத்தின் இருபெரும் பிரிவும் "நான்குவாய்மை"க் கொள்கையினை விரிவாக விளக்கியுள்ளன. தேரவாதத்திற்குரிய சுத்த பிடகத்தின் திகநிகாயத்திலும், மஜ்ஜிம நிகாயத்திலும், சம்யுத்த நிகாயத்திலும் புத்த வசனமாக இக் கொள்கைவந்துள்ளது.மகாயான பௌத்தத்திற்குரிய இலலிதவிஸ்தரம், மகாவியுற்பத்தி, தருமசங்கிரகம், தசபூமிக சூத்திரம், மூலமாத்தியமிககாரிகை முதலியனவும் இதனைத் தெளிவாக விளம்புகின்றன.

பிரதித்தியசமுப்பாதம்
(Dependent origination)

பிறப்பு இறப்புக்குரிய காரணங்களையும் தொடர்புகளையும் மெய்புணர்வினால் ஆராய்ந்து கண்ட புத்தர் பிரதித்திய சமுப்பாதம் எனப்படும் சார்பிற்றோற்றக் கொள்கையினை வெளியிட்டார். இக் கொள்கையும் நான்குவாய்மைக் கொள்கையுமே முதன் முதல் புத்தரால் போதிக்கப்பெற்றவையாகும். வேதநெறி உலகப்படைப்பினை உடன்பட்டது (Theory of creation) பரம்பொருள் உலகைப் படைத்தார் என்ற கருத்தினைப் புத்தர் உடன்படவில்லை. எப்பொருளும் தோன்றச் சார்புகள் (=நிதானங்கள்) காரணமாக உள்ளன. ஆதலின், ஒருபொருளை உண்டென்றோ இல்லையென்றோ உரைப்பது பிழை. எப்பொருளும் சார்பினால் தோன்றி மறைந்து தோன்றி மறைந்து தொடர்தலின் நிலைபேறான தன்மை இல்லை. தோன்றி மறைதல் என்பது இடையறவு படாமல் விளக்குச்சுடர் போலவும் ஓடும் நீர்போலவும் நிகழ்தலின் தோன்றுதல் மற்றதல் என்ற இரண்டிற்கும் இடையே நிறுத்தம் என்பது இல்லை. ஆதலின், புத்தரின் சார்பிற்றோற்றக் கொள்கை, முதற்காரணத்தை உடன்பட்ட கடவுட் கொள்கையினைப் புறக்கணித்து, ஒன்று தோன்ற ஒன்று சார்பாக உள்ளது என்ற சார்புக் காரணத்தைக் கொண்டது. செய்வோன் இல்லை, செயல் உண்டு எனக்கருதியதால் புத்தரை அநான்மவாதி என்று அழைப்பதுண்டு.

பன்னிரு சார்புகள்

சார்புச் சக்கரத்தில் பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, வேட்கை, பற்று, பவம், பிறப்பு, வினைப்பயன் என்ற பன்னிரண்டு நிதானங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று, அடுத்து வருவதற்குக் காரணம் எனின், முன்னிற்பதற்குக் காரியமாகவும் அமையும். பேதமையினை முதல்சார்பு எனக் கொள்ளுதல் கூடாது. வட்டமாகச் சுழலுமிடத்து எதுவும் முதல் இல்லை, முடிவில்லை. இவை ஒன்றன்பின் ஒன்றாகச் சார்ந்து தோன்றுதலின் துன்பம் விளைகிறது. காரணத்தைப் போக்கவே காரியமும் போகுமாதலின், பேதைமை நீங்கச்செய்கையும், செய்கை நீங்க உணர்வும் இங்ஙனமாக எல்லாச் சார்பும் நீங்கும் நிலையில் பிறவிச் சுழற்சியினின்றும் விடுதலைகிடைக்கிறது. அநான்மவாதியாகிய புத்தர் விடுதலையினைப் பெறுவது யார் என்ற வினாவிற்கு ஏற்ற விடையிறுத்திலர். பிறவாநிலைதான்

பேரின்பம், நிர்வாணம் எனப்பேசினர். தம்மபதம் கூட, 'நிப்பாணம் பரமம் சுகம்' என இயம்பியது. இதனையே சாத்தனர், 'பிறவார் உறுவது பெரும் பேரின்பம்' என்றூர். அந்நிலையை விளக்க இயலாது எனப் புத்தர் வாளா விடுத்தனர்போலும். இச்சார்புகளின் தன்மைகளைச் சாத்தனர் விரிவாக விளக்கியுள்ளார். விநயபிடகம், சுத்தபிடகம், புத்த கோஷரின் விசுத்தி மார்க்கம் முதலிய ஈனயான பௌத்த நூல்களும், புத்தசரிதம், மாத்திலமிக காரிகை முதலிய மாத்தியமிக பௌத்த நூல்களும், இலலிதவிஸ்தரம், இலங்காவதாரசாத்திரம் முதலிய யோகாசார பௌத்த நூல்களும் பிரதித்திய சமுப்பாதக் கொள்கையினைப் பாரித்துரைப்பனவாம். அஜந்தா ஓவியங்களில் பன்னிரு சார்புகள் பாமரர்க்கும் விளங்கும் வண்ணம் கருத்தோவியங்களாகத் தீட்டியிருந்த செய்தியும் நோக்கத்தக்கது. வள்ளுவர்,

"சார்புணர்ந்து சார்பு
கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரும் நோய்"

என இயம்பும் குறளில் புத்தரின் சார்பிற்றோற்றக் கொள்கை பதிந்துள்ளது காண்க.

சீலங்கள்

நால்வகை வாய்மையும், பன்னிரு சார்புகளின் தோற்றமும் விளக்கிய புத்தர் மன, மொழி, மெய்களின் ஒழுங்கிற்கு வகுத்தும் தொகுத்தும் வழங்கிய அறங்களே சீலம் எனப்படும். எண்வகை நெறியும் அறம்தான். பன்னிருசார்பில் ஒன்றுகிய செய்கையினைச் சுத்தபிடகம் அறததின் அடிப்படையில்தான் விளக்குகிறது. உடம்பினுல் விளையும் தீவினைகள் கொலை, களவு, காமம் என்பன; உரையினுல் விளைவன பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்ற குற்றங்களாகும்; உள்ளத்தால் உதிப்பன காமம், வெகுளி, மயக்கம் என்பன. இப்பத்துக் குற்றங்களையும் விடுதலே நல்வினை எனப்படும் என்று சுத்த பிடகம், மஜ்ஜிமநிகாயம், சம்மாதிட்டி சுத்தத்தில் விரிவாக விளம்பப்பெற்றுள்ளது. சாத்தனர் இப்பிடக நெறியினை அடியொற்றிப் பாடியுள்ளார் (மணி. xxx 64–81). இனி, தீவினை செய்யாமையுடன் சீலம், தானம் முதலிய நல்வினைகள் புரிதலும் புத்தரால் புகலப்பெற்றது. பிடக நூல்களிலும் பிற்காலத்து மகாயான நூல்களிலும் சீலங்கள் பத்தும் போதிசத்துவர் பின்பற்றற்குரியன என இயம்பப்பெற்றுள்ளது. இவற்றுள், கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, காமமின்மை, கள்ளுண்ணுமை என்பன ஐவகைச்சீலம் என்றும் இவை இல்லறத்தார்க்குச் சிறப்பாக உரியன என்றும் பௌத்தம் பகர்கிறது. இல்லறத்தாரைச் 'சாவகர்' என்றுதான் பிடகம் இயம்பும். தம்மபதம் 'புத்தசாவக' எனப் பல இடங்களில் சுட்டும் இல்லறத்தார்க்கு சீலஉபாசகர்' என்ற குறியீடும் உண்டு. ஐவகைச் சீலத்துடன் உயர்ந்த பீடத்தில் கிடவாமை, மணப்பொருள்களை நுகராமை, பொன், வெள்ளி முதலியன நாடாமை, பாடல் ஆடல் முதலியன விழையாமை, புலருமுன் புசியாமை என்ற ஐந்தும் சேர்ந்து பத்துச் சீலங்களும் பிட்சுக்களுக்குரியன என்று அறிகிறோம். ஆதலின், இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரிய ஒழுகலாறுகளை வரையறுத்த புத்தரின் வழியில் வள்ளுவரும் அறத்துப்பாலில் பல அதிகாரங்களை அமைத்தனர் எனக் கருதலாம். சீலங்களை வேறெரு வாய்பாட்டிற் கூறினுல் "பாரமிதை" எனப் பகர்தல் வேண்டும். இச் சொல் முழுமை பெறுதல், நிரப்புதல் எனப் பொருள் தரும். பிடகங்களில் பாரமிதைகள் கூறப்பெறினும், மகாயான பௌத்தநூல்களில் தான் கூடுதலான குறிப்புக்கள் காணப்படுகின்றன. சீலத்தின் பெருக்கமாய் அமைந்த பாரமிதைகளையும் பத்துஎனக் கொண்டனர். அவை தானம், சீலம், சாந்தி, வீரியம், தியானம், பிரஞ்ஞை, உபாயம், பிரணிதானம், பலம், ஞானம் என்பனவாம். இப்பத்தும் முழுமையாகப் பெற்றவரே போதிசத்துவராகிய மக்கள் தொண்டர் என மதிக்கப் பெறுவர்.

பௌத்தத்தின் இந்தியமையாப் பிரிவுகள்

தேரவாத பௌத்தத்தில் ஒன்பதின் மிக்க குறும்பிரிவுகள் உள்ளன. எனினும், சௌத்திராந்திகம், வைபாடிகம் என்பனவே பெருஞ்சிறப்புப் பெற்றவை. சூத்திரபிடகத்தைப் பின்பற்றியதால் **சௌத்திராந்திகர்** எனப் பெயர் எய்தினர். புலால் உடன்பட்ட பௌத்தப் பிரிவினர் சௌத்திராந்திகர்கள் என்பதைச் சித்தியார் பரபக்கத்தாலும் அறியலாம். இவர்கள் காட்சிப் பொருள் உண்மைவாதிகள் (Realists). பொருள்கள் யாவும் கணத்தன்மையின; எனின், தொடர்ந்தும் விரைந்தும் சுழன்று கொண்டிருத்தலின் கணத்தன்மை என்ற எண்ணம் எழுவதில்லை. எல்லாப்பொருள்களும் கணப்பொழுதுடைய தர்மங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. கணத்தன்மை மாத்திரமே உண்மை "யத்சத்தத்க்ஷணிகம்' என்பதே அவர்கள் கொள்கை. சௌத்திராந்திகத்தை உருவாக்கியவர் குமாரலப்தர். இவர் நாகார்ச்சுனரின் காலத்தவர் (கி. பி. 200) **வைபாடிகம்** அபிதம்ம பிடகத்தை அடிப்படையாகக் கொண்டது. இப்பிடகத்தின் உரையினை மேற்கோளாகக் கொண்டமையின் .இப் பெயர் எய்திற்று.

மகாயான பௌத்தத்திலும் ஒன்பதின் மிக்க குறும்பிரிவுகள் இருப்பினும், மாத்தியமிகம்,.யோகாசாரம் என்பனவே சிறந்தன. முன்னதை நிறுவியவர் நாகார்ச்சுனர்; பின்னதை ஆசங்கர், வசுபந்து என்ற சகோதரர்கள் நிறுவினர்.

உலகம் ஒரு மாயைத்தோற்றம். அது உள் பொருளோ எனின் இல்லை. இல் பொருளோ எனின் இல்லை. உண்மை இன்மை இரண்டிற்கும் இடைப்பட்ட ஒருவித ஓரக்கொள்கையினர். இவர்களை "மாயாவாதிகள்" என்றே மணிவாசகர் மொழிந்தனர்.

யோகநெறிநின்று, உள்ளத்துள் உருகிப் புத்தரின் அருளைப்பெற்றுய்ய வழிகாண்பது யோகாசாரம். இவர்கள் கருத்துப் பொருள் உண்மை வாதிகள் (Idealists). உள்ளத்தின் விரிவே உலகமாகத் தோற்றுகிறது. 'சர்வம் புத்திமயம் ஜகத்' என்பது அவர் கொள்கை. புறவுலகினைப் பொய்யெனத்தள்ளும் யோகாசாரராகிய விஞ்ஞானவாதிகள் மனோவிஞ்ஞானமாகிய கந்த விஞ்ஞானத்தையும், அது அடங்கியிருக்கும் வியாபகப்பொருளாகிய ஆலய விஞ்ஞானத்தையுமே உள்பொருளெனக் கொண்டனர். இவ்விரண்டும் முறையே சீவாத்துமா, பரமாத்துமாவுடன் ஒப்பிடத்தக்க வகையில் அமைந்ததாலும், உலகம் சூனியமயம் என்ற மாத்தியமிகப் பௌத்தத்தை எதிரொலித்ததாலும் தான், சங்கரரைப் பிற்காலத்தார் பிரசன்ன பௌத்தர் என நகையாடினர்.

தேரவாதத்திற்குரிய சௌத்திராந்திகமும், மகாயானத்தின் பிரிவாகிய யோகாசாரமும் இணைந்து .சௌத்திராந்திக யோகாசாரம் என்ற ஒட்டுப்பிரிவினைப்பதியம் செய்தவர் வசுபந்து என்பவர். இவரை இரண்டாம் புத்தர் எனப் போற்றுவர். திக்நாகர், தருமபாலர், தருமகீர்த்தி முதலியோர் இப்பிரிவின் பெருந்தூண்கள். இவர்கள் பௌத்த தருக்கத்தைப் பெரிதும் பேணிவளர்த்தவர்கள். மணிமேகலை ஆசிரியர் பழமையும் புதுமையும் பிணைந்த இப்புதுநெறியினர் என்பது என் துணிபு. பௌத்தத்திற்குத் தென்னாட்டாரின் காணிக்கை கணிசமானது.

இதுகாறும் எழுதியவாற்றான் புத்தர் பிரானின் தனித்தன்மையும், காலந்தொறும் வளர்ந்து வந்துள்ள பௌத்தப் பெரும் பிரிவுகளின் கொள்கைகளும் பிறவும் ஓரளவு தெளிவுறுதல் ஒருதலை.

இசுலாம் நெறி

பேராசிரியர் மு. அப்துல்கறீம், எம். ஏ.
தமிழ்த்துறைத் தலைவர்
காதர்முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்

அமைதி நோக்கம்

இசுலாம் என்ற அறபுச் சொல் அடிபணிதல், வழிபடுதல் எனப் பொருள் தரும். முழுக்க முழுக்க இறைவனுக்கு — அவன் ஆணைக்கு — வழிபடுதலே இசுலாம் குறிக்கும் பொருளாகும். யாரெல்லாம் இறைவனை முழுமையாக நம்பி, அஞ்சி, இணை வைக்காது அவன் விருப்பே பெறலரும் பெருஞ் செய்தி என்று கருதி, எப்போதும் அவன் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, மீறாது, அவன் தூதுவர் காட்டிய வழியில் நடக்கும் ஆசையும் ஆற்றலும் கொண்டு வாழ்கின்றனரோ அவரெல்லாம் முஸ்லிம்கள் (நல்லடியார்கள்) எனக் கருதப்படுவர். இவ்வழி நடக்கும் மாந்தரெல்லாம் குழுமி வாழும் கூட்டு வாழ்வில் பூசல் பொறாமை இன்றி, நல்லெண்ணம், ஒருவருக் கொருவர் உதவி என்ற நிலை வளரும். அப்போது அமைதி நிலைக்கும். ஆகவே இசுலாம், மக்கள் வாழ்வில் அமைதி ஏற்படுத்தும் ஏற்றமுடையது என்பதைக் குறிக்கும் வகையில் 'இசுலாம் என்ற அறபுச் சொல் அமைதி (சாந்தி, சமாதானம்) என்ற பொருளையும் குறித்து நிற்றல் சிறப்பு. இசுலாமிய வாழ்க்கை நெறி, மக்கள் வாழ்வில் நிலைத்த அமைதியை ஏற்படுத்தும் நோக்கமுடையது.

இசுலாமிய சமயத்தின் பெயரே அச்சமய அடிப்படையை — குறிக்கோளை அறிவித்து நிற்கின்றது. இப்பெயர். இச்சமயம் பரப்பிய சான்றோர் பெயரையோ இச்சமயம் முதற் கண் பரவிய நாட்டின் பெயரையோ தழுவி அமையாப் புதுமை யுடையது. இதனால் இச்சமயம் குறிப்பிட்ட தனிமனிதர், நாடு இவற்றோடு தனித் தொடர்பு இன்றி, உலகின் எம்மூலையில் வாழ்வாரும், எம்மொழி பேசுவாரும், எந்நிலத்துப் பிறந்தாரும், எந்நிறமுடையாரும், இறை நம்பிக்கை (ஈமான்) கொண்டு, இறைத் தூதர் காட்டிய வழியில், இறை விருப்புக் குரிய வாழ்வை மேற் கொண்டால் இசுலாத்தைத் தழுவி விடுகின்றனர்.

மூலமந்திரம்

இசுலாத்தின் இணையற்ற மூல மந்திரம் "அல்லாவைத் தவிர வேறு இறைவன் இல்லை; அவனுடைய நல்லடியாராகவும் திருத்தூதராகவும் இருப்பவர் முகம்மது நபி என்பதேயாகும். இம்மூல மந்திரத்தில் இரு செய்திகள் பேசப்படுகின்றன. ஒன்று இறையொருமை; மற்றொன்று இறைத்தூதர் பற்றியது. இறைவனை ஒருவன் என்றும் அவனைப் பிறருடன் இணைக்காது, தனித் தலைவன், அனைவருக்கும் உயர்ந்தவன், பிறப்பிறப்பில்லாதவன், ஆணும் பெண்ணும் அல்லாதவன், அருளும் அன்பும் நிறைந்தவன், அனைத்து வல்லமையும் பெற்று அனைத்தையும் படைத்துக் காத்து நிருவகித்து வருகின்றவன் என அவனை - அவன் பெருமையை - தலைமையை அறிந்து நம்புதல் இசுலாத்தின் உயிராக இருக்கிறது. இவ்வறிவு இன்றேல், இறையுண்மையும் தன்னிலையும் தெளிவின்றி ஒருவன் இறையடியவனாதல் இயலாது. இவ்வுயிர்ச்செய்தி,

இறை நம்பிக்கை (ஈமான்) உயிரினும் மேலானதாகக் கருதப்படுகிறது. இசுலாத்துக்கும் இறை நம்பிக்கைக்கும் உள்ள தொடர்பு, மரத்துக்கும் விதைக்கும் உள்ள தொடர்பு என விளக்கத்துக்காக உவமைப்படுத்திக் கொள்ளலாம்.

நெறி

இறைவனை யறிந்து அவனை வணங்கி வழிபட்டு வாழ்தலே இசுலாமிய நெறியென்று தெளிந்ததும், அவன்காட்டும் நெறி எது? என்ற வினா உடன் எழும். இசுலாம் காட்டும் வாழ்க்கை நெறி மனிதனால் வகுக்கப்பட்டதன்று. சிற்றறிவு உடைய மனிதன், எக்காலத்துக்கும் பொருந்தும் முழுவதும் பழுதற்ற முழுநெறி ஒன்றினைப் படைக்கும் ஆற்றலற்றவன் என்பதறிந்த இறைவனை மனிதனுக்கு வாழ்க்கை நெறியினை வகுத்துத் தந்துவிட்டான். அவ்வாழ்க்கை நெறி, இறைவன் இறுதித்திருமறையாம் அல் 'குர் ஆன்' இடத்தும், அவன இறுதித்தூதராம் முகம்மது நபியின் வாய் மொழிகளிலும் வடித்துரைக்கப் பட்டிருக்கிறது. மனிதன் இம்மை வாழ்வில் எழும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் தெளிவான எளிதான வழியும், எல்லாச் சிக்கல்களுக்கும் நெறியான முறையான தீர்வும் இவ்வாழ்க்கைத் திட்டத்தில் இடம் பெறுகின்றன. இல்லறம், கணவன் மனைவி - ஒழுக்கம், திருமணச் சட்டங்கள், பெற்றோர் மக்கட்குச் செய்ய வேண்டிய கடமைகள், கல்விமுறை, பொருளியல் திட்டங்கள், ஈகை, வாணிக முறை, அரசியல் நெறி, பன்னாட்டுத் தொடர்புகள், தனிமனித ஒழுக்கம் முதலிய வாழ்வின் அனைத்துத் துறைகட்கும் விரிவான விதிமுறைகள் அமைந்துள்ளன. இவ்வாழ்க்கைத் திட்டத்தைப் பின்பற்றி ஒழுகுவோர் இசுலாமிய நெறி நிற்போராவர்.

குர் ஆன்

இவ்வாழ்க்கைத் திட்டத்தை உலகுக்கு இறைவன் எவ்வாறு வழங்கினான்? முற்ற முடிந்த திருமறையின் படி ஒன்றை அறபு நாட்டுக்கூரையில் போட்டு விடவில்லை. மக்களுக்கு வழிகாட்டல்கள் நிரம்பிய திருமறை, திருத்தூதர் மூலமாகவே வழங்கப்படுகிறது. இது இறக்கிவைத்தல் (வஹீ) எனப்படும். உலக நலத்துக்காக இறைவன் முகம்மது நபி அவர்கட்கு இறக்கிய திருவசனங்களின் தொகுப்பே அல் 'குர் ஆன்' ஆகும். இது கறையற்ற நிறையுடைய இறைமொழி என நம்புதல் இறைநம்பிக்கையின் மூன்றாவது கூறாகும். இவ்விறைமொழிகளைப் பெற்று மக்கள்முன் வைத்து விளக்கந்தரும் ஆசானாக மட்டுமன்றி அவற்றைப்பற்றி நடந்து அழகிய முன் மாதிரியாகி நல்லடியாராகவும் நற்றாதராகவும் விளங்கிய முகம்மது நபி மீதும் அவருக்கு முந்திய பிற தூதர்கள் மீதும் வைக்கும் நம்பிக்கை இறை நம்பிக்கையின் நாலாவது கூறாகும். "குர் ஆன்" என்ற இறுதி மறையின் மீதும், இதற்கு முந்திய மூன்று பெருமறைகள், நூற்றுக்கணக்கான இறைக்கட்டளைகள் இவற்றின் மீதும் நம்பிக்கை வைத்தல் இறை நம்பிக்கையுடையார் கடனாகும். முகம்மது நபி அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு வாழும் மக்களினம் அவருக்கு முன்பு இறைவனால் உலகின் பல பகுதிகட்கும் அனுப்பப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் மேலான திருத்தூதர்கள் மேலும் நம்பிக்கை வைக்கக் கடமைப்பட்டுளது. முந்திய மறைகளும், மறை கொணர்ந்த தூதர்களும், ஓர் இறைவனாலேயே அனுப்பப்பட்ட உண்மை உணர்வோடு அவ்வெல்லோரையும் நம்பலும், மதித்தலும் கடனாயிற்று. "எல்லா இனத்தாருக்கும் இறைதூதர் அனுப்பப்பட்டு உள்ளார்". (யூனூஸ் 5). "இறை தூதர் அனுப்பப்படாத மக்களினம் உலகெங்கும் இல்லை" (பாதிர் 3) என்ற இறைக் கருத்துக்கள், பெருமானாருக்கு முன்பே உலகைத் திருத்த உத்தமர் பலர் வந்தனர் என்ற உண்மைகாட்டும். 'குர் ஆன்' நிறைவான இறுதி மறையாகவும், பெருமானார் நிறைவுபெற்ற இறுதித் தூதராகவும் இறைவனால் அறிவிக்கப்பெற்று, இசுலாம் என்ற சமயம் நிறைவாக்கப்பட்டது; இறையருளும் உறுதிப்படுத்தப்பட்டது.

வாழ்க்கைத்திட்டம்

வாழ்க்கைத்திட்டம் எல்லாந்தழுவிய முழுமையுடையதாகவும், மக்களால் பின்பற்றுதற்குரிய செயல்முறைத்திட்டமாகவும் விளங்குகிற தன்மைக்குத் திருத்தூதர் தாமும் தன்னுடன் வாழ்ந்த தோழர்களும் இதன்படி வாழ்ந்து காட்டிச் சான்று பகர்ந்திருத்தல் சிந்திக்கத்தக்கதாகும். ஆகவே திருத்தூதர் வாழ்ந்து காட்டியபடி வாழ்தலே இசுலாமிய வாழ்வாகும். அத்திருத்தூதர் மனிதப் புனிதராக விளங்கி, நற்குணங்களின் நாயகமாகத் திகழ்ந்து, இம்மை வாழ்வை மண்ணியமணியாக மாற்றிக் காட்டிய மாணிக்கமாகத் திகழ்கின்றார்கள் எனக் காட்டுகிறது. இறைவன் திருமறை அவரை மனிதரே (வணக்கத்துக்குரியவரல்லர்) என உறுதிப்படுத்தி, அவர் மக்களின் வழிகாட்டி, இறைச் செய்திகளின் விளக்கவுரையாளர் என வரும் செய்திகள் ஐயத்திற்கிடமின்றி இறைமறையில் தெளிவாக்கப்பட்டு விட்டமையால், முந்திய இறைத்தூதர்கள் பற்றி எழுந்த இழிநிலை, தூதரையே இறைவனாக்கிவிட்ட வழிகேடு முதலியன தவிர்க்கப்பட்டு விட்டன.

மக்கட்கு வழிகாட்டி மனிதருக்குள்ளேயே இருக்கவேண்டும் என்பதைத் திருமறை தெளிவுறுத்துகிறது. இறைவனின் ஏவலர்களாகிய வானவர்கள் (மலக்குகள்) நிலத்தில் வாழ்ந்திருந்தால், மனித ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட வானவர் ஒருவர் தூதராக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் மக்களே மண்ணில் வாழ்வதால், அவர்களைப்போன்ற மனிதர் ஒருவரே இறைத்தூதராகத் தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்ற உண்மையை இறைமொழி உறுதிப்படுத்துகிறது. ஆகவே நிறைவுடைய வாழ்க்கைத் திட்டம் வகுத்தளிக்கப்பட்டதுமன்றிக், குறைஇல்லா மனிதப் புனிதர் ஒருவர் வழி அது இறக்கப்பெற்றதாலும், அவரே சொல்லியதைச் செயலிற்காட்டி வாழ்ந்து காட்டியமையாலும், மக்கட்கு எட்டுணையும் ஐயமின்றி இசுலாமிய வாழ்க்கை நெறி விளக்கப்பட்டு விட்டது.

இந்நெறிக்கு-இறைவன் ஆணைக்கு எப்பொழுதும் - எந்நேரமும் கட்டுப்பட்டு நடத்தலே இறையடியான் பணியாகும். இப்பணிக்கே இறைவணக்கம் (இபாதத்) எனப்பெயர் குறிக்கிறது இசுலாம். இறைத் தொழுகை மட்டும் இறைவணக்கம் - இறைநெறி - என்று குறிக்கப்பெறவில்லை. இறைத்தொழுகை (சலாத்) ஒருவனை எந்நேரமும் இறைவணக்கம் செய்வோனாக இறையடியானாக மாற்றும் என்பதே இசுலாமியக் கொள்கை. தொழுகை வழி இறைவனுக்கு நன்றி செலுத்திவிட்டு, தொழுகை முடிந்ததும் தன்வழி நடக்க இசுலாத்தில் இடமில்லை. தொழுகையின் போது காட்டிய இறை நம்பிக்கை, உளத்தூய்மையும் புறத்தூய்மையும் எப்பொழுதும் காட்டப்படவேண்டும். அவனுடைய அனைத்துச் செயல்கள், தொடர்புகள் எல்லாவற்றிலும், இறை நெறி பின்பற்றப்படுதலே இறைவணக்கம் என இயம்புகிறது இசுலாம்.

இம்மையும் மறுமையும்

வாழ்க்கைத் திட்டத்தை வகுத்தளித்த இறைவன், அதனைப் போற்றியொழுகியோருக்குப் பரிசும், புறக்கணித்தோருக்குத் தண்டனையும் உண்டென்று இறைவேதத்தின் நூற்றுக் கணக்கான இடங்களில் அறிவிக்கின்றான். அச்சமூட்டி எச்சரிக்கும் பணியினையே திருத்தூதர் செய்யவேண்டும் என்றும் பன்முறை பகர்கின்றான். இறைவழி நிற்போருக்கு வாழ்க்கையின் முடிவை விளக்கி, ஆறுதலும் தந்து கலங்கரை விளக்கமாக நிற்பது இறுதித் தீர்ப்பு நாள் பற்றிய நம்பிக்கையாகும். மறுமை வாழ்வுபற்றிய நம்பிக்கை, இறைவன் நற்பரிசும், கொடுந்தண்டனையும் நடைமுறைக்கு வரும் நாள்பற்றிய நம்பிக்கை (ஆகிரத்) இறைநம்பிக்கையின் இறுதிக் கூறாகும். இம்மறுமை நம்பிக்கை இன்றேல் நல்வழி, அல்வழி பற்றிய தத்துவம் முடிவின்றிக் காணப்படும். மனிதப் படைப்பின் நோக்கமும் பொருளற்றதாகி விடும். மனிதனை இறைவணக்கத்துக்காகவே (இபாதத்) படைத்திருப்பதாக இறைவன் மொழிகின்றான்.

(1 : 56) படைத்தவன் காட்டிய நெறி நிற்போருக்கும் நிற்காதோருக்கும் முடிவு மறுமையிலேயே உண்டு. வாழ்வு மறுமை யோடே முழுமை எய்துகிறது என்ற தத்துவம், நல்ல ஒழுக்கமுடையோர் தாழ்வும், வறுமையும் நிலையானது அன்று என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது. நெறி கடந்தோர், நீதி பிறழ்ந்தோர் இவ்வுல கில் வளம்பெறினும் அது நிலையானதன்று என்ற அச்சத்தையும் ஊட்டுகிறது.

மறுமை வாழ்வை நிலையானது, மேன்மையுடையது என இசுலாம் இயம்புவதால், அதனையே நினைந்து இகழப்படவில்லை. மறுமையின் மேன்மைக்கு இம்மையே அடித்தள மாகிறது. செம்மையே மறுமையின் பெருமையாகும் என ஐயமின்றி அறிவுறுத்தப்படுகிறது. நமக்கு வாய்த்த வையத்து வாழ்வை முழுமையுறச் செய் தால், இறைவன் கையிலுள்ள வானத்து வாழ்வு மேன்மையுடையதாக்கப்படும் என்பதே இசுலாமிய விளக்கமாகும். அகம் புறம் இரண்டும் ஒக்க மதிக்கப் பெற்று எது ஒன்றும் இகழப்படாத போது, இம்மை வாழ்வு முழுமைபெறும். அது போன்று, இம்மையும் மறுமையும் இரண்டும் பேணப்படும் போது மனித வாழ்வு முழுமை பெறும். ஆகவே மறு மையே நினைந்து கைகட்டி உலகியலி னின்று ஒதுங்கி நிற்கும் துறவும், இம்மை இகழ்வும், இசுலாத்தில் வெறுக்கப்படுகின் றன. உலகியலிலேயே மூழ்கி, மறுமை நினைப்பையே மறத்தலும் இசுலாத்தில் இகழப்படுகிறது. நாணயத்தின் இருபக் கங்கள் போல இம்மையும் மறுமையும் இணைய வேண்டும் என்பதே - ஒன்றை ஒன்று நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே - இசுலாமிய தத்து வம். 'எவன் கையாலும் நாவாலும் நானி லம் வலிவும் பொலிவும் பெறுகிறதோ அவனே நல்லடியான்' என்பது நபி மொழி. தன் உழைப்பினால், தன் தாயை யும், உற்றவரையும் பேணிக் காப்போரே நம்முள் உயர்ந்தோர் என்ற நாயகத்தின் கருத்தும், உலகியலில் உயர்ந்த நாட்டம் செலுத்தும் இசுலாமியப்போக் குக் காட்டும்.

அறிவும் செயலும்

இசுலாம் அறிவாகவும், செயலாகவும் தோற்றம் தருகிறது. அறிவு அடிப் படை; செயல் அதன் தொடர்ச்சி. இசுலாமிய மாளிகை இறை நம்பிக்கை (ஈமான்) என்ற அடித்தளத்தின் மேலும், தொழுகை, ஏழை வரி, நோன்பு, மக்காப் புனிதப்பயணம் என்ற தூண் களினாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. இறை நம்பிக்கை அறிவு; பிற நான்கும் செயல். தொழுகை, மீண்டும் மீண்டும் நம்பிக்கை யை நிலைக்கச் செய்யும் வகையில் புதுப் பித்து வளர்த்து, தீய கேவலமான செயல் களில் இருந்தும் மனிதனை விலக்கிப் பிற நன்மக்களோடு தனி மனிதனைக் குழு வாக்கிக் கூடிவாழச் செய்கிறது. ஆகவே தொழுகை இசுலாத்தின் நிழலாக, இறை அடியானைக் காட்டும் அடையாள மாகக் கருதப்படுகிறது இறைத் தொழுகை மனிதனின் மாண்பைக் கட்டிக் காத்து இறைவனொடு உள்ளங் கலந்து உற வாடச் செய்கிறது. உள்ளத் தூய்மைக்கு உறைவிடமாகிறது. ஆகவே நாள் தோறும் ஐந்து முறை கடமையாக்கப் பட்டது.

இத்தொழுகை மனிதச் செம்மைக்கு அடிகோலுவதாய், மனிதன் தன்னை மட்டுமின்றி உடன் வாழும் பிறரையும் நினைக்கும் பரந்தமனம் பெறுவதால், இறையருட் கொடைகளால், தான்பெற்று உள்ள வளமெல்லாம் தன்னுடைமைகள் என இறுகப் பற்றாது, இறையுடைமை கள் எனத் தெளிந்து, இறையாணைக்குக் கட்டுப்பட்டு இறைவழித் தன் வளங் களைச் செலவிடவேண்டும். இதற்காகவே ஏழைவரி (ஜகாத்) இரண்டாங் கடமையாக்கப்பட்டுள்ளது. ஒரு நூறு ரூபாய்க்கு இரண்டரை ரூபாய் இல்லா தார்க்கு ஈவது இசுலாமிய இன்றியமை யாக் கடமையாக்கப் பெற்றது.

சமத்துவம்

மனித இனத்தை வாட்டும் நோய் களுள் தலைமை தாங்குவது பசி. பசிப் பிணி அறுக்கப்பட வேண்டும் என்பது அறவழியின் அருங்கோளாகும். ஆதலி

ளுல், பசிக் கொடுமையின் இயல் பறிந்து, பிறர் பசிகளையத் தூண்டும் நோக் கொடு, ஆண்டுக் கொருமுறை முழுமாதமும் நோன்பிருத்தல் அடுத்த கடமையாயிற்று. இந்நோன்புக் கடமையில் பசித்திருத்தல், நீரருந்தாதிருத்தல் மட்டுமின்றிப் பொறுமை, அடக்கம், இழி செயல்கள் தடுப்பு அனைத்தும் இந்நோன்புக் கடமையில் இணைக்கப்பட்டுள்ளன. வாய்மையை வளர்க்கும் வகையனைத்தும் நோன்புக் கடமையொடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. மக்காநகருக்குப் பொருள் வசதியுடையோர் மட்டும் புனிதப்பயணம் மேற்கொள்ளும் இறுதிக் கடமை உலகில் பரந்து கிடக்கும் இறைநெறி நிற்கும் மாந்தர் அனைவரையும் ஓரிடத்திற் கொணர்ந்து, (எளிய உடையில்) நாடு, மொழி, இன உணர்வுகட்கு மேற்சென்று மனித இனத்தின் மாண்பையும், ஒருமைப் பாட்டையும் உணர்த்தி இறையருளைஎடுத் தோதுகிறது. நாடு, மொழி, இனவுணர்வுகளை இசுலாம் கொன்றுவிடவில்லை. இவ்வுணர்வுகள், அடிப்படை மனித உணர்வைக் கொன்றுவிடாது பாதுகாக்கிறது. நாட்டன்பும், மொழியன்பும் இறையன்பின் வழிப்படும்போது எல்லைகடவாது வரையறைக்குட்பட்டு மனிதனை வளர்க்கும். இறையன்பு, நாடு, மொழி எல்லைகளைக் கடந்து மனித இனத்தை ஒருங்கிணைத்து "ஒன்று பரம் பொருள்; நாமதன் மக்கள்; உலகின்பக் கேணி" என்ற உயர்ந்த சமத்துவ, சகோதரத்துவ உணர்வை ஊட்டுகிறது.

அறிவுடைச் செயலே இசுலாம் எனலாம். அறிவு—இறைவன் அறிவித்ததை அறிவது; செயல்-இறைவன் ஏவியதைச் செய்வது. அறியாத ஒன்றைச் செய்ய இயலாது. அறிவே செயலுக்கு அடிப்படை. ஆகவே இசுலாம் அறிவை மிகச் சிறப்புறுத்துகிறது. அறிவூட்டும் கல்வியை மிக மேன்மைப்படுத்துகிறது. இறையடியார் அனைவருக்கும் — ஆண் பெண் வேறுபாடின்றிக் கல்வியைக் கடமையாக்குகிறது. கற்றவரை மேன்மைப் படுத்துகிறது. கற்றவர்யார் என்ற தோழரின் வினவுக்குக் கற்றபடி நிற்போரே கற்றவர் என்பது பள்ளி காணுது தெள்ளிய ஆய்வாளராய் விளங்கிய பெருமானுர் முகம்மது நபியின் விடையாகும். ஆகவே அறிவொடு செயலை வேண்டும் இசுலாம் நற்செய்கைகளே நம்பிக்கையின் அடையாளம் என அறிவுறுத்துகிறது. மனிதருள் இரண்டு சாதி காண்கிறது இசுலாம். ஒரு சாதி இறையடியார்; மறுசாதி இறை மறுப்பார். இறையடியாருள்ளும், நற்செயல்களைப் புரிவோரே பெருமைக்குரியவர் என்ற கருத்து அல்'குர் ஆனு'லும், பெருமானுர் பொன்மொழிகளிலும் பேரிடம் பெறுகிறது. "நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிவோர்' என்ற தொடர் இறைமறையில் திரும்பத் திரும்ப வருகிறது. மனிதனை மகத்துவம் நிறைந்த படைப்பாகவும், மண்ணுலகில் இறைவனின் பிரதிநிதி யாகவும் பெருமைப்படுத்தும் இசுலாம், அவன் செயல் கொண்டே அவன் மேன்மை கணிக்கப்படும் என்று கண்டிப்பாகப் பேசுகிறது. ஒரு மனிதன் தன் அறிவை, செல்வத்தை, இளமையை எப்படிப் பயன்படுத்தினுன் என்பது கொண்டே இறுதித் தீர்ப்பு வழங்கப் படும் என்பது நபி மொழி. ஒழுக்கச் சிதைவு எல்லாத் துறையிலும் எல்லை தாண்டிக் கொண்டிருக்கும் நிலையில், ஒழுக்கம் பேண ஒரேவழி இறை நம்பிக்கையும், இறை நெறி நிற்றலுமே என எடுத்தியம்புவது இசுலாம்.

பிற கொள்கை யுடையாரோடும், கருத்து வேறுபாடு கொண்டாரோடும் கண்ணியமாக-நயத்தக்க நாகரிகம் பேணக் கட்டளை பிறப்பித்துளது. பொறுமையும், மன்னிக்கும் மனப் பான்மையும், பிறர் கருத்துக்களை மதிப்பதும், பிறர் உடைமைகளைப் பேணுவதும் போர்க் காலத்தும் கூடப் பெருமானுர் முகம்மது நபி செயல்படுத்திய திட்டங்களாகும். தன்னளவில் விட்டுக் கொடுத்தும் அமைதிகாத்தல் பெருமானுர் பின்பற்றிய நடைமுறையாகும். "தொழுகையினும், நோன்பினும் உயர்ந்தது, மக்களிடை நேசத்தை உண்டாக்கலும், அமைதியை நாட்டலும்" என நவின்ருர் நாதர் முகம்மது.

நன்மை, தீமை என்ற சொற்களுக்கு உரிய இசுலாமிய அகராதிச் சொற்கள் 'ஹலால்' 'ஹராம்' என்பனவாம். இச் சொற்கள் ஆகுமவை, ஆகாதவை; ஏற்கப்பட்டவை, விலக்கப்பட்டவை எனப் பொருள்படும். நல்ல செயல்கள் தெளிவான இறைபனுமதி முத்திரை பெற்றுள்ளன. நன்னெறி, தீ நெறி பற்றி விளக்கும் போது பெருமானார், தனக்கும் பிறருக்கும் எச்செயலால் நன்மை விளையுமோ அதனைச் செய்தல் நன்னெறி, எச் செயலைச் செய்யும் போது உள்ளம் உறுத்துகிறதோ, எதனைச் செய்ததாகப் பிறரிடத்துச் சொல்லக் கூசுகிறோமோ அதனைச் செய்தல் தீநெறி என்றும் நுட்பமாகப் பேசுதலைப் பார்க்கிறோம். இவ்வாறு மனித ஒழுக்கம் பற்றிய மாண்பு மிக்க விளக்கங்களே இசுலாமிய தத்துவமாக மிளிர்வதைக் காண்கின்றோம். இச் சிறு கட்டுரை, இசுலாமிய தத்துவம் என்னும் ஆழ் கடலின் ஆழத்தையோ, ஆங்கே ஒளிரும் மணிகளின் ஒளியையோ நூற்றுள் ஒரு கூறும் காட்ட இயலாது எனினும், திருமறையும், பெருமானார் பொன்னுரைகளும், வாழ்வுக்கு வழிகாட்டும் அறிவுக்களஞ்சியமாகத் திகழ்தலை உணர்த்தினால் அதுவே போதும்.

இளங்கோவின் இன்னுரை

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேளத்துக் குறுதுணை தேடுமின்;
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்,

கிறித்தவ நெறி

பி. கே. சார்ச்சு, எம். எ.
ஆராய்ச்சி மாணவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கிறித்தவம் எனப்படுவது கிறித்து காட்டிய நெறி. தம் பிறப்பாலே உலக வரலாற்றைக் கி மு., கி பி. என இரண்டாகப் பிரித்தவர் கிறித்து. இவரது முழுப்பெயர் யேசுக் கிறித்து என்பது யேசு என்பது இயற்பெயர். கிறித்து என்பது அபிடேகம் செய்யப்பட்டவன் எனப்பொருள் தரும் கிறிஸ்தோஸ் என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்த காரணப்பெயர்.

கிறித்தவத்துக்கு அதிமுக்கியமான சில வரலாற்று நிகழ்ச்சிகள்.

யேசுபிரான் ஓர் ஏழைக்குடும்பத்தில் தாயிடமிருந்து பிறந்து வளர்ந்தார். வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளில் தம்மோடு சிலரைச் சீடர்களாகச் சேர்த்துக் கொண்டு மக்களுக்குப் போதித்தார். தம்மைத் தாமே பகைவர்களுக்குக் கையளித்துக் கொலைசெய்யப்படவும், தாமே முன்னறிவித்திருந்தபடி இறந்த மூன்றும் நாள் மீண்டும் உயிர் பெற்றெழவும் செய்தார். பின்னும் சில நாட்கள் செல்ல இவ்வுலகைவிட்டு மறைந்தார். கிறித்து தம்போதனைக் காலத்தில் தாமே இறைவனென்று உரிமை பாராட்டவும் தம் இறைத்தன்மையைப் புதுமைகளால் மெய்ப்பித்துக் காட்டவும் செய்தார்.

இவையாவும் கிறித்தவத்துக்கு அடிப்படையான வரலாற்று நிகழ்ச்சிகள். கிறித்துபிரான் செய்த புதுமைகள் அவரதுவரம்பற்ற வல்லமையின், இறையாற்றலின் செயல்கள். சிலவற்றை மட்டும் சில சூழ்நிலைகளில் மட்டும் செய்யவல்லவர் என்றநிலை கிறித்துவுக்கு இருந்ததில்லை. எதையும் எங்கேயும் தேவைப்பட்டபோது ஒரே வார்த்தையால் அல்லது நினைவால் செய்வதற்கான வல்லமை கிறித்துவுக்கு இருந்தது எனக் காட்டின அவர்செய்தபுதுமைகள். தாமே முன்னறிவித்து அதன்படியே செத்துயிர்த்த தாகிய புதுமை எல்லாப்புதுமைகளுக்கும் சிகரம் போல் அமைந்தது.

உலகம் முழுதுக்குமாக உடலெடுத்த யேசுபிரான் தம் போதனைகள் அனைவர்க்கும் கிடைப்பதற்கான வழியை வகுக்க வேண்டியவராக இருந்தார். இதற்காக அவர் தம் சீடர்களுக்கு உலகெங்கும் போய்ப் போதிக்குமாறு கட்டளையிட்டு அதற்கு வேண்டிய அதிகாரத்தையும் கொடுத்துத் தம்முடைய தவறாத பாதுகாவலையும் வாக்களித்தார்.

கிறித்தவத்தின் 'முன்சரிதை'.

கிறித்துவுக்கு முன் வாழ்ந்த மக்களும் இறைவனின் மனித அவதாரத் திட்டத்தில் இடம் பெற்றவர். பிறந்த கிறித்துவைப் பின்பற்றி வாழ்பவர் கிறித்தவர்; பிறக்கவிருந்த கிறித்துவை எதிர்நோக்கி ஏங்கி வாழ்ந்தவர் இஸ்ராயேல் மக்கள். ஒருவிதத்தில் இவர்களும் கிறித்தவர்களே, அப்பெயரால் அழைக்கப்படவில்லையாயினும்.

கிறித்துவுக்கு முற்பட்டகாலம் பழைய ஏற்பாட்டின் காலம் எனப்படும். மனுக்குலத்தின் முதற்பெற்றோர்கள் பாவம் புரிந்து படைப்பின் ஒழுங்கைக் குலைத்து மனித இயல்பைப் பழுதுபடுத்தினர்.

இக்குறை பாட்டினின்று மக்களை மீட் பதற்கு ஒருவரைத்தாம் அனுப்ப இருப் பதாக இறைவன் முதற்பெற்றோர்களுக்கு வாக்களித்தார். இவ்வாக்குறுதி பற்றிய நம்பிக்கை உலகில் நிலைபெற்று நிற்கு மாறு இறைவன் இஸ்ராயேல் இனம் என்னும் மக்கள் இனததைப் பயன்படுத் தினர். தம் பெயரால் இம்மக்களை வழி நடத்தச் சில தலைவர்களை ஏவினர். இத்தலைவர்கள் தீர்க்கதரிசிகள் என்றும் இறைவாக்கினர் என்றும் பெயர்பெறுவர். வருங்கால நிகழ்வுகளை முன்கூறும் ஆற்ற லும் இறைவன் பெயரால் பேசும் உரிமை யும் இவர்கள் பெற்றிருந்தனர் என்பதை இப்பெயர்கள் முறையே காட்டுகின்றன நாலாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டு களாக இஸ்ராயேல் இனம் வாக்களிக் கப்பட்ட மீட்பரின், வழிகாட்டியின் வருகைக்காகக் காத்திருந்தது. அவரைப் பற்றித் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட் டிருந்த முன்னறிவிப்புக்களை மக்கள் பயபத்தியுடன் படித்து வந்தனர். இந் நிலையில் கிறித்து பிறந்தார். அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் முன்னறிவிப்புக் களோடு ஒத்திருந்தன. இங்ஙனம் ஒத் திருத்தலைக் கிறித்துவே சுட்டிக்காட்டி னர். எனவே கிறித்துபிரான் புரிந்த பல்வேறு புதுமைகளேயன்றி, அவரைப் பற்றிய முன்னறிவிப்புக்களுக்கும் அவ ருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கும் இடையே உள்ள ஒன்றிப்பும் அவரை வெளிப்படுத்தும் சான்றுயின.

கிறித்தவ சபை

கிறித்துவின் படிப்பினைகளை ஏற்றுக் கிறித்துவையே அடிக்கல்லாகக் கொண்ட ஓர் அதிகார அமைப்புக்கு அடங்கி அவரைப் பின்செல்லும் மக்கட்டொகுதி யைக் கிறித்தவ சபை எனலாம். பதினா றாவது நூற்றாண்டு வரையில் கிறித்து வடியார்கள் இங்ஙனம் ஒருசபையாக, பாப்பானவர் (போப்பாண்டவர்) என்று அழைக்கப்படும் ஒருவரின் தலைமைக்குப் பணிந்து வாழ்ந்தனர். பிரிவினைகள் சில தோன்றியபோதிலும் சபை பெருமள வில் பிளவுபடாமல் இருந்து வந்தது. ஆனால் பெரும் பிளவு ஒன்று பதினாறும் நூற்றாண்டில் ஏற்பட்டது. கிறித்தவடி யார்கள் கத்தோலிக்கர் என்றும் புரோட் டஸ்டன்ட்ஸ் என்றும் இருசாராகப் பிரிந்தனர். முன்னையோர், ரோமாபுரியில் வாழ்ந்துவரும் போப்பாண்டவரின் அதி காரத்தை ஏற்பவராதலின் ரோமன் கத்தோலிக்கர் என்றும் அழைக்கப்படு வார். இன்றும் ஒரே அதிகாரத்தையும் அமைப்பையும் கொண்டு வாழ்கின்றனர். பின்னையோர், தங்களுக்கென்று ஒரு தனித் தலைவரைக் கொண்டிராமையால் பலவாக உட்பிரிந்த சபைகளின் தொகுதியாக உள்ளனர். பிரிவினைகள் இன்னும் தோன்றிய வண்ணமே இருக் கின்றன. கத்தோலிக்க சபைக்கும் புரோட்டஸ்டன்ட்ஸ் எனப்படும் சபை களுக்கும் இடையே கொள்கையளவில் உள்ள பெரும் மாறுபாடு தலைமை பற்றி யதே. கிறித்தவர்கள் அனைவருக்குமாக ஒரு தலைவர் இருக்க வேண்டும் என யேசுபிரான் விரும்பினர்; தம்சீடர்களுள் ஒருவராகிய ராயப்பரைத் தலைவராக நியமித்தார்; அன்னாரின் தலைமை அவ ரது மறைவோடு மாயாமல் இன்றுகாறும் திருச்சபையில் பாப்புமார்கள் வழியாக நிலைபெற்று வருகிறது; உலக முடிவு மட்டும் நிலைபெற்று நிற்கும்; பாப்பான வர்க்குச் சில தெளிவான நிபந்தனைகளுக் குள்ளாகத் தவறுவரம்—வழுவாவரம்— உண்டு என்பனவற்றைக் கத்தோலிக்கர் உடன்படவும் புரோட்டஸ்டன்ட் சபை யினர் மறுக்கவும் செய்வர். தலைமை யதி காரம் பற்றிய இவ்வடிப்படை மாறு பாட்டின் விளைவுகளே ஏனைய மாறுபாடு கள் எல்லாமும்.

விவிலிய நூல்

கிறித்தவர்களுக்கு மிகப் புனிதமான நூல் விவிலிய நூல் அல்லது விவிலியம். இஃது ஒரு தொகைநூல்; பழைய ஏற் பாடு புதிய ஏற்பாடு என இரு பெரும் பகுதிகளைக்கொண்டது. இரண்டு பகுதி களுக்குள்ளும் பலசிறு நூல்கள் அடங் கும். பழைய ஏற்பாடு கிறித்துவின் பிறப்புக்கு முன் பல நூற்றாண்டுகாலங் களில் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப் பட்டது. எபிரேய மொழியில் வழக்

கிலிருந்த பல இலக்கிய வகைகளை இதன் கண்காணலாம். இன்று அதிகமாகப் படிக்கப்பட்டு வருவது புதிய ஏற்பாடாகும் இது கிறித்துவின் வாழ்நாட்களுக்குப்பின் நாற்பது ஆண்டுகளுக்குள்ளாக அவர்தம் சீடர்கள் பலரால் எழுதப்பட்ட நூற்களின் தொகுதி இதன் கண் கிறித்து பெருமானின் வாழ்க்கையும் போதனையும் பற்றி மத்தேயு, மார்க்கு, லூக்காஸ், அருளப்பர் (யோவான்) என்னும் நால்வரால் தனித்தனி எழுதப்பட்ட நூற்கள் முதன்மை வாய்ந்தவை. இவை சுவிசேஷம் அல்லது நற்செய்தி எனப்படும்.

கிறித்துவின் படிப்பினைகள் யாவுமே விவிலியத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்றில்லை. எல்லா இனத்தாருக்கும் போதிக்குமாறு யேசுபிரான் சீடர்களுக்குக் கட்டளையிட்டாரே யன்றி எல்லாவற்றையும் எழுதி வைக்கும்படி கட்டளையிடவில்லை. போதிக்கும் தொழிலை மேற்கொண்ட சீடர்கள் தங்களுடைய தொழிலுக்குத் துணையாகுமாறு சிலவற்றை எழுதிவைத்தார்களேயன்றி, யாருமே இதுவே போதும் என்ற முறையில் எதையும் எழுதவில்லை.

கிறித்துவைப் பின்பற்றிச் செல்லவிரும்புகின்ற ஒருவன் விவிலியத்தைத் தனிப்பட்ட முறையில் படித்து அதன் கருத்துக்களைத் தனக்குப் புரிந்த அளவில் கடைப்பிடித்தானானால் அதுவே போதும் என்பது புரோட்டஸ்டன்ட் சபையினரிடம் பொதுவாகக் காணக் கூடிய ஒரு கோட்பாடு ஆனால் சபையின் அதிகாரத்துக்கு அடங்கி நின்றே விவிலியத்தைப் படிக்கவும் விளக்கவும் வெளியிடவும் பரப்பவும் செய்யவேண்டும் என்பது கத்தோலிக்கரின் கொள்கை. அத்துடன் தேவைப்பட்டுழி இதுதான் விவிலியக் கருத்து என அறுதியிட்டுக் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு உண்டென்பதையும் கத்தோலிக்கர் உடன்படுவர்.

முக்கியமான கிறித்தவக் கொள்கைகள் சில

1. இயற்கை:

பகுத்தறிவில்லாப் படைப்புக்களின் தொகையே இயற்கை என்பது. இது கடவுளால் படைக்கப்பட்டது. படைப்பு என்றால் யாதா மொன்றை எக்கருவியும் முதற்காரணமும் இல்லாமல் இச்சாமாத்திரையால் உண்டுபண்ணுதல் ஆகும். இஃது இறைவனால் மட்டும் இயல்வதொன்று. இயற்கை மனிதனுக்காகப் படைக்கப்பட்டது. எனவே இயற்கையிலுள்ள யாவற்றையும்—உயிரினங்கள் உட்படப் பயன்படுத்தும் உரிமை மனிதனுக்குண்டு. இன்று நம் புலன்களுக்கு இலக்காகி நிற்கும் உலகம் அழியும் தன்மையது. அழியும் நாளில் அனைவரையும் நடுத்தீர்ப்பதற்கு இரண்டாம் முறையாகக் கிறித்துபிரான் உலகில் தோன்றுவார்.

2. மனிதன்:

உடலும் ஆன்மாவும் சேர்ந்த கூட்டுப் படைப்பு மனிதன். ஆன்மா அழிவில்லாதது. தான் தாங்கிநிற்கும் இவ்வுடம்போ அழிவுடையது. ஆனால் உலக முடிவுக்குப்பின் ஒவ்வொருவனும் தன் உடலைச் சூக்கும நிலையில்பெறுவான். நரகம் மோக்கம் ஆகிய இரண்டும் முடிவும் மாறுதலும் இல்லாதவை. மனிதனுக்கு முற்பிறப்பும் மறுபிறப்பும் இல்லை.. மறுவாழ்வு, அதாவது மறுவுலக வாழ்வு தான் உண்டு. இம்மறுவுலக வாழ்வு, ஒவ்வொருவனுக்கும் தான் இறக்கும் பொழுதில் கொண்டிருக்கும் ஆன்ம நிலையைப் பொறுத்து நரகமாகவோ மோக்கமாகவோ அமையும்.

ஒருவன் மோக்கம் அடையாதபடி தடையாகக் கூடியது அவனுடைய பாவமே யன்றிப் பிறிதொன்றில்லை. பாவம் என்பது இறைவனுடைய கட்டளையை மீறுவது; வேறு விதத்தில் சொன்னால் இறைவனுடைய அன்புத் திட்டத்தை ஏற்க மறுப்பது. நடைமுறையில் பாவம் என்பது ஒருவன் தன் மனச்சான்றோடு மாறுபட்டுச் செய்யும் செயல். மனச்சான்றோடு, அது வழியாக இறைவனோடு முரணி நிற்கும் நிலை பாவநிலை. இந்நிலையில் நிகழும் சாவு நரகத்துக்கு இட்டுச் செல்லும். நரகம் என்பது ஒருவன் தான் இருக்கவேண்டிய நிலையை இறைவனோடு ஒன்றுபட்டு-

ஆனால் தன்தனித் தன்மையை, ஆளுமையை, இழக்காமல்—இன்புற்றிருக்கும் நிலையை என்றென்றைக்கும் இழந்து நிற்கும் நிலை.

பாவத்துக்கு மன்னிப்பு உண்டு. ஆனால் எந்த வெளிச் செயலும் தன்னாலேயே பாவ மன்னிப்பைத் தரவல்லதன்று. பாவி இறைவனோடு முரணி நிற்கும் தன் மன நிலையை மாற்றிக்கொள்ளுதல் பாவ மன்னிப்புக்கு இன்றியமையாதது. இத்துடன் சில நிபந்தனைகட்கு உட்பட்டுப் பாவ சங்கீர்த்தனம் செய்யவும் கிறித்தவன் கடமைப்பட்டவன். பாவ சங்கீர்த்தனம் என்பது ஒருவன் தன் பாவங்களைக் குருவிடம் இரகசியமாகவும் தான் யாரென்று குருவுக்குத் தெரிய வேண்டிய அவசிய மில்லாதவாறு அறிக்கையிடுதல் ஆகும்.

இல்லறமும் துறவறமும் ஆகிய இரண்டும் கிறித்தவத்தில் உண்டு. இரண்டும் பற்றிய பல கண்டிப்பான விதிகளும் உள்ளன. இல்லறத்தில் ஒருவனும் ஒருத்தியும் என்ற நிலையே ஒழுங்கு. முற்றுப்பெற்ற திருமணத்தின் பின் இருவருள் ஒருவருடைய இறப்புக்குப் பின்னல்லது செய்யப்படும் மறுமணம் செல்லாது. செயற்கை முறையான குடும்பக் கட்டுப்பாட்டைத் திருச்சபை எதிர்க்கிறது. கணவன் மனைவியரிடையே யன்றி நிகழும் உடலின்பச் செயல் எதுவும் பாவச் செயல் என்பதும் கிறித்தவக் கொள்கை.

3. இறைவன் :

இறையுண்மை பகுத்தறிவால், காரிய காரணத் தொடர்பு பற்றிய கருதலளவையால் அறியக் கூடிய ஒன்று. ஆனால் கடவுள் உண்டெனக் காட்டும் பகுத்தறிவு அக்கடவுளை நம் சிற்றறிவுக்குள் அடங்காதவராகவே காட்டுகிறது. இறைவனைப்பற்றி நாமாகவே அறிய முடியாத சில உண்மைகளை வெளியிட்டுள்ளார் யேசுபிரான். இறைவன் பிதா சுதன் தூய ஆவி என ஆள்வகையில் மூவர்; மூவரும் சேர்ந்து ஒரே கடவுள்; மூன்று கடவுளர் அல்லர்; மூவருக்கும் ஒரே இறைத்தன்மை முற்றிலும் பொதுவாகவும் முழுமையாகவும் உள்ளது; மூவருள் இரண்டாம் ஆளாகிய சுதன்—இவர் வார்த்தையானவர் என்று அழைக்கப் படுவர்—மனிதனாகப் பிறந்தார்; என்பன வெளியிடப்பட்ட உண்மைகள். இவை எவ்வாறாகும் என்பது மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. இத்தகைய சத்தியங்களை இரகசியங்கள் என்றும் மறை பொருள் என்றும் விசுவாச சத்தியங்கள் என்றும் கிறித் தவசபை அழைக்கும். இறைத்தன்மை தன்னிலே எவ்விதப் பாகுபாடும் இல்லாதது. ஆனால் பாகு படுத்தியல்லது நாம் அதை உணர முடியவில்லை. இம்முறையில் இறைவன் அறுகுணத்தோன் எனக் கிறித்தவம் கூறும்.

இறைவன் எவ்விதமாறுதலும் இல்லாத ஒரே தன்மையன். ஆயினும் மனித இயல்புகளை மகிழ்ச்சி கோபம் போன்றவற்றை இறைவன் மேல் ஏற்றிக்கூறும் உபசாரவழக்கு கிறித்தவத்தில் உண்டு. இறைவனின் படைப்புத் தொழிலும் மீட்புத் தொழிலும் கட்டாயத்தினால் மேற்கொள்ளப்பட்டவையல்ல. தமக்கு ஏதோ ஒன்று கிடைக்கவேண்டும் என்பதன்று, தமக்குள்ளதை—தம்மையே—மனிதனுக்குக் கொடுக்கவேண்டும் என்பதே கடவுள் படைப்புத் தொழிலை மேற்கொண்டமைக்குக் காரணம்.

4. அருள்வாழ்வு :

பாவநிலையில் இல்லாத ஒருவனுடைய ஆன்மநிலை அருள்நிலை எனப்படும். இஃது இறைவனை அன்பு செய்து, இறையன்பைப் பெற்று, இறைத்தன்மையிலேயே பங்கு பெற்று, இறைவனின் உயிராலேயே உயிரூட்டம் பெற்று நிற்கும்நிலை. இந்நிலையில் இறக்கும் ஒருவன் தன் ஆன்மநிலையை அனுபவிக்க ஆரம்பிக்கிறான். இதுதான் அவனுடைய மோக்கம் அல்லது பேரின்டம் மனித ஆத்தமத்தில் இத்தகைய அருளை உண்டு பண்ணவும் அதிகப் படுத்தவும் ஆகிய ஏழுசிறந்த வழிகள் அருட்சாதனங்கள் எனப்படும். அவை திருமுழுக்கு, உறுதி பூசுதல், திவ்விய நற்கருணை, பாவசங்கீர்த்தனம், அவஸ்தை பூசுதல், மெய்விவாகம், குருத்துவம் எனப்பெயர் பெறும்.

5. திவ்வியபலிபூசை :

கிறித்தவர்களின் இறைவழிபாட்டுச் செயல்களில் சாலச் சிறந்தது பலிபூசை. குருவின்றிப் பலிபூசை நிறைவேற்றப் படுதலில்லை. இதற்குக் கோதுமை அப்பமும் திராட்சை ரசமும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விரண்டும் பூசையின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஒரு மாபெரும் மாறுதலை அடையும். அப்பரசங்களின் வெளித்தோற்றமும் சுவை முதலிய ஏனைய இயல்புகளும் மாறுபடாமல் இருக்க அவற்றிற்கு உள்ளீடாகக் கிறித்துநாதர் இடம்பெறுவர் என்பது ஒரு விசுவாச சத்தியம்.

6. திவ்வியநற்கருணை :

அப்பத்தின் குணங்களுக்குள்ளே தம் இறைத்தன்மையையும் மனிதத் தன்மையையும் உடன் மறைத்து வந்து தங்கும் யேசு பிரானை நற்கருணைநாதர் என்றும் திவ்விய நற்கருணை என்றும் நன்மை என்றும் வழங்குவர். கத்தோலிக்க தேவாலயங்களில் முக்கியமான இடத்தில் ஒரு பேழைக்குள் நற்கருணை வைக்கப் பட்டிருக்கும். மக்கள் இதை விருப்பப் படி வந்து வணங்கி ஆராதிக்கவும், பூசையின் முடிவில் உட்கொள்ளவும் செய்வர். பாவ நிலையில் திவ்விய நற்கருணை உட்கொள்ளல்—நன்மை வாங்குதல்—கூடாது. எனவே நற்கருணை உட்கொள்ளுமுன் பாவசங்கீர்த்தனம் செய்வது பெருவழக்கு

7. புனிதர்களும் புதுமைகளும் :

இறந்துவிட்ட சிலரைப்பற்றித் திருச்சபை சில சமயங்களில் தன் பரம் அதிகாரத்தைக் கொண்டு, இன்னார் நித்திய பேரின்பம் அடைந்தார் என அறிக்கையிடுவதுண்டு. இங்ஙனம் அறிக்கையிடப்பட்டவரையன்றி இறக்கின்ற எல்லாரையும் புனிதர் என்றும் அமரர் என்றும் கொண்டாடும் வழக்கம் கிறித்துவத்தில் இல்லை. மேற்கூறிய மாதிரியான அறிக்கை—புனிதர் பட்டமளிப்பு—பல நுட்பமான ஆய்வுகளுக்கும் கண்டிப்பான சோதனைகளுக்கும் பின்னரே நடைபெறும்.

புதுமை புதுமை என்று மக்கள் இலேசாகப் பேசுவர். ஆனால் ஒரு நிகழ்ச்சியைப் புதுமையென்று திருச்சபை அதிகார பூர்வமாக எளிதில் கூறிவிடாது. அங்ஙனம் கூறுதல் பற்றி மிகவும் கண்டிப்பான விதிகள் உள்ளன. புதுமை என்று மக்களால் கூறுவதையெல்லாம் பொதுவாகத் திருச்சபை சந்தேகக் கண்ணோடேயே பார்க்கிறது வழக்கம்.

8. பிறமதங்கள் :

எல்லா மதத்தினரும் இறைவனை வணங்குபவர். ஒருவன் தன் உள்ளொளிக்கு— மனச்சான்றுக்கு—மாறுபடாமல் நேர்மையுடன் செய்யும் இறைவழிபாடு எப்பொழுதும் இறைவனுக்கு ஏற்புடையதே. மனச்சான்றுக்கு மாறுபடாத நேர்மையான மனநிலையின் கூறுகள் சில குறிப்பிடல் தகும்.

தான் பின்பற்றி வரும் மதத்தின் ஆதாரம்பற்றி ஐயப்பாடு இல்லா திருத்தல்.

ஐயப்பாடு நேர்ந்துழி நடுநிலை நின்று ஆராய்ந்து தெளிவு தேடத் தயாராக இருத்தல்.

ஆராய்ச்சி முடிவு எதுவாயினும் ஏற்பேன் என்று இருத்தல்.

ஒருவனிடம் இத்தகைய நேர்மை உண்மை தனக்கும் இறைவனுக்குமே யன்றி ஏனையோர் அனைவர்க்கும் மறை. இத்தகைய நேர்மையுடையவனை, அன்னோன் எம்மதத்தோனும் ஆகுக, கிறித்தவன்—அந்தரங்கக் கிறித்தவன்—என்றே கிறித்தவம் கூறும். அவன் இறைவனை எப்பெயரிட்டு அழைப்பினும் அவனால் அழைக்கப்படுபவர் கிறித்துவே. கடவுள் மனிதனாகிக் கிறித்துவெனும் பெயர் தாங்கிய வரலாற்று நிகழ்ச்சி அவனுக்கு முற்றிலும் தெரியாமலோ அல்லது ஏற்கும் விதத்தில் உணர்த்தப்படாமலோ இருந்தால் அஃது அவன் குற்றமன்று.

ஆனால் இறைவன் இவ்வுலகில் உடலெடுத்து வந்தான் என்பதைக் கேள்விப் பட்டபின் அஃது உண்மையே என்னும்

உறுதியோ, அல்லது உண்மையாக இருத்தல் கூடும் என்னும் ஐயமோ நிகழ முறையே ஏற்கவோ ஆராயவோ மறுப்பவன் மனநேர்மையின் நீங்கினன் ஆவான்.

[கிறித்தவக் கொள்கைகள் என்னும் தலைப்பின் கீழ் கூறப்பட்டவை யாவும் கத்தோலிக்கருக்கு ஏற்புடையன. புரோட்டஸ்டன்ட் சபைகளைச் சேர்ந்தவர் சிலர் அவற்றுள் சிலவற்றை ஏற்க மறுத்தல் கூடும்]

இறுதியாக இரண்டைக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று, யாவற்றிலும் முதன்மையான கட்டளை யாதென்று கேட்கப்பட்டகேள்விக்கு யேசுபிரான் கூறிய பதில். "நீ உன் முழு மனத்தோடும் முழு ஆத்மத்தோடும் முழு ஆற்றலோடும் இறைவனை நேசிப்பாயாக. இதுவே முதற்கட்டளை. இதற்கு நிகரான இன்னொரு கட்டளையும் உண்டு. அதாவது நீ உன்னையே நேசிக்கிறது போல் உன் அயலானையும் நேசிப்பாயாக என்பது" என்றார் யேசுநாதர். இன்னொன்று யேசுநாதரின் வாழ்க்கையின் முன்மாதிரிகை; அவர் தாமே வாழ்ந்து காட்டிய வாழ்க்கைநெறி. எளிய வாழ்க்கையை விரும்பி மேற்கொண்டும் உலகப் பெருமையையும் புகழையும் விட்டு ஒதுங்கியும், தவறு செய்தவர்களைத் தயங்காது கண்டித்தும், செய்யாத குற்றத்தின் தண்டனையைப் பொறுமையோடு ஏற்றுக்கொண்டும் யேசுநாதர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறி உலகத்தை வியப்படையச் செய்யும் புரட்சி நெறியாக உள்ளது.

மறவாக் குறள்கள்

1. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
   செல்லும் வாயெல்லாம் செயல்.

2. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
   சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
   தாழாது உஞற்று பவர்.

4. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
   அற்றது போற்றி யுணின்.

5. மலரினும் மெல்லிது காமம்; சிலரதன்
   செவ்வி தலைப்படு வார்.

புலவர்களின் பொன்மொழிகள்

சி. செல்வத்தாண்டவன், எம். ஓ. எல்.
முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி, சன்மார்க்கசபை

பெற்ற தாயைப் போலவே பேசும் மொழியையும் பிறந்த நாட்டையும் போற்றிப் பாடுவது மக்கள் கடமை யாகும். மொழிக்குத் தெய்வமாகிய கலை மகளைத் தாயாகவே கருதி வழிபடுவது பெரியோர்கள் இயல்பு அப்படியே நில மகளையும் அன்னையாக வணங்கி வருவது நம் நாட்டினர் வழக்கம்.

நினைவுமஞ்சரி -
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

நாகரிகம் மிகுந்து வருவதாகச் சொல்லப்படும் இக்காலத்தில் மக்கள் செய்துவரும் செய்கைகள் எல்லாம் பெரும்பாலும் உலக இயற்கைக்கு மாறு பட்டு வருகின்றன. இவ்வாறு இவர்கள் செய்கை மாறுபட்டு வருதலினுற்றான் காலங்குறுகிப் பலவகைப் பிணிகளுக்கும் ஆளாகி மாண்டு போகின்றார்கள்.

நூறாண்டு உயிர்வாழ்க்கை -
மறைமலையடிகள்

வழிபாட்டால் இறையை உணர்தற் கென்று மனைவி மக்களைத் துறக்க வேண்டுவதில்லை, காட்டுக்கு ஓட வேண்டு வதில்லை, மூச்சைப் பிடிக்க வேண்டு வதில்லை. வீட்டிலிருந்தே மனைவி மக்க ளொடு வாழ்ந்தும் மூச்சைப் பிடியாம லும் இறையை உணர்தல் கூடும். மனைவி மக்களும் இறைவன் உடைமை, வீடு வாசலும் இறைவன் உடைமை, தானும் உடைமை. எல்லாவற்றிலும் இறை இருக்கிறது. எதைத்துறப்பது ? எதை வெறுப்பது ? ஒன்றையும் துறவாது வெறாது எல்லாம் இறை உடைமை என்று வழிபாடு செய்யச் செய்ய உண்மை விளங்கும்.

தமிழ்நாடும் நம்மாழ்வாரும் - திரு.வி.க.

ஒருநாடு தனக்குரிய மொழியை ஆக்கமுற ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம். மொழி வளர்ச்சி கொண்டே அது வழங் கும் நாட்டின் நலத்தை புணரலாம். எந்நாடு தன்மொழிச் சுவையை உணர் தலிற் பின்னடைகின்றதோ அது மற்றை யெல்லா வளங்களாலும் பிற்பட்டதாகும்.

உரைநடைக்கோவை -
பண்டிதமணி கதிரேசச் செட்டியார்

எந்தக் காரியத்திலும் வெற்றி பெறு வதற்கு ஏகாக்கிர சித்தமாக அந்தக் காரியத்திற் சிரத்தை வைக்க வேண்டும். மனம் ஒருவழிப்படுமாயின் செய்து முடிக்கக் கூடாத காரியம் ஒன்றில்லை. நெப்போலியன் போனபார்ட் என்னும் சிறந்த சேனுதிபதி தம்முடைய மனத் தில் ஒவ்வொரு கருமத்துக்கும் ஒவ் வொரு அறையுண்டு என்றும் ஓர் அறை யைத் திறந்து வைக்கும்போது மற்ற அறைகள் அனைத்தையும் பூட்டிவைக்கும் வல்லபம் தமக்குஉண்டு என்றும், எல்லா அறைகளையும் பூட்டிவிட்டுத்தாம் உடனே செயலற்று நித்திரை போய்விடக்கூடும் என்றும் சொல்லியிருக்கிறார்.

விபுலானந்த வெள்ளம் -
விபுலானந்த அடிகள்

கொள்கை, தொழில், வழிபாடு, கூட்டுறவுத் துறைதோறும் ஒத்த உரிமை எல்லாருக்கும் என்றும் இருக்கச்செய்ய வேண்டும். அவரவர் விருப்பம், திறம், அறிவு ஆற்றல்களுக்குத் தக்கபடி, பிறர் தனி உரிமைக்குத தடையாகாத முறை யில் பொருளீட்டல், பதவி அடைதல் முதலியவகைகளிலும் எல்லோருக்கும் சம உரிமை வேண்டும். தத்தம் விருப்பத்

தகுதி, திறம் கருதாமல் ஒரு வகுப்பார் எப்போதும் பிறப்பால் சில தனி உரிமை கொண்டாடும் வகுப்பு முறைகள் அகல வேண்டும்.

நற்றமிழ்-நாவலர்
டாக்டர் ச. சோமசுந்தரபாரதியார்

பண்டைத் தமிழ் மறைகள் மறைந்த பின் அவை கூறிய அறம் பொருளின்பம் வீடு என்றும் நான்கினையும் தெள்ளிதில் தெரிக்கும் பொதுமறை திருவள்ளுவர் நூலேயாம் என்றனர்ச. இந்நூலுட் கடவுட் கொள்கை பற்றிய சொற்கள் யாவும் செந்தமிழில் அமைந்து நூலின் பொதுத் தன்மையை விளக்குவனவாய் இருக்கின்றன.

இலக்கிய வரலாறு - கா. சு. பிள்ளை

சமயத்துறையை நோக்குக. ஈண்டும் நம் நாட்டில் மிகக் குறுகிய எண்ணங்கள் தலைமை கொண்டிருந்தன. புண்ணிய ஸ்தலங்களுள் ஒன்றாகக் கருதக் கூடிய காசியில் அங்கே எழுந்தருளியுள்ள விஸ்வேஸ்வரரை இந்தியர்கள் எல்லாரும் கையினால் தீண்டி வழிபாடு செய்ய இயலும். இது வடநாட்டினரது விரிந்த மனப்போக்கை உணர்த்துகின்றது. நமது தென்னாட்டிலோ என்றால், அர்ச்சகர் விபூதி முதலிய பிரசாதங்களைக்கூட வழிபடுவோரது கையிடாது தூரத்தே எறிந்து, அவர்கள் எடுத்துக்கொள்ளும் படியாகச் சிலஇடங்களிற் செய்கிறார்கள். இது தென்னாட்டவர்களுடைய மனப் போக்கை நன்கு தெரிவிக்கிறது.

தமிழ்ச் சுடர்மணிகள் -
பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

. தமிழ் வளர்ச்சிக்கு முதலாவது வேண்டியது கலாசாலைகளில் தமிழின் மூலமே எல்லாப் பாடங்களும் கற்பிக்க வேண்டும். காரியாலயங்கள் அனைத்திலும் கடிதப் போக்குவரத்துக்குத் தமிழையே உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் அவசியமும் ஆர்வமும் உண்டாகும்.

கவிமணியின் உரைமணிகள் -
கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை

தமிழ்ப் பாஷைக்கும் தமிழ் நாகரிகத்துக்கும் உலைவைக்க அயல்தேசத்தார் படை எடுத்துவர வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. தமிழ் மக்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள் என்றால் பொருந்தும்.

இதயஒலி- டி. கே. சிதம்பரநாத முதலியார்

பண்டைக் காலத்திற் புலவர்களின் பரந்த புலமையை அளப்பதற்குரிய கருவிகளுள் இந்த உவமை ஓர் சிறந்த கருவியாகப் பயன்பட்டதென அறிய இடமுண்டு. அவர்கள் கூறிய உவமைச் சுவையில் ஈடுபட்டு, அவர்களிற் சிலருக்கு அவர்கள் சொன்ன உவமையையே பெயராக இட்டு வழங்கி வந்தார்கள் என்றால் அதன் பெருமையை அறிவதற்கு இதனினும் சிறந்த சான்று ஒன்று வேண்டுவதில்லையன்றோ.

கட்டுரைப்பொழில் - பெருஞ்சொல்
விளக்கனூர் அ. மு. சரவண முதலியார்

பட்டினத்தடிகள், சிவப்பிரகாச சுவாமிகள், தாயுமானப் பெரியார், இராமலிங்க வள்ளல் முதலிய ஞானிகள் பலரால் பாராட்டி அருந்தப்பெற்ற மணிவாசக வள்ளல் வார்த்த திருவாசகத்தேனைக் குடித்துக் களித்துத் தமிழ் மக்கள் 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்று' உய்யவேண்டும் என்பதே எளியேன் பேரவா.

திருவாசகத்தேன்-தமிழ்க்கடல் இராய.சொ.

பிறமொழிச் சொற்கள் தமிழில் வந்து வழங்கலாகாது என்று தமிழ் இலக்கணம் தடைசெய்யவில்லை. ஆனால் அச்சொற்கள் தமிழ்க்கோலம் பூண்டு தமிழிலே கலந்து கொள்ளுதல் வேண்டும் என்று விதித்தது. பிற நாட்டான் ஒருவன் தமிழனாகக் கருதப்பட வேண்டுமானால் அவன் நடை உடை பாவனைகள் எல்லாம் தமிழ் நாட்டாரைப்போல் இருக்க வேண்டுமல்லவா?

தமிழ் விருந்து -
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

தொழுது உண்ணும் சுவை நிரம்பிய பொருளைவிட, உழுது உண்ணும் சுவையில்லாத பொருளும் இனியது என்பது தமிழர்கொள்கை. சிறிதளவு கூழே பெறினும், அவரவரது முயற்சியாலும் அவ

ாவாது உழைப்பாலும் பெற்ருல், தன் முயற்சியின்றிக் கிடைக்கும் அமிழ்தத்திலும் அது சிறந்தது என்பது தொன்று தொட்டு வரும் தமிழர் கருத்து.

தமிழ்காட்டும் உலகு–
டாக்டர் அ. சிதம்பர நாதன்

மாணவர் கல்வியிலேயே முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டிய பயிற்சியாளராயும், தத்தம் திறமைக்கும் மனப்பான்மைக்கும் ஏற்பப் பிழைப்புவழி தேடும் முயற்சியாளராயும், பட்டறிவும் அகக் கரண வளர்ச்சி நிறைவும் பெருத இளம் பருவத்தாராயும் இருப்பதால் அவர் அரசியற் கட்சிகளிற் சேர்தலோ சேர்க்கப்படுதலோ கல்வி நெறிக்கு மாறும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையும் ஆன கேடாகும்.

தமிழ்வரலாறு–
மொழியறிஞர் தேவநேயப்பாவாணர்

சங்க இலக்கியம் என்ருல் என்ன என்று அறியாதவரும், அந்தத் தொடரைக் கேட்டறியாதவரும் பலர். இந்த நிலை தமிழகத்தில் இனியும் நீட்டித்தல் நன்றன்று சங்க இலக்கியம் என்ருல் எமது எமது என்று பெருமிதத்துடன் எண்ணும் நெஞ்சமும் கூறும் நாவும் இனி மிகுதல் வேண்டும்.

நெடுந்தொகை விருந்து–
டாக்டர் மு. வரதராசன்

தமிழ் மொழி பேசுவோர் வாழும் இடமே தமிழகம்-தமிழ்நாடு. இந்தத் தமிழ்மொழி பிற திராவிட மொழிகள் போல வடமொழி ஒலிகளையெல்லாம் கடன் வாங்காது தன் பழமை தோன்ற இன்றும் நின்று நிலவுகிறது. இதற்குத் தெற்கே இருந்த சிங்கள மொழியும் வடமொழிக்கு இனமாகிவிடத் தமிழ் மட்டும் தன் தனிப்பெருமை குறையாமல் இன்றும் விளங்குகிறது.

தமிழா நினைத்துப்பார்–
டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரன்

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட ஆடவன் பொதுநல வாழ்க்கையில் ஓர் அளவோடு ஈடுபடுதல் வேண்டும். அளவு மிகுதியால் பொதுநலத்தொடர்பான வம்புகளிலும் வழக்குகளிலும் தலையிடின், அவனது செல்வமும் காலமும் அழிந்துவிடும். இங்ஙனம் ஈடுபட்டு அழிந்த குடும்பங்கள் பலவற்றை நமது சமுதாயத்தில் காணலாம். இதனை இல்லறத்தார் அழுத்தமாகக் கருத்தில் இருத்துதல் வேண்டும்.

இல்வாழ்க்கை –
டாக்டர் மா. இராசமாணிக்கம்

கலைஞன் ஒருவன் தான் பெற்ற செல்வத்தினைப் பிறரும் பெறுதல் வேண்டும் என எண்ணுதல் அத்துணை எளிதன்று. ஆனல் தமிழகக் கலைஞர்கள் தம் அளவில் அன்றித் தம்மைப் போன்ற கலைஞர்களும் பெருவாழ்வு வாழ்தல் வேண்டும் என எண்ணினர்கள்.

நோக்கு - பேராசிரியர்
லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

காதல் திருமணமே நாகரிகத்தின் உச்சநிலையாகும். ஆதலின் தொல்காப்பியர் காலத் தமிழகம் நாகரிகத்தால் சிறந்திருந்தது என்று தெளியலாம். காதல் திருமணமே பெண் உரிமையை—ஏன் ஆண் உரிமையையும் நிலைநாட்டக் கூடியது ஆடை அணிகலன் முதலிய வற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையளிக்கும் மன்பதை தம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமையளிக்க ஒருப்படாதது கொடுமையிலும் கொடுமையன்ருே.

தொல்காப்பிய ஆராய்ச்சி -
டாக்டர் சி. இலக்குவனர்

எல்லாவற்றிலும் புதுமையை விரும்புவது தற்கால இயல்பு. பழமை என்று கூறின் உடனேயே சீறிவிழும் இயல்புடையோர் பலர். ஆனல் பழமை அவ்வளவு சுலபமாக நம்மைவிட்டு நீங்கி விடுவதாகவும் தெரியவில்லை. பழமை பாராட்டுவதே மரபின் அடிப்படை.

இலக்கியக்கலை –
பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்

இலக்கியம் என்பது மனிதனைப்பற்றியும் இயற்கையைப் பற்றியும் வெளியாகும் வெறும் சொல்லடுக்கில்லை. மனித வாழ்வு எத்தனை அளவெல்லாம் விரிவடைய முடியுமோ அத்தனை அளவையும்

விளக்கிக் காட்டும் மெய்யுரை. விரித்துச் சொல்வதென்றால் அழகழகான மனோநிலைகள், அரிதரிதான உணர்ச்சிகள், மகத்தான கனவுகள், வாரி அன்ன கருத்துக்கள், ஆழ்ந்தகன்ற சித்தாந்தம், அறிவரிய இலட்சியம் ஆகிய இவைகளைத் தரவல்ல அமுதசுரபி என்றுதான் சொல்ல வேண்டும்.

கவிதையும் வாழ்க்கையும் –
பேராசிரியர் ஆ. முத்துசிவம்

நெறியாகவும் அளவாகவும் உரமாகவும் நாணமாகவும் கற்பாகவும் காமக் கூறுகளைச் செவ்வனம் காட்டும் ஓர் உலக இலக்கியம் தமிழிற்றான் உண்டு. அதுவே அகத்திணை. இத்திணைக்கல்வி பருவம் வந்துற்ற நம்பியர் நங்கையர்க்கெல்லாம் வேண்டும் வேண்டும். அன்னவர் திருமணம் நறுமணம் பெறும், அக்காதலர்தம் வாழ்வில் உள்ளப்பூசல் இராது, ஊடற் பூசலே இருக்கும்; வெங்கட்சினம் இராது, செங்கட் சினமே இருக்கும்.

வள்ளுவம்-டாக்டர் வ. சுப. மாணிக்கம்

தேசிய ஒருமைப் பாட்டுக்குத் தடையாக இருப்பவை சாதி மத வேறுபாடுகளேயாம். அந்த வேறுபாடுகளை அழித்து ஆன்மநேய அடிப்படையில் சமுதாய ஒருமைப்பாடு கண்டாலன்றி அரசியல் வழிப்பட்ட தேசிய ஒருமைப்பாடு சாத்தியமில்லை.

வள்ளலார்கண்ட ஒருமைப்பாடு –
சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

முரடர்களின் தாக்குதலை அழித்து ஒழிக்க எதிர்த்து நிற்பதைவிட ஒதுங்கி நிற்பது நல்லது. வெள்ளப் பெருக்கின் தாக்குதலை அழித்து ஒழிக்க எதிர்த்து நிற்பதைவிட ஒதுங்கி நிற்பது நல்லது வெள்ளப் பெருக்கின் தாக்குதலிலிருந்து எப்படிஉயிர் தப்பினீர்கள் என்று ஆற்றங்கரையில் நிலைத்து நிற்கும் நாணற் செடிகளை நோக்கி வேரோடு வீழ்ந்துவிட்ட பனிய மரங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

அறிவுக்கு உணவு - முத்தமிழ்க்காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதன்

தொல்காப்பியம் தமிழர் வாழ்வென்னும் தண்டாமரைக் குளத்தின் தகராத் தடங்கரை! ஒப்புயர்வில்லா ஒழுக்கக் களஞ்சியம்! பழந்தமிழ் மக்களின் வரலாற்றுக் கண்ணாடி. நமக்காக நம் முன்னையோர் ஈட்டிவைத்த எய்ப்பினில் வைப்பு! பழமைக்குப் பழமை! புதுமைக்குப் புதுமை!

தொல்காப்பியர் காலத் தமிழர் –
புலவர் குழந்தை

மனிதன் உலகில் வாழப்பிறந்தவன். அவ்வாறு வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுபவன பல. உடல் உரம் பெறுவதற்கு உணவும், உலகில் உலவுதற்கு உடையும் தேவை. இவை புற வாழ்வுக்கு உரியன. ஆனால் மனிதன் மனிதனாக வாழ வேண்டிய சகவாழ்வுக்குச் சில நல்ல பண்புகள் தேவை. அவற்றுள் மிக முக்கியமானது அன்பு.

வையைத்தமிழ் –
பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

தமிழகத்தின் இன்றையநிலை என்ன? பலர் தங்கள் பெயர்களைக் கூடத் தமிழில் பிழையின்றி எழுத இயலாதவர்களாய் இருக்கிறார்கள். ரங்கநாதன் அல்லது அரங்கநாதன் என்று எழுத வேண்டுவதை ரெங்கநாதன் என்று பலர் எழுதுகின்றனர். வேங்கடசாமி என்று எழுத வேண்டிய பெயரை வெங்கடசாமி என்றும் வெங்கிடசாமி என்றும், வேங்கடராமன் என்று எழுத வேண்டிய பெயரை வெங்கடராமன் என்றும் வெங்கட்ராமன் என்றும், வேங்கடாசலம் என்று எழுத வேண்டியதை வெங்கடாசலம் என்றும் வெங்கிடாசலம் என்றும், சீனிவாசன் என்று எழுத வேண்டியதை சீனிவாசகன் என்றும் தவறாக எழுதுவதைப் பார்க்கின்றோம். இந்த நிலையில் தமிழனுக்குத் தமிழ்த் தேர்ச்சி வேண்டுமா என்று ஒரு சிலர் வீண்வாதம் புரிகின்றனர். தமிழர்களாய் இருந்தாலும் தமிழில் ஓரளவு தேர்ச்சி பெற்றால்தான், இவர்கள் பிழையின்றித் தமிழ் எழுத முடியும்.

நல்ல தமிழ் எழுத வேண்டுமா?.
பேராசிரியர் அ. கி. பரந்தாமனார்

இறைவன் என்னுஞ் சொல் யாண்டும் பொருள்கள் தோறும் நீக்கமற நிறைந்து விளங்குபவன் என்னும் பொருளுடைய தாய்க் கடவுளைக் குறித்து வழங்கும் காரணப் பெயராகும். எனவே எல்லாப் பொருள்களிலும் நீக்க மற நிறைந்து அவற்றை இயங்கி நின்று எல்லாத் தத்துவங்களையும் கடந்து விளங்கும் முழு முதற் பொருளையே கடவுள். இயவுள், இறைவன் எனப் பல பெயர்களாலும் தமிழ் முன்னோர்கள் போற்றியுள்ளார்கள் என்பது நன்கு துணியப்படும்.

தொல் காப்பியம் - க. வெள்ளைவாரணனார்

தமிழ் நாட்டின் தனித்த பண்பு சமயச் சண்டையில் ஈடுபடாது பல்வேறு சமயங்களையும் உவப்புடன் ஒப்பக் கருதும் பண்பாடு ஆகும். இது தமிழர்களுக்கு இயற்கையிலேயே உண்டு எனினும் இடையில் பல சந்தர்ப்பங்களில் சமய வெறியும் பூசல்களும் எழுந்தன. ஆனால் மறுபடியும் இன்று பிற சமய வெறுப்பின்றிச் சமயம் வளர்க்கப் பெறுகின்றது. சமயத் துறையில் வெறுப்பும் காழ்ப்புங் கொள்ளாது பல் வேறு சமயங்களையும் ஒப்பக் கருதும் இன்றைய மறுமலர்ச்சி காலத்திற் கேற்ற மறு மலர்ச்சி : தேவையான மறு மலர்ச்சி.

சமய மறு மலர்ச்சி - குன்றக்குடி அடிகளார்

இந்திய நாட்டின் வரலாறு எழுதும் அறிஞர் பலரும் வடநாட்டின் வரலாறு கூறுவதிற் பெரும் பகுதி செலவு செய்வர்; தமிழ் நாட்டிற்கு வருங்கால் அவர் கட்டு இடமும் குறுகி விடுகின்றது. முடிவில் தமிழ்நாட்டு இளைஞர்கட்குத் தமிழ் நாட்டு வரலாறு தொடர்புற அறிந் திருக்க வேண்டிய அமைதி இல்லையாய் விட்டது.

தமிழ் நாவலர்சரிதை - முன்னுரை
ஔவை. சு. துரைசாமிபிள்ளை